597

# நடமன
# நாயகவாக்கியம்

Q7:458
N29
78450

நபிகள்

# நாயக வாக்கியம்

# நபிகள்

# நாயக வாக்கியம் 451

(சரித்திரச் சுருக்கத்துடன்)

"தாருல் இஸ்லாம்" ஆசிரியர்

பா. தாவூத்ஷா சாஹிப், பி. ஏ.,

அவர்களால் தயாரிக்கப்பட்டது.

மூன்றும் பதிப்பு

பிரசுராலயம் :

தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை,

73, தம்புசெட்டித் தெரு,

சென்னை.

விலை] 1929 [அணா 14

First Edition First Part Printed in 1923
Second Edition Reprinted in 1925
First Edition Second Part Printed in 1925
Third Edition First and Second Parts
Reprinted in 1929

*All Rights Reserved*

# விஷய அட்டவணை

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | ... | vii |
| நபிகள் நாயக சரித்திரம் | ... | 1 |
| நபிகள் நாயக வாக்கியம் 451 | ... | 38 |
| விஷய சூசிகை | ... | 289 |
| விளம்பரம். | | |

# முன்னுரை

தீனுல் இஸ்லாமென்னும் இச் "சுக சாந்தி" மார்க்கத்தில் நபி முஹம்மத் முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்களுடைய திரு வாயினின்றும் வெளியான உயர் தனி வாக்கியங்களை எம் முஸ்லிம்கள் இவ் வுலக முழுதும் ஆண்டவனருளப் பெற்ற குர்ஆன் ஷரீபென்னும் புர்க் கானுல் மஜீதுக்கு அடுத்தபடியாகக் கொள்ளுகின்றனர். ரஸூலுல்லாவின் சொற்களும், செயல்களும், அவர்க ளால் அனுமதிக்கப் பட்டவைகளும் இவ்வர்க்கத்தில் சாருமென்பர். ரஸூல் நாயகத்தின் ஸல் குணநிசயமே குர் ஆன் ஷரீபாயிருந்ததென்று பீபி ஆயி ஷா ரலி அவர்கள் கூறியிருப்பதேபோல் அந்த அல்லா(ஹ்)வின் திருத்தூதரவர் களின் ஹதீது ஷரீபனைத்தும் எமது

திருமறையின் திவ்ய வியாக்கியான மாகவே அமைந்து கிடக்கின்றன வென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. முஸ்லிம்களின் மத, சமூக, ராஜீய, ஆத்மார்த்த சம்பந்தமான நடை முறைகளனைத்திற்கும் குர்ஆன் ஷரீபும், நாயகவாக்கியங்களும், நாயகத்தின் நடபடி (ஸுன்னுக்)களும், இம்மூன்றி னின்றும் அநுமானத்தால் பெறப்படுவனவுமே மூலாதாரங்களாய் முளைத்து நிற்கின்றன. எனினும், இறைவனது சொல்லுக்குமுன் நம்நபிகள்பெருமானின்ஸல் திருவாக்கியம் அடுத்தபடியாகத்தான் நிற்கின்றனவென்று இதற்குமுன் எடுத்துக் கூறினோம். ஏனெனின், தங்களுடைய சொல்லுக்கும் இறைவனது கட்டளைக்கும் ஏதேனும் வேற்றுமை காணப்படின், அதுகாலை ஆண்டவனது கட்டளைக்கே தங்கள் சொல்லினும்

மேம் பட்ட கௌரவத்தைக் கொடுக்க வேண்டுமென்று நபிகள் திலகம் நன்கு நவின்றருளியுள்ளார்கள் (நா. வா. 41, 177). எனவே, பொருத்தமானவரை இறைவனது திரு வசனத்துக்கு இரஸூலுல்லா(ஹ்)வின் திருவாக்கியம் ஒரு பெரிய வியாக்கியான மாகவே அமைந்து கிடக்கின்றன வென்பது எங்கள் ஸுன்னத் வல் ஜமாஅத்தாரின் முழு நம்பிக்கையாகும்.

இவ்வாறு இரஸூல் நாயகத்தின்ஸல் சொற்களும் செயல்களும் புர்க்கானுல் மஜீதுக்கோர் ஆழிய வியாக்கியானமாயிருப்பதுடன், அவை யனைத்தும் அவர்களுடைய சரித்திரத்தையும் குணநிசயத்தையும் அறிவித்தற்குரிய உரைகல்லாகவும் காணப்படுகின்றன. நபிகள் பெருமானின்ஸல் சொற்களுக்கும் செயல்களுக்கும், ஏனைய மதத்

தலைவர்களின் சொல் செயல்களுக்கும் இடையில் அதிகமான வித்தியாச முண்டு: ஏனையோரின் சொல்லும் செயலும் அவர்களுடைய சிஷ்யர் களால் அனுஷ்டிக்கப்படல் வேண்டு மென்னும் கட்டாயம் ஏற்படாதவரை அவையனைத்தும் சர்வ சிலாக்கியமா கவே போற்றப்பட்டுவரும். அவற் றின் அனுஷ்டான முறைகளைப்பற்றி வினவுவோமாயின், அந்தப் பரம சிஷ் யர்க ளெல்லோரும் தலை குனிந்து மௌனஞ் சாதித்துவிடுவர். ஆனால், நம் நபிகள் நாதரின் ஸல் சொல்லும் செயலும் எம் முஸ்லிம்களுக்குள் ஒரு முக்கியமான சட்டமாகவே அனுஷ் டிக்கப்பட்டு வருகின்றன. எனவே, இத்தகைய சொல்லுஞ் செயலும் முஸ் களின் நம்பிக்கையையும் நடை முறை களையும் எத்துணை மட்டும் சீர்திருத்

தற்குரியன வென்பதை இம்மதத்தி விருப்பவரே செம்மையாய்த் தெரிந்து கொள்ளுதல் சாலும்.

ரஸூலுல்லா(ஹ்)வின் ஹதீது ஷரீபு ஒவ்வொன்றும் இஸ்னத் ம(த்)தன் என்னும் இருபிரிவினை யுடையதா யிருக்கும். இவற்றுள் இஸ்னு தென்பது ஹதீதின் ஆதார பாகத்தைக் குறிக்கும். அஃதாவது, ரஸூல் நாயகத்தின் திருவாயினின்று ஒரு ஹதீது வெளியானதை நேரில் கேட்டவர் முதற்கொண்டு இறுதியில் அது கிரந்த ரூபமாய் வெளிப்படுத்தப் பட்டவரை இடையில் கர்ண பாம்பரையாய்ச் சொன்னவர்களுடைய நாம தேயங்க ளெல்லாம் சங்கிலி போல் தொடர்ச்சி யாய்க் காணப்படுவது. எனவே, "ஹதீதுஸ் ஸஹீஹ்" என்னப் படுவதில் இஸ்னதிலுள்ள ஒவ்வொரு

"ராவி"யும் பக்தி பூர்ணமானவராக வும், குண இழுக்கில்லாதவராகவும் இருந்து தீருதல் வேண்டும். இஸ்னு தின் தொடர்ச்சியில் குறைபாடுகள் காணப்படின், அப்படிப்பட்ட ஹதீது களுக்கு அத்துணை மதிப்பிருப்பதில்லை. ஹதீதின் இரண்டாவது பாகமாகிய "ம(த்)தனில்" இரஸூலுல்லா(ஹ்)வின் சொல்லேனும் செயலேனும் காணப் படும். அஃதாவது, அதுவே ஹதீதின் "அசல் பகுதி" யாகும். அத்தகைய ம(த்)தனின் சாரமே இந்நூலில் காணப் படுவது.

ஆதியில் இந்த ஹதீதுகளெல்லாம் குர்ஆன் ஷரீபே போல் எழுத்து மூல மாக எழுதிவைக்கப் படவில்லை. குர் ஆன் ஷரீபு மட்டுமேதான் இரஸூல் நாயகத்தின் கட்டளையின் பிரகாரம் எழுத்து மூலமாக எழுதிவைக்கப் பட்

டது. ஆனால், வஹீயின் (மத்லுவ்) மூலம் வெளிப்படுத்தப்பட்ட குர்ஆன் ஆயாத்துக்களுக்கும், தங்களுடைய சொந்த (கைரெ மத்லூவ்) ஹதீதுகளுக்கு மிடையில் வேறுபாடு காணப்படாது இரண்டும் ஒன்றாகக் கலந்து போகுமென்னும் சந்தேகத்தினால் குர்ஆன் திருவாக்கியங்களை மட்டும் எழுத்து மூலமாக எழுதி வைக்குமாறும், ஹதீதுகளையெல்லாம் மனத்தினால் மட்டும் மனனம் செய்து கொண்டால் போதுமென்றும் இரஸூலுல்லா ஸல் அவர்களே அக்காலத்தில் கட்டளையிட்டிருந்தார்கள். ஆதலின், நபிகள் பெருமானின் காலத்தில் இந்த ஹதீதுகளெல்லாம் எழுத்து மூலமாய் எழுதப்பட்டதில்லை. எனவே, இரஸூலுல்லா(ஹ்) அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து ஒரு நூறு வருட கால

மட்டும் இந்த ஹதீதுகளெல்லாம் கர்ண பாம்பரையாகவே ஒரு தலை முறைக்குப் பின் மற்ருெரு தலை முறையாய் வந்துகொண்டிருந்தன. அதன் பிறகு தான் இந்த ஹதீதுகளெல்லாம் எழுத்து மூலமான கிரந்த ரூபத்தில் வரி வடிவில் கொண்டுவரப் பட்டன. இவ்வாறு தொகுக்கப்பட்ட ஹதீது சம்பந்தமான கிரந்தங்கள் 1,465 என்று "இதாபுன் நுபலா"வின் ஆசிரியர் கூறுகின்ருர். ஆயினும், ஸுன்னி முஸ்லிம்கள் அவற்றுள் ஆறுகிரந்தங்களையே மகா மெய்யான கிரந்தங்கள் (ஸஹீஹ்ஸித்தா) என்று தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கின்றனர். அவை, புகாரீயின் (இவர் ஹிஜ்ரி 194-ம் ஆண்டில் பிறந்து 256-ல் மரணமாயினர்) கிரந்தமும், முஸ்லிமின் (இவர் ஹி. 204-ம் ஆண்டில் ஜனித்து 261-

ல் மரணமாயினர்) கிரந்தமும், அபூ தாவூதின் (இவர் ஹி. 202-ம் வருஷத்தில் தோன்றி 275-ல் மரணமாயினர்) கிரந்தமும், இப்னுமாஜாவின் (இவர் ஹி. 209-ல் பிறந்து 293-ல் மரணமாயினர்) கிரந்தமும், திர்மிதீயின் (இவர் ஹி. 209-ல் பிறந்து 279-ல் மரணமாயினர்) கிரந்தமும், நஸயீயின் (இவர் ஹி. 215-ல் ஜனித்து 303-ல் மரணமாயினர்) கிரந்தமுமாகும். இவ்வாறு பெரிய கிரந்தங்களையும் ஸுன்னி முஸ்லிம்கள் "அல் குத்புஸ் ஸித்தா" என்று வழங்கி வருகின்றனர். இவற்றுள் முதலிரண்டும் "ஸஹீஹ்" என்றும், மற்றைய நான்கும் "ஸுனன்" அல்லது "ஹஸன்" என்றும் வழங்கப்படும். இவ்வாறனுள் இறுதியிரண்டையும் விடுத்து மிகுதி நான்கையே ஷீஆ முஸ்லிம் சோதரர்

கள் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

மேற்கூறிய ஆறனுள் அனேக ஹதீதுகள் ஒரு கிரந்தத்தில் காணப்படுவது போலவே மற்றொரு கிரந்தத்திலும் காணப்படுவதுண்டு; ஆதலின், இவ்வாறையும் அடிப்படையாகக் கொண்டு, அவற்றிலுள்ள ஹதீதுகளுள் இரட்டித்து வருவனவற்றையெல்லாம் விடுத்து, ஒவ்வொரு ஹதீஸையும் ஒரே முறையே சொல்லக்கூடிய ஓர் ஆதாரமான உயரிய கிரந்தத்தைச் சுருக்கித் திரட்டி வெளிப்படுத்த வேண்டுமென்னும் முயற்சியானது பற்பல காலமாய்ப் பற்பல பெரியார்களுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. அவ்வாறு செய்து வரப்பட்ட முயற்சிகளுள் "மிஷ்காத்துல் மஸாபீஹ்" என்னும் தொகுதியானது ஒரு சிறந்த இணையற்ற கிரந்தமாகும். எனவே,

அந்த மிஷ்காத்தி லிருந்துதான் இச் சிறுநூல் தொகுக்கப்பட் டுள்ளது. ஆதியில் "மஸாபீஹ்" என்று மட்டும் பெயர் வைக்கப்பட்டிருந்த இந்தக்கிரந் தமாகிறது பகுதாதில் வசித்திருந்த இமாம் அபூ முஹம்மத் அல் ஹுஸைன் இப்னு மஸ்ஊத் அல் பிராரீ என்னும் பெரியாரால்(இவர் ஹி. 516-ல் காலமாயினர்) தொகுக்கப்பட்டது. அதில் 4,484 ஹதீதுகள் காணப்பட் டன. அவற்றுள் 2,434 ஹதீதுகள் ஸஹீஹாகவும், ஏனையவெல்லாம் ஹஸனாகவு மிருந்தன. இந்த இமாமவர்கள் மேற்கூறப்பட்ட ஆறு பெரிய கிரந்தங் களையும் தங்களுக்கு வேண்டிய ஆதா ரங்களாக எடுத்துக் கொண்டதுடன், தாரகுத்னி, பைஹ(க்)கீ, தாரமி, ரஜீன் முதலிய கிரந்தங்களையும் தழுவியே தங்கள் மஸாபீஹை எழுதி முடித்தார்

கள். ஹிஜ்ரி 737-ல் ஷெய்க் வலீயுத்தீன் அபூ அப்துல்லா மஹ்மூத் என்னும் பெரியார் மஸாபீஹைப் பழுது பார்த்துச் செப்பஞ் செய்து அதன் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வோர் அத்தியாயத்தை அதிகமாகச் சேர்த்து வைத்தார்கள். இவர்கள் மஸாபீஹி லுள்ள ஒவ்வொரு நாயக வாக்கியமும் எந்த எந்த மூலத்திலிருந்து எடுக்கப்பட்டதென்பதையும் சேர்த்து இந்தக் கிரந்தத்தின் மதிப்பை அதிகப் படுத்தினர்கள். இவ்வாறு திருத்தியமைக்கப் பட்ட கிரந்தமே இதுகாலை "மிஷ்காத்துல் மஸாபீஹ்" என்று வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மிஷ்காத்திலிருந்து மகா முக்கியமான 451-ஐ மட்டும் மௌலானு மௌலவீ (கல்கத்தா) அப்துல்லா அல் மாமூனுஸ் ஸுஹ்ராவர்தீ, எம். எ, எம்.

ஆர். ஏ. எஸ்., என்னும் பெரியார் (இவர் இங்கிலாந்தில் முன்னொரு சமயம் முஸ்லிம் பிரசாரகராக இருந்த காலத்தில்) ஆங்கிலத்தில் "The Sayings of Muhammad என்னும் பெயருடன் வெளியிட்டார். இவரது ஆங்கில நூலை ஆதாரமாக வைத்தே ஆதியில் "தத்துவ இஸ்லாத்திலும்" "தாருல்இஸ்லாத்திலும்" இச்சிறு நூலை வெளியிடலானேன். பிறகு 1923-ல் முதன் முதல் இதையொரு தனிக் கிரந்தமாக வெளியிடத் துணிந்தக்கால் இதனை மூலக்கிரந்தத்துடன் ஒத்திட்டுத் திருத்தியே வெளியிட்டேன். பிறகு 1925-ல் இதன் இரண்டாம் பதிப்பு வெளியிடப் பட்டது. இப்பொழுது இதன் மூன்றாவது பதிப்பு வெளியாகுஞ் சமயம் "மிஷ்காத்தின்" விருத்தாந்தத்தையும் இதனுடன் ஒருவாறு

சேர்த்துவிடுவது மிக்க சிறப்புடைத்தா யிருக்குமெனக் கருதி இச்சிறிய முன்னுரையை ஈண்டு எழுதிச் சேர்க்கலானேன். இதன் உதவிகொண்டு நம்முஸ்லிம்நேயர்கள் ரஸூலுல்லா(ஹ்)வின் ஸல் ஹதீது ஷரீபுகளின் பெருமை இன்னதென்பதை ஒருவாறு உணர்ந்துகொள்வார்களென்றே எண்ணுகிறேன். எனவே, இரஸூல் நாயகத்தின் திருவாக்கியங்களை புணர்ந்து, அவற்றின் கருத்துக்களைப் பின்பற்றி நம்முஸ்லிம்களனைவரும் இத்தரணியில் ஒழுகிவரப் பிரயத்தனப் படுவார்களென்றே அதிவிநயமாய்க் கேட்டுக் கொள்வதோடு அடியேனின் இச்சிறு முகவுரையையும் முடித்துக் கொள்ளுகிறேன்.

வஸ்ஸலாம். இங்ஙனம் :

24-5-29 டா. தாவூத்ஷா(ஹ்)
சென்னை. இஸ்லாத்தின் ஊழியன்.

بسم الله الرحمن الرحيم
نحمده ونصلى على رسوله الكريم

# நபிகள் நாயக சரித்திரம்

பூவுலகின் கண்ணுள்ள பற்பல காரியங்களையும் ஊன்றி நோக்குங்கால், இக்காலத்தில் எமது நபிபெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமானது அதிக பக்தி விசுவாசத்துடன் கற்கப்பட வேண்டிய ஓர் உண்மைச் சரிதையாக அமைந்திருக்கிறது. மேல் நாடுகளில் தற்போது நிகழ்ந்துவரும் விஷயத்தைக் கவனிக்குங்கால், ஐரோப்பா கண்டத்தில் வல்லரசுகளாயுள்ளவர்கள் எமது

இஸ்லாத்தின் உண்மையை உள்ள வாறே உணர்ந்துகொள்ள வேண்டிய அவசியகம் நன்கு புலனாகின்றது. இக் காலத்தில் மேல் நாட்டாரும் கீழ்நாட் டாரும் இஸ்லாத்தைப்பற்றி ஓயாமல் பேசிக்கொண்டே யிருக்கின்றனர்; ஆனல், அவர்களெல்லோரும் எமது நபிபெருமானாரின் பெருமை தங்கிய சரித்திரத்தையும் உள்ளபடியே உண ர்ந்து கொள்வார்களாயின், அவர்கள் இஸ்லாத்தின் பெருமையையும் செவ் வனே உணர்ந்துகொள்ள ஹேதுவுண் டாகும். மேலும் கிறிஸ்தவ மதத்தினர் இஸ்லாத்தையே தங்களுடைய பல மான எதிரியென்று கருதுவதாலும், இம்மதத்தை ஸ்தாபித்தவர் மகா கொடியவரென்று அவர்கள் தப்பாக எண்ணி யிருப்பதாலும் அம் மா பெரிய மகானின் சரித்திர உண்மை

யை உள்ளபடியே எல்லோரும் ஒருங்கே நன்குணர வேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. இஸ்லா மார்க்கத்தை எற்படுத்திய மகான் மகா ஸௌலப்பிய குணங்களை யெல்லாம் வகித்திருந்ததேபோல், அவர்களால் எற்படுத்தப்பட்ட இம் மார்க்கமும் மகா இலேசாகவே அமைக்கப்பட்டிருப்பதால்தான் உலகத்திலுள்ள எனைமார்க்கங்களைக் காட்டிலும் எமது இஸ்லா மார்க்கமானது புத்திக்கும் யுக்திக்கும் பொருத்தமுள்ளதாக அமைந்திருக்கிறது. இக்காரணத்தால்தான் இவ்வுலகத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் எமது தீனுல் இஸ்லாத்தில் இன்றைக்கும் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். இதை யாராலும் தடுக்க முடியவில்லை.

இப்படிப்பட்ட இஸ்லா மார்க்கத்

தின் இயல்பை உள்ளபடியே உணர்ந்து கொள்வதற்கு இப்பொழுது எமது திருநபி யவர்களின்ஸல் சரித்திரத்தைச் சுருக்கி ஈண்டு எழுதுவாம். உலகத்திலுள்ள மார்க்கங்களுள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தலைவர் இருந்தே அந்த அந்த மார்க்கத்தை ஸ்திரப் படுத்தியிருக்கின்றனர். வேறு மார்க்கங்களை நிலைநாட்டிய மகான்களின் சரித்திரத்தில் காணப்படக்கூடிய "சரித்திர சம்பந்தமான சந்தேகங்கள்" (hisotrical doubts) எம்பெருமானாரின் ஜீவித சரிதையி லில்லை. நபிகள் பெருமானார்ஸல் அவர்களுடைய சரித்திரத்தின் ஒவ்வோர் அம்சமும் மற்றையோரின் சரித்திரங்களைப்போ லில்லாமல் அதி நுட்பமாய்க் குறித்து வைக்கப் பட்டிருக்கின்றது. ஆதலின், எம்பெருமானாரின் சரித்திரமானது மகா ஆச்ச

ரியமான ஒரு பெருங் காதையாகவே அமைந்திருக்கிறது. மனித கோடிக ளுக்கு இவர்களால் அளவிடற்கரிய பெரும் பிரயோஜன மெல்லாம் உண் டா யிருக்கின்றன. "யாரிடத்திலிரு ந்து மன்பதைக்கு மகாபெரிய நன்மை யுண்டாகின்றதோ, அவர்தாம் உங்க ளுக்குள் சர்வ சிலாக்கியமானவர்," என்னும் பெருமானார் திருவாக்கியமா னது அவர்களுக்கே அதிக பொருத்த மாயிருக்கின்றது.

எம்பெருமானார் முஹம்மது முஸ்த பா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவவதாரம் புரி ந்த வருஷமாகிய கி. பி. 570-ம் ஆண் டுக்குரிய கிறிஸ்தவ ஆறுவது நூற் றாண்டில் அரபு நாடுமட்டு மல்லாமல், மற்றுமுள்ள இவ்வுலக முழுதுமே முழு மௌட்டியத்திலும், அதிக அரா

ஜீகப் பாழிலும், அளவிடற்கரிய அந் தகார விக்கிரக ஆராதனையிலும் மூழ் கிக்கிடந்தது. கூடாரங்களிலும் வீடா ரங்களிலும் வசித்துக்கொண்டு பாலை வனங்கள் தோறும் திரிந்துவந்த அந்த அரபிகள், நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாத்தின் மூலத்திலிருந்து நபி இஸ் மாயீல் அலைஹிஸ்ஸலாத்தின் வம்ச வழியாய் வந்தவர்களா யிருந்தும், அவர்கள் நக்ஷத்திரங்களையும், இன்னு ம் பற்பல இயற்கைப் பொருள்களையும், கற்களாலும் கட்டை முதலியவற்றா லும் செய்யப்பட்ட விக்கிரகங்களையும் வணங்குகிறவர்களா யிருந்தார்கள். அக்காலத்திய அரபிகளின் பழக்க வழ க்கங்களெல்லாம் மகா அருவருக்கத் தக்கவையா யிருந்தன. கி. பி. ஆறாவ து நூற்றாண்டுக்கு 500 வருஷங்களுக்கு முன்னிருந்தே பல எஹூதிகள்

(யூதர்கள்) அரபு நாட்டுக்குள் குடியேறி யிருந்தனர். கிறிஸ்தவர்களும் பற்பல பகுதிகளில் தங்களுடைய மதத்தைப் போதித்துவந்தனர். அந்த யூதிகளும் இந்தக் கிறிஸ்தவர்களும் நூற்றுக் கணக்கான வருஷங்கள் வரை அரபுநாட்டில் பாடுபட்டும், அத் தேயத்தின் அனுசாரத்தையும் அன்னாரின் மௌட்டிய விக்கிரக ஆராதனையையும் அவர்களால் ஒழிக்க முடியவில்லை. மேற்கூறிய இரண்டு மதங்களல்லாமல் இன்னும் பல சிறுசிறு மார்க்கங்களும் ஆங்காங்கு நிலைகொண்டிருந்தன. இப்படிப்பட்ட மார்க்கத் தடுமாற்றத்துக் கிடையில் ஏக தெய்வக்கொள்கையை ஒருவாறு போதித்து வந்த சன்னியாசிகளாகிய ஹனீபுகள் என்னும் சில சாதுக்களும் அந் நாட்டில் ஆங்காங்கே காணப்பட்டார்

கள். அரபுதேச முழுதும் கேடுகெட்டுக் கிடந்த அக்காலத்தில் இந்த ஹனீபுகள் இருந்ததனுலாவது ஏகதெய்வக் கொள்கை யென்பது சிறிது சிறிது ஆங்காங்கே காணப்பட்டது; ஆனால், இந்த ஹனீபுகளாலும் முழு அரபு நாட்டையும் ஒழுங்குசெய்ய முடியவில்லை. ஆதலின், அக்காலத்தில் அரபு தேசமும், இன்னும் இதர தேசங்களும் இருந்த கேவலமான நிலைமையை நோக்கும்போது, அந்த ஆருவது நூற்றுண்டில் ஒரு திருநபியானவர் அவதரிக்க வேண்டியது அத்தியாவசியமானதாகக் காணப்பட்டதென்றே கூறலாம். தௌராத்திலும் இன்ஜீலிலும் சொல்லப்பட்ட இறுதி நபியானவர் "பாரான்" என்னும் அரபுதேசத்திலேயே அவதரிக்க வேண்டியதுதான் அவசிய மெ

ன்று எல்லோரும் எதிர்நோக்கிய வண்ணமாகவே காத்திருந்தார்கள். அப்படிப்பட்ட நபிதான் ஒரு புதிய சீர் திருத்தத்தை இவ்வுலகுமுழுதும் உண்டு பண்ணத்தக்க பழைய தீனுல் இஸ்லாம் என்னும் தொன்று தொட்ட மார்க்கத்தை நிலைநிறுத்துவாரென்றும் திடமாக எண்ணினார்கள். அக்காலத்திலிருந்த அக்கிரமங்களையும் அனுசாரங்களையும் ஒழிப்பதற்கு அவர்கள் எதிர்பார்த்திருந்த, தீனுல் இஸ்லாத்தை நிலை நாட்டுவதற்கு வேண்டிய தகுந்த அவசியம் ஏற்பட்டு விட்டதனால் அப்பொழுதே எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவவதாரம் செய்தார்கள்.

எம்பெருமானார் அவர்கள் இவ்வுலகில் அவதாரம் செய்யு முன்னரே

அவர்களுடைய தந்தையாரான அப துல்லா அவர்கள் கால கதியால் தேகவியோகமாய்ப் போனார்கள்; நபிகள் நாயகம்ஸல் ஆறு வயதான சிறு குழந்தையா யிருந்த போதே அன்னாரின் தாயார் ஆமினு அம்மாளும் இறந்து போனார்கள். தாயும் தந்தையுமில்லாத எமது திருநபியவர்கள் பிறகு தங்களுடைய பெரிய தந்தையாராகிய அபூத் தாலிப் அவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தார்கள்; அபூத்தாலிப் என்பவர் தீனுல் இஸ்லாத்தைப் பகிரங்கமாய் ஒத்துக்கொள்ளா விட்டாலும், தம்முடைய ஜீவதசை முழுதும் எம்பெருமானரின் வேலையில் அதிக கரிசனமும் அன்னார்மீது அளவிடற் கரிய அன்பும் பாராட்டி வந்தார்கள். நம் ரஸூல் நாயகமவர்கள் பால்யத்தில் ஆடுகளை மேய்த்துக்கொண்டும், பிறகு

அபூத்தாலிபின் வர்த்தகத்தில்சேர்ந்து பாடு பட்டுக்கொண்டும் யௌவன பருவம் வரையில் ஏழ்மைத் தனத்திலேயே யிருந்து வந்தார்கள். நபிபெருமானுக்கு[ஸல்] வயது இருபத்தைந்து ஆன போது அபூத்தாலிபின் ஸிபாரிஷின் மேல் ஒரு பணக்கார விதவையான கத்தீஜா[ரலி] அவர்களிடம் ஒட்டகம் ஓட்டும் தொழிலில் எம்பெருமானுர் அமர்ந்து, அம்மாதின் வியாபார சம்பந்தமான*கார்வானை ஷாம் (ஸீரியா) தேசத்துக்குக் கொண்டு போனார்கள். நபிகள் பிரான் அந்த வியாபாரத்தில் அடைந்து வந்த லாபத்தைக் கண்டும், அன்னரின் சாமுத்திரகா லக்ஷணத்தை நோட்டமிட்டும் அவர்களுக்கு கத்தீஜா நாயகம்[ரலி] மனப்பூர்வமான

* கார்வான்-வர்த்தக நிமித்தம் செல்லும் ஒட்டகக் கூட்டம்.

மனைவியாக அமர்ந்து விட்டார்கள். இவ்வாறு ஒரு தனிகரான விதவையை விவாகம் செய்துகொண்ட நிமித்தம் நபி பெருமானார்^(ஸல்) இகத்துக்குரிய தக்க அந்தஸ்தையும், மிக்க திரவியப் பெருக்கத்தையும் அடைந்தார்கள். ஆனால், அதற்குமேல் அவர்கள் வியாபார விஷயத்தில் தங்களுடைய நாட்டத்தை அதிகம் செலுத்தவில்லை. தீன் (பாரமார்த்திக) விஷயத்தில் தங்களுடைய முழுக் கவனத்தையும் செலுத்த ஆரம்பித்து விட்டதால், அவர்கள் இவ்வுலகுக்குரிய வியாபாரத்தை அதற்கப்பால் சிறிதும் போற்றவில்லை. "தன்னை யுணர்ந்தவன் தன் தலைவனை யுணர்வான்," என்று அவர்கள் திடமாக எண்ணியிருந்ததனால், இவ்வுலக வியவகாரத்தையே ஒரு பொருளாயெண்ணாமல் பாரமார்த்த விஷயத்தில்

தங்கள் முழுநோக்கத்தையும் செலு த்திவிட்டார்கள். தங்களுடைய வாழ் நாளின் பெரும் பகுதியைத் தனிமை யான ஏகாந்தத்தில் செலவு செய்தார் கள். நாற்பது பிராயம் வரையில் அல் லும் பகலும் மக்கமா நகருக்கருகி லுள்ள ஹிரா என்னும் மலைக் குகையில் தனித்திருந்து விழித்திருந்து தவம் புரிந்து வந்தார்கள். அல்லும் பகலும் அகோர தவம் புரிந்து வந்ததனால் இறுதியில் ஆண்டவனருளால் நபிப் பட்டத்தை (நுபுவ்வத்தை)ப் பெற்றுக் கொண்டார்கள்.

நபிகள் பெருமானாருக்குஸல் முதன் முதல் நுபுவ்வத்து வந்தபோது அவர் களுக்குப் பிராயம் நாற்பது. நபிப் பட்ட மென்பது, அவர்கள் புராதன தீனுல் இஸ்லாமென்னும் ஏக தெய் வக் கொள்கையை ஸ்திரப்படுத்தி,

மனிதர்களுடைய அனுசாரங்களையும் அருவருப்பான செய்கைகளையும் போக்கி, அவர்களுடைய குருட்டுத் தனமான மூடக்கொள்கைகளை யெல்லாம் ஒழித்து, விலக்கலை நீக்கி ஏவலை உறுதிப் படுத்திய தாகும். புத்திக்குப் பொருத்த மில்லாத பலதெய்வக் கொள்கையை வேரறுப்பாய் அறுத்து ஏக நாயகக் கொள்கையை நிலைநாட்ட வேண்டியதே அவர்களுடைய முக்கியக் கடமையா யிருந்தது. இன்னும், மனிதர்களுக்குள் ஜாதி வித்தியாசத்தை யொழித்து ஏக சகோதரத்துவத்தையும் ஏக சமத்துவத்தையும் என்றென்றும் அழியாதபடி செய்ய வேண்டியதும் அவர்களுடைய பொறுப்பாகவே யிருந்தது. மேலும் ஸ்திரீகளின் நிலைமையையும் அடிமைகளின் கதியையும் உயர்த்த வேண்டியதும்

எம்பெருமானின் தொழிலாகவே காணப்பட்டது. அல்லும் பகலும் அருந்தவம் புரிந்து கொண்டும், நீண்டகால நோன்புகளை நெருக்கமாக நோற்றுக் கொண்டும், மலைகளின் இடையிலும், கெபிகளின் வழியிலும் இவ்வுலகத்தின் தத்துவத்தைப் பற்றிச் சதா சிந்தித்துக் கொண்டும் இருந்ததன் பயனாக இறுதியில் ஹிரா என்னும் குகைக்குள் ஓரிரவில் எமது அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்களுக்குத் தேவஞான ஒளி கிட்டிற்று. இந்த வைபவம்தான் எமது குர்ஆன் ஷரீபின் 96-வது ஸூராவில் அதி விசேஷமாய்ச் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. தங்களுக்கு நுபுவ்வத்து வந்த நற்செய்தியை முதன் முதல் தங்களுடைய பாரியாள் கத்தீ

ஜா[ரலி] நண்பர் அபூபக்கர் ஸித்தீக்[ரலி] முதலிய சிலரிடத்தில் மட்டும் சொன்னார்கள். இவர்களெல்லாரும் வேண்டிய மட்டும் தைரியம் ஊட்டியும் எம்பெருமானாருக்கு மட்டும் தங்களுடைய நுபுவ்வத்தைப் பற்றிச் சிறிது காலம் போதிய துணிவு உண்டாகாமலே யிருந்து வந்தது. ஆப்த நண்பர்களாகிய சிலர் மட்டும் எம்பெருமானின் நுபுவ்வத்தை மெய்யென்று நம்பி ஈமான் கொண்டார்கள்; ஏனையோரெல்லாம் ஆரம்பத்தில் இவர்களைப் பொய்யரென்றும் பித்தரென்றும் சொல்லித் தூஷித்து வந்தார்கள். பல வருஷங்கள் வரையில் மக்கமா நகரிலுள்ளவர்கள் எமது நபி பெருமானாரவர்களைப் பெரிதும் வாதனை செய்து வந்தனர். அப்போது சகிக்க முடியாத சங்கடங்களை யெல்லாம்

சகித்துக்கொண்டு தங்களுக்கு ஆண்டவனால் அனுப்பப்பட்ட கட்டளையை நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமாயிருந்து ஒரு சிறிதும் பின்வாங்காமலிருந்தார்கள். அபூத்தாலிப் அவர்கள் ஒரு சமயம் எம்பெருமானாரைப் பார்த்து, மக்கத்துக் காபிர்கள் செய்துவந்த கொடுமைக்கஞ்சி இஸ்லாமிய பிரசாரம் செய்யும் அவ் வேலையை விட்டு விடும்படி வேண்டினார்கள். "அவர்கள் ஆகாயத்திலுள்ள சூரியனை என் வலது கையிலும் சந்திரனை என் இடது கையிலும் கொண்டுவந்து வைத்து நான் ஏற்றுக்கொண்ட வேலையை விட்டு விடும்படி வேண்டின போதிலும், ஆண்டவன் தன் காரியத்தை வெற்றி பெறச் செய்யும் வரையில் அல்லது அதற்காகப் பாடுபட்டு நான்

உயிர் துறக்கும் வரையில் என் பிர சார வேலையைக் கைவிடேன்,'' என்று சொல்லி எமது நபிபெருமா ஞர்ஸல் திரும்பி நின்று கண்ணீர் விட் டார்கள். உடனே அபூத்தாலிப் அவர் கள், "ஆ, என் தமையனுக்குத் தனய! சாந்தமாயிரு; உனக்கிட்ட கட்ட ளையை நீ நிறைவேற்றக் கடவாய்; ஆண்டவன்மீது ஆணையாக நான் ஒரு போதும் உன்னைக் கைவிட மாட் டேன்,'' என்று தைரியமாக வாக் குறுதி கூறினர்.

பிறகு கொஞ்சங் கொஞ்சமாய் முஸ்லிம் தொகை வலுக்க ஆரம்பித் தது. நுபுவ்வத்து வந்து 4-வருஷ காலத்தில் சுமார் 40-பேர்கள் இஸ்லாத் தில் சேர்ந்து கொண்டனர். அப்பால் நபிகள் பெருமானுர் பகிரங்கமாய்ப் பிரசங்கம் செய்யத் தொடங்கினர்கள்.

அவர்கள் ஒன்றும் நூதனமான மார்க்கத்தை உண்டுபண்ண வரவில்லை. நபி ஆதம் (அலை) அவர்கள் கால முதல் போதிக்கப்பட்டு வந்து, பிறகு நபி இப்ராஹீம் (அலை) அவர்களால் நிலை நிறுத்தப்பட்ட ஏகதெய்வக் கொள்கையென்னும் இஸ்லாம் (சாந்தி) மார்க்கத்தையே எமது நபிகள் நாயகமும்[ஸல்] அசையாமல் நிலைநாட்ட வந்தார்கள். எல்லா மகான்களாலும் இதுவரை போதிக்கப்பட்டு வந்ததெல்லாம் அதே உண்மைதான். கஃப(த்) துல்லாவைச் சுற்றிவைக்கப் பட்டிருந்த தங்களுடைய 360 விக்கிரகங்களுக்கும் ஆபத்து வருமென்றும், அந்தத் தேவாலயத்துக்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் வரும் யாத்திரைக்காரர்களால் ஏற்படும் லாபகரமான தங்கள் காணியாட்சிக்குப் பங்கம் வருமென்

றும் அஞ்சி மக்கா ஷரீபிலுள்ள காபிர்
கள் எம்பிரான்மீது அதிக வைஷம்யம்
பாராட்டினார்கள். ஈதெல்லாம் பொரு
மையாலும் வீண் புழுக்கத்தாலும்
விளைந்த விரோதங்களே யொழிய
வேறொன்று மில்லை. அப்படிப்பட்ட
விரோத காலத்தில் நபி பெருமானாரை
மக்கமா நகரைவிட்டு வேறொரு வெளி
யிடத்தில் வைத்துப் பாதுகாக்கலா
மென்று அபூத்தாலிப் யோசனை செய்
தார்கள். அவ்வேளையில் நபி பெருமா
னின் பிரிய நாயகியும் காலகதியால்
தேகவியோக மானார்கள்; பின்னர்
அபூத்தாலிபும் உயிர் துறக்கலாயினர்.
அதனால் அவர்களுக்கு இகலோகச்
செல்வாக்குக் குறைவும் சம்பத்து
க்ஷீணமும் அதிகமாயுண்டாயின. ஆயி
னுமென்ன? ஆண்டவனிட்ட கட்
டளையை நிறைவேற்றுவதில் மட்டும்

அவர்கள் குறைபடா ஊக்கத்துடன் இருந்து வந்தார்கள். தாயிபு என்று சொல்லத்தக்க ஒரூருக்குச் சென்று அங்கே எம்பெருமானார்ஸல் அதிக அவஸ்தைப்பட்டு, உயிரை மட்டும் காப்பாற்றிக்கொண்டு திரும்பி விட்டார்கள். இவ்வாறு மக்கமா நகரில் சுமார் 13 வருஷகால மட்டும் படாத பாடுகளெல்லாம் பட்டுச் சுமார் 100 பேர் வரை முஸ்லிம்களைச் சேர்த்தார்கள். இவ்வாறிருக்கும் போது, யதுரிப் என்று சொல்லத்தக்க நகரிலிருந்து மக்கமா நகருக்கு யாத்திரையாக வந்தவர்களுள் பலரை எம்பெருமானார்ஸல் இஸ்லாத்தில் சேர்த்தார்கள். இந்த யதுரிப்தான் மதீனா ஷரீபு என்று அழைக்கப்பட்டது. மறு வருஷம் மதீனாவிலுள்ளவர் யாத்திரை வந்தபோது இன்னும் பலர் இஸ்லா

மார்க்கத்தில் சேர்ந்து கொண்டதால் அவர்களுடன் நபிகள் பிரான்ஸல் ஓர் உடன் படிக்கையும் செய்து கொண்டார்கள். பிறகு ஒரு நாளிரவில் மக்கா ஷரீபிலுள்ள காபிர் எதிரிகள் எம்பெருமானுரைக் குத்திக் கொன்று விடச் சதியாலோசனை செய்திருந்த போது, நபிகள் பிரான்ஸல் தெய்விக அருளால் அதனை உணர்ந்து கொண்டு அன்றிரவே மக்கமா நகரை விட்டு மதீனு நகருக்குப் புறப்பட்டு விட்டார்கள். இதுதான் இஸ்லாத்தில் ஹிஜ்ரத் என்னப்படுவது; முஸ்லிகளின் ஹிஜ்ரிக் கணக்கும் அன்று முதல்தான் ஆரம்பமாயிற்று.

திருமதீனுவுக்குச் சென்ற பின்னர் நபி பெருமானுருக்குப் பல நண்பர்கள் ஏற்பட்டனர்; இஸ்லாத்தில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு

கள் அதிகரித்துக் கொண்டே வந்தது. மக்கமா நகரில் உதாசினத்துடன் வெறுக்கப்பட்டு வந்த எம்பெருமானார்ஸல் திருமதீனாவுக்கு வந்தவுடன் அந்த நகருக்குத் தலைவராகவும், அங்குள்ள இரண்டு கூட்டத்தாருக்கு ஞான குருவாகவும் அமர்ந்தார்கள்; இந்த இரண்டு கூட்டத்தார்களும் அந்த நகரில் அதிக செல்வாக் குள்ளவர்களாயிருந்ததன் காரணமாக நபிபெருமானின் கீர்த்தியானது வளர் பிறை போல் நாளுக்கு நாள் முன்னேக்கி விருத்தியடைந்து வந்தது. அரப் தேசத்திலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் இஸ்லா மதத் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள்; இன்னும், பாரஸீகத்துக்கும் மிஸிர் (எகிப்து) தேசத்துக்கும் இவ்விதமாகவே இஸ்லா மதப் பிரசாரகர்கள் அனுப்பப் பட்டார்கள்.

அதற்கு மறுவருஷம் எம்பெருமா ஞர்ஸல் அனேக ஸஹாபாக்களுடன் எதிரிகள் வசிக்கக் கூடிய மக்கா ஷரீ புக்கு ஹஜ்ஜுக்குப் புறப்பட்டார்கள். இறுதியில் சில வருஷங்களுக்குள் இம்மக்கமா நகரமானது ஒரு துளி இரத்தங் கூடச் சிந்தப் படாமல் எம் பிரான் கைக்குள் வீழ்ந்து விட்டது. அதன் பின்னர் அரப் தேசத்திலுள்ள எல்லாக் கூட்டத்தார்களும் அவர்களை நபியென்றும் ஞானகுரு வென்றும் கூசாமல் ஒத்துக் கொண்டார்கள். இப்படிப்பட்ட இணையில்லா வெற்றி பெற்ற எம்பெருமானுருக்கு இறைவ னருளும் அவனன் மாராயமும் என் றென்றைக்கும் மாறாது உண்டாவ தாக. ஆரம்ப காலத்தில் அதிக விரோ தம் பாராட்டின எதிரிகளெல்லாம் பிறகு அளவிடற்கரிய அவமானத்துக்

குள்ளாயினர். அக்காலத்திய அறி
வில்லா அரபிக் காபிர்களால் ஆரம்பத்
தில் அதிக கஷ்டப்பட்டிருந்தும், நம்
பெருமானார்[ஸல்] மக்காஷரீபு பிடிபட்ட
பின்னர் எல்லோரையும் ஏகமாய் மன்
னித்து விட்டார்கள். என்ன பெருந்
தன்மை! என்ன காருண்யம்!! தங்களு
டைய நுபுவ்வத்துக் காலமாகிய 23
வருஷங்களுக்குள் விக்கிரக ஆராதனை
யை வேரறுப்பாக அறுத்துப் பழைய
மௌட்டிய அனுசாரங்களைப் போக்கி,
இஸ்லாமிய ஏக சகோதரத்துவத்தை
யும் சமத்துவத்தையும் ஸ்திரப்படுத்தி,
ஸ்திரீகளின் நிலைமையையும் அடிமை
களின் அந்தஸ்தையும் உன்னதமாக்கி
னார்கள். ஈதெல்லாம் நாயனருளா
லுண்டான நபித்தனத்தின் வெற்றி
யாகும்.

இறுதியில் அவர்கள் தங்களுடைய

ஆயுட்காலம் முடிவடையப் போவதை முன்னறிந்து கொண்டார்கள். தங்களுடைய ஸஹாபாக்களும் (தோழர்களும்) அவர்களுக்குப் பின்னோர்களும் எப்பொழுதும் சன்மார்க்கத்தில் ஒழுகிக்கொண்டும், இஸ்லாமிய சகோதரத்துவத்தை வளர்த்துக் கொண்டும், வேதக் கட்டளையின்படி ஏவல் விலக்கல்களை இடைவிடாது அனுஷ்டித்துக் கொண்டும், எப்பொழுதும் பெண்டுகளைக் கௌரவம் செய்துகொண்டும் உலகத்தவருக்கெல்லாம் முஸ்லிம்கள் ஒரு முன்மாதிரி (நமூனா) என்று கண்டோர் மெச்சும்படி அறிவிலும் ஆத்மஞானத்திலும் சிறந்து விளங்கும்படி ஆகவேண்டுமென்று நபிபெருமானார் அடிக்கடி நல்லுபதேசம் செய்து வந்தார்கள். எல்லா முஸ்லிம்களும் ஏக சகோதர கோஷ்டியைச் சேர்ந்தவ

றென்றும், அவரவரும் தத்தம் நிலையைத் தாமே உயர்த்திக் கொண்டு ஈடேற்றம் பெறவேண்டு மென்றும் அவர்கள் ஓயாமல் உபதேசம் செய்து கொண்டே யிருப்பார்கள். ஒருவருடைய பாபத்தை மற்றொருவர் ஏற்றுக் கொள்ள முடியாதென்பது அவர்களுடைய திண்ணிய சித்தாந்தமாகும். இவ்வா றிருக்கும்போது இறுதியில் ஒருநாள் நபி பெருமானின் அருமைப் பத்தினியாகிய ஆயிஷா[ரலி] அவர்களின் மடியில் தங்கள் தலையைச் சாய்த்துக் கொண்டிருக்கும்போது, வாயால் ஆண்டவனுடைய ஸ்தோத்திரத்தை உச்சரித்துக்கொண்டே அவர்களுடைய ஆவியானது பாகதி யடைந்தது. அவர்களுடைய ஆவி இகலோகத்தை விட்டேகுமட்டும் தங்களுடைய உம்மத்து (நபியைப் பின்பற்றினர்) களுக்

காகவே ஆண்டவனிடம் குறையிரந்த வர்களாய் மன்றாடிக் கொண்டிருந்தார் கள்.

நபிகள் பிரான்ஸல் நம்முலகை விட்டேகியதும் அவர்களுடைய நண்பர்கள் ளெல்லோரும் அதிகமாகக் கிலேசப் பட்டார்கள். அச்சமயம் உமருபுனுல் கத்தாப்ரலி அவர்கள் மிக்க ஆவேசத் துடன், "யாரேனும் நபிபிரான் காலஞ் சென்று விட்டதாகச் செப்புவாராயின், அவரது சிரத்தை என் வாளாயுதத்தால் கொய்வேன்," என்று ஆரவாரம் செய்தார்கள். நபிகள் நாயகம்ஸல் காலஞ் சென்றார்கள் என்பதில் சந்தேகம் பிறந்தவர்களாய் இங்ஙனம் உமரொருக்ரலி அவர்கள் பகிரங்கம் செய்தார்கள். இதையறிந்த அபூபக்ர் ஸித்தீக்ரலி அவர்கள், உமர்ரலி முதலியோரின் தப்பெண்ணத்தை மாற்

றித் தேற்றினார்கள். "வமா முஹம்ம துன் இல்லா ரஸூல்..." என்னும் குர்ஆன் ஷரீபின் 3:143-வது ஆயத்தை அபூபக்ர்[ரலி] அவர்கள் ஓதிக்காட்டி எல்லோரையும் சமாதானம் செய்தார்கள்.

நமது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உங்களெல்லோரையும் போல ஓர் இகலோக மனித ராகத்தாம் இருந்தார்கள். அவர்கள் சாமுத்திரிகா லக்ஷணங்களெல்லாம் பொருந்திய கம்பீரத் தோற்ற முடையவர்களா யிருந்தார்கள். உயர்ந்த தோற்றமும் அகன்ற மார்பும் ஆஜானுபாகுவுக் குரிய கைகளும் அமையப்பெற்று, அதிக திட தேக முள்ளவர்களா யிருந்தார்கள். அழகிய வடிவும், புன்சிரிப்போடு கூடிய முகமும், மகாமேதாவிக்குரிய

கூரிய பார்வையும் உடையவர்கள். கொவ்வைக்கனியன்ன செவ்விய இதழ்களும், அழகிய மோவாயினின்றும் நீண்டு தொங்கிக் கொண்டிருக்கும் அழகிய அகன்ற வட்டத்தாடியும் வாய்க்கப் பெற்றவர்கள். அவர்களுடைய ரோமமும் கண்விழிகளும் கருமையா யிருக்கும். அவர்களுடைய ஞாபக சக்திக்கும் மனோ சக்திக்கும் ஒரு வரையறை சொல்வது முடியாது. இப்படிப்பட்ட மகானாயிருந்தும், சிறியோர்கள் முதல் பெரியோர்கள் வரை எல்லோரும் விரும்பத்தக்க ஸௌலப்பிய குண முடையவர்களாயிருந்தார்கள். நற்குணத்திலும் தயாளத்திலும் அவர்களை வெல்ல யாராலும் முடியாது. பொறுமையின் சொரூபத்தை இவ்வுலகில் காணவேண்டுமாயின், எம்பெருமானையே அதற்கோர்

உதாஹரணமாகக் காணலாம். அவர்களுடைய ஜீவதசை முழுதும் விளையாட்டுக்காகவேனும் ஒரு வெள்ளைப் பொய்யேனும் உரைத்தறியார்கள். யாரிடத்திலும் அதிக பிரியமாக முக மலர்ச்சியுடன் வசனிப்பார்கள். ஆனால், சுருக்கமாகவும் வேடிக்கையாகவும் பேசுவார்கள். மனோதிடமும் விடா முயற்சியும், ஆண்டவனிடத்தில் அழுத்தமான பக்தியும், மனிதவர்க்கத்துக்கெல்லாம் மாதிரியா யிருக்கத்தக்க ஞான முதிர்ச்சியும், சீல ஒழுக்கமும் வாய்க்கப் பெற்றவர்கள். அவர்கள் பால்ய காலத்தில் மகாநிதான புத்தியுடன் தங்கள் வாழ்நாளைக் கழித்து எல்லோராலும் மெச்சத்தக்க அல்அமீன் (சரியான நியாயஸ்தர், உண்மையான நம்பிக்கைக் குரியவர்) என்னும் பட்டத்தைப் பெற்றார்கள். அவர்கள் திரு

மதீனு நகரில் வாழ்ந்து வந்தபோது எதிர் மதத்தினரான எஹூதிகளும், நஸாராக்களும், காபிர்களும் எம்பெருமானிடமே நியாயம் பெற வருவார்கள். குடும்ப வாழ்க்கையில் அவர்கள் தங்கள் வீட்டுப் பெண்டுகளிடம் அதிக அன்னியோன்னியமாய் வாழ்ந்து வந்தார்கள். யாருக்கும் மனங்கோணுமல் திருப்திகாமாகவே நடந்து கொள்ளுவார்கள். அரப்தேச முழுமைக்கும் அரசாயிருந்தும், அக்காலத்திய பத்துலக்ஷம் முஸ்லிம்களுக்கு ஞானகுரு வாயிருந்தும், ஒரு சாதாரணமான சிறிய விடுதியில் குடியிருந்து கொண்டும், மகா எழ்மைத்தனமான உணவுகளை உண்டு கொண்டும், தங்களுடைய அடுப்பைத் தாங்களே பற்ற வைத்துக் கொண்டும், தங்களுடைய வஸ்திரங்களையும் பாத ரக்ஷைகளையும்

தாங்களே பழுது பார்த்துத்தைத்துக் கொண்டும் சர்வ சாதாரணமாய் உயிர் வாழ்ந்து வந்தார்கள். தங்களுடைய அடிமைகளை யெல்லாம் விடுதலை செய்து விட்டு, மற்றையோரையும் அப்படியே விடுதலை செய்யச் சொல்வார்கள். தங்களுடைய சாதாரண உணவையும் அடிக்கடி ஏழைகளுக்கும் விருந்தினருக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டுப் பல மாதங்கள் வரையில் அரை வயிற்றுடனே பட்டினி கிடப்பார்கள். அவர்களுடைய உதார குணத்தால் அனேக ஏழைகள் அவர்களை அண்டியே காலங்கழித்து வந்தார்கள். சாதாரண மனிதர்களால் கஷ்டமென் றெண்ணத்தக்க எவ்வகைத் துன்பத்தையும் அவர்கள் பொருட்படுத்தாமல் ஆண்டவன் மீதே குறையாத உறுதி வைத்திருப்பார்கள்.

தங்களுடைய உயிருக்கு ஆபத்து வரும்போது ஆண்டவன்மீது வைத்த நம்பிக்கையை மட்டும் ஒரு சிறிதும் கைவிட மாட்டார்கள். இதை இரண்டு உதாஹரணங்களால் விளக்கிக் காட்டி விட்டு, இச்சரித்திரச் சுருக்கத்தை இப்பொழுது முடித்துக் கொள்வோம். மக்கமாநகரை விட்டு மதீனு நகருக்குப் புறப்பட்டு ஹிஜ்ரத்துப் போனபோது, நபிகள் நாயகமும்ஸல் அபூபக்ர் ஸித்தீக்ரலி அவர்களும் வழியில் ஒரு குகைக்குள் தங்கி யிருந்தார்கள். அப்பொழுது மக்கமாநகரில் எம்பெருமானுரைக் கொன்றுவிட வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டிருந்த காபிர்களான எதிரிகள் தொடர்ந்து வந்து அந்தக் குகையின் வாயிலண்டை நின்று எம்பிரானைத் தேடுகிருர்கள். எதிரிகளின் அடிச்சுவட்

டின் சப்தமும் கேட்கின்றது; நபிபிரானைக் கண்டால் உடனே கொன்று விடுவதாக அவர்கள் பேசும் குரலும் குகைக்குள் கேட்கின்றது. அப்பொழுது அபூபக்ர்ரலி அவர்கள் மனங் கலங்கி, நபிபெருமானரிடம், "இப்பொழுது என் செய்வது? அவர்கள் பலபேர் இருக்கின்றனர்; நாம் இருவர்தாமே யிருக்கின்றோம்?" என்றார்கள். உடனே எமது நபிகள் பிரான், "அப்படிச் சொல்ல வேண்டாம்; நம்மிருவருடன் ஆண்டவனும் இருக்கிறான்; அவனைச் சேர்த்து மூவர் இருக்கின்றோம்," என்று மிக்க நிதான புத்தியுடன் அதிக சாந்தமாகச் சொன்னார்கள். என்ன ஆழமான தெய்வ பக்தி, பார்த்தீர்களா! இன்னமும், யுத்தகளத்தில் ஒருநாள் எம்பிரான் களைத்துப்போய் ஒரு மாநிழலில் கண்

ஞுறக்கங் கொண்டார்கள். தஉதூர் என்னும் பெயருடைய ஓர் எஹூதி உருவியவாளுடன் அவர்களுடைய கழுத்தில் கையை வைத்துக்கொண்டு, "ஓ முஹம்மதேஸல்! இப்பொழுது உம்மை யார் காப்பாற்றுவார்?" என்று அதட்டி உருட்டிக் கேட்டான். உடனே நபிகள் நாயகம்ஸல் சிறிதும் மனங் கலங்காமல் அதி தீரத்துடன், "லோக ரக்ஷகன் என்னைக் காப்பான்," என்று மறுமொழி சொன்னார்கள். உடனே எஹூதியின் கையிலிருந்த வாளாயுதம் நழுவிற்று; அப்பொழுது அதை எம்பிரான் எடுத்துக் கொண்டு தஉதூரின் கழுத்தில் வைத்து, "ஓ தஉதூர்! இப்பொழுது உன்னை யார் காப்பாற்றுவார்?" என்று கேட்க, அந்த எஹூதி வாய் குளறி மெய்விதரி, "உம்மைத் தவிர வேறு யாருமில்லை; இச்சமயம்

உயிர்ப் பிச்சை யளிப்பீராக!'' என்று மனங்கசிந்து வேண்டினான். உடனே நபிபெருமானாரவர்கள் "இதோ! மன்னித்தேன்; இனி இரக்கமென்பதை என்னிடம் கற்றுக்கொள்,'' என்று சொல்லி அவனிடமே அந்த வாளாயுதத்தையும் திரும்பக் கொடுத்து விட்டார்கள்; உடனே அந்த எஹூதி இஸ்லாமாகி எம்பெருமானாருக்கோர் அரிய தோழரானார். இஃதெப்படிப் பட்ட தெய்வ பக்தியென்று கருதுகின்றீர்கள்? இதுதான் அவர்களுடைய தெய்வபக்தி. இதுதான் அவர்களுடைய சரித்திரச் சுருக்கம். இப்படிப்பட்டவர்கள்தாம் எம்பெருமானார் அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் என்று சொல்லப்படும் இறுதிநபியான காத்தமன் நபிய்யீனவார்கள். இவர்

களுக்குப் பின் எவரும் நபியாய் வர வில்லை. வரவுமாட்டார். வரவும் முடியாது. வரவேண்டிய அவசியமுமில்லை.

# நபிகள் நாயக வாக்கியம் 451

1. எண்ணங்களுக்குத் தக்கபடி காரியங்கள் தீர்மானிக்கப்படும்.

2. ஒரு முஸ்லிமுடைய உண்மையான நடத்தைக்கு அத்தாக்ஷி யாதெனின், அவர் தம்முடைய தில்லாத காரியத்தில் கவனம் செலுத்தா திருப்பது தான்.

3. ஒருவர் தமக்கு வேண்டுமென்று விரும்பும் வஸ்துவைத் தம்முடைய சகோதாருக்கும் வேண்டு மென்று

விரும்பினாலல்லாமல், அவர் ஓர் உண்மையான (மூமினாய்) உறுதியுடையவரா யிருப்பது முடியாது.

4. நியாயமான வஸ்து இன்னதென்பது ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது; அவ்வாறே அநியாய மானதும் இன்னதென்றும் புலப்படுகின்றது. ஆனால், இவ் விரண்டுக்கு மிடையில் சில சந்தேகமான வஸ்துக்கள் காணப்படுகின்றன; அவற்றினின்றும் விலகிக்கொள்வதே நன்மையாய்க் காணப்படுகின்றது.

(அபூதாஊது அவர்களின் அபிப்பிராயப்படி இந்நான்கு திருவசனங்களும் மனிதருடைய வைதிக மார்க்கத்துக்கு இன்றியமையாதனவாகவும், இஸ்லாமியச் சட்டத்தின் சுருக்கத்தைத் தமக்குள் அடக்கிக் கொண்டனவாகவும் அமைந்திருக்கின்றன.)

5. அல்லாஹுத் தஆலாவின் குண

திசயங்களை நீங்கள் நிரம்பப் பெற்றவ ரா யிருங்கள்.

6. கல்விக்கு உயிரைக் கொடுத்த வன் ஒருபோதும் மரணமாவ தில்லை.

7. கல்விமான்களை யார் கண்ணியப் படுத்துகிறாரோ, அவர் என்னைக் கண் ணியப் படுத்தியவ ராவார்.

8. காலையிலும் மாலையிலும் கடவு ளை வணங்குங்கள்; பகற்காலத்தை உங்கள் தொழிலில் கழியுங்கள்.

9. தனக்காக வாவது பிறருக்காக வாவது வேலை செய்யாதவன் ஆண்ட வனுடைய சன்மானத்தைப் பெற மாட்டான்.

10. வேலை செய்வதற்கு வேண்டிய தேகதிடமும் சௌகரியமும் வாய்க் கப்பெற்ற ஒருவன் தனக்காக வாவது பிறருக்காக வாவது வேலை செய்யா திருப்பானாயின், அவனுக்கு ஆண்டவ

னுடைய அருட்பெருஞ் சோதி வாய்க்க மாட்டாது.

11. கண்ணியமான முறையில் தங்களுடைய ஜீவனோபாயத்துக்கு வேண்டியதைச் சம்பாதிப்பவர்கள் ஆண்டவனிடத்தில் அருமையான பிரியமுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

12. தன்னுடைய சொந்தத் தொழிலால் தனக்கு வேண்டிய ஜீவனோபாயத்தைச் சம்பாதித்துக்கொண்டு யாசகம் வாங்காமல் காலங் கழிப்பவனிடத்தில் ஆண்டவன் காருண்ய முள்ளவனாயிருப்பான்.

13. கொடையி லெல்லாம் (தர்மத்தில்)சிறந்தது இடதுகைக்குத்தெரியாமல் வலது கையால் கொடுப்பதுதான்.

14. இரகசியமாகச் செய்யும் தருமந்தான் ஆண்டவனுடைய கோபத்தைத் தணிக்கும்.

15. பேசும்போது பொய்பேசுகிறவனும், தான்செய்த வாக்குறுதியை மீறி நடப்பவனும், தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட அமானத்தில் நம்பிக்கை மோசம் செய்பவனும் எவனோ, அவன் என்னுடைய கூட்டத்தில் சேர்ந்தவனுகான்; ஆனுல், தன் உள்ளத்தில் மார்க்க விரோதியான கலகக்காரனுயிருக்கிறுன்.

16. தங்களிடத்தில் பிறர் வைத்த நம்பிக்கையை நிறைவேற்றுகிறவர்களும், தங்களுடைய வார்த்தையில் தவருதவர்களும், பிறருக்குக் கொடுத்த உறுதிமொழிகளைப் பூர்த்திசெய்து வைப்பவர்களுமே முஸ்லிம்களென்று சொல்லப்படுவார்கள்.

17. "நிச்சயமாக வறுமை வந்த காலையில் பொறுமையுடனிருப்பவர்களும், பிறருடைய பிழைகளை மன்னிப்

பவர்களுமே மேன்மையான காரியங்களைச் செய்து முடிக்கக் கூடியவர்கள்," என்றிவ்வாறு ஆண்டவன் கூறியுள்ளான்.

18. பணிவும் உபசாரமுமே பக்தியின் இருகாரியங்களா யிருக்கின்றன.

19. உண்மையான அடக்கமே சகல நற்குணங்களுக்கும் மூலகாரணமா யிருக்கின்றது.

20. அடக்கமும் கற்புடைமையுமே இஸ்லாத்திலுள்ள நம்பிக்கையின் அம்சங்களா யிருக்கின்றன.

21. தர்மத்துக்குள் ளெல்லாம் சிறந்த தர்மம் மனிதனுடைய உள்ளத்திலிருந்து உதயமாகி, வேதனைப்பட்டாரின் மனப்பிணியை மாற்றுவதற்காகப் பேசப்படும் மிருது பாஷைதான்.

22. உண்மையான பரிசுத்தமுடைய தயாள ஹிருதயத்தை யுடையவர்

கள் தாம் பேரின்பச் சுவர்க்கானந்தத்தைப் பெறுவர்.

23. ஆண்டவனுடைய சிருஷ்டிப் பொருள்களிடத்திலும் தன்னுடைய சொந்தக் குழந்தைகளிடத்திலும் பக்ஷம் பாராட்டாதவனிடத்தில் ஆண்டவனும் பக்ஷம் பாராட்ட மாட்டான்.

24. வயோதிகர்களிடத்தில் அவர்களுடைய விருத்தாப்பியத்துக்காகக் கண்ணியம் பாராட்டும் ஒவ்வொரு சிறுவருக்கும் அவருடைய விருத்தாப்பிய காலத்தில் அவரைக் கண்ணியப்படுத்தக்கூடிய மனிதர்களை ஆண்டவன் உண்டாக்குவான்.

25. தன்னுடைய சிறு குழந்தைகளிடத்தில் பக்ஷம் பாராட்டாமலும், விருத்தாப்பியர்களின் கீர்த்தியில் மரியாதை செலுத்தாமலும் இருக்கக்கூடியவன் என்னுடைய கூட்டத்தில்

சேர்ந்தவனுகான் ; நன்மையான காரியங்களைச் செய்யும்படியும், தீமையான காரியங்களை விடும்படியும் ஏவாதவன் எவனே, அவனும் என்னுடைய கூட்டத்தில் சேர்ந்தவனுகான்.

26. தன் கண் முன்னிலையில் இருந்தாலும் இல்லாவிடினும் தன்னுடைய சகோதரனைக் காக்கக் கூடியவனே உண்மையான மனிதனுவான்.

27. தன்னுடைய வார்த்தையிலும் செய்கையிலும் எண்ணத்திலும் உண்மையாயிருப்பவனைத் தவிர மற்ற எவரும் உண்மை யென்னும் வார்த்தையின் உண்மையான தாத்பரியப்படி உண்மையுள்ளவராகார்.

28. சோர்வடைந்த மனிதர்களின் மனத்துக்குச் சந்தோஷத்தை மூட்டுவதும், துன்பப்பட்ட மனமுடையவர்களுக்கு அத்துன்பத்தை நீக்குவதும்

அதற்குத் தக்க சன்மானத்தைப் பெற்றுக்கொள்ளும்; துன்பம் வந்த காலையில் அந்தச் செய்கையின் ஞாபகம் நீர்வீழ்ச்சிபோல் ஓடிவந்து நம்முடைய மனத்தின் பளுவைக் குறைக்கின்றது.

29. நன்மையான காரியங்களைச் செய்வதில் பிடிவாதமா யிருங்கள்.

30. அவசியமான வேளையில் தன்னோடொத்த பிராணிகளுக்கு உதவி புரிபவனுக்கும், நசுக் குண்டவர்களுக்கு நல்லுதவி புரிபவனுக்கும் ஆண்டவன் தன் இறுதித் தீர்ப்பு நாளில் நல்லுதவி புரிவான்.

31. மகா மேன்மையான காரியங்கள் யாவை? ஒரு மனிதனுடைய மனத்தைச் சந்தோஷப் படுத்துவதும் பசிப்பிணி யுடையவருக்குப் போஜனம் செய்து வைப்பதும், சிறுமைப்

பட்டவருக்கு உதவி புரிவதும், துக்
கத்திலிருப்பவரின் துயரத்தைப் போ
க்குவதும், துன்ப மடைந்தவர்களின்
கஷ்டத்தை நிவர்த்தி செய்வதும் அப்
படிப்பட்ட காரியங்களாகும்.

32. அல்லாஹுத் தஆலாவுக்கு
அதிக உவப்பானவர் யார்? அவனு
டைய சிருஷ்டிப் பொருள்களுக்கு
எவரிடத்தி லிருந்து அதிகமான நன்
மை யுண்டாகிறதோ, அவரே அப்
படிப்பட்ட மனிதரா யிருக்கின்றார்.

33. ஒருவர் தம்முடைய சகோதர
ருக்கு ஏற்பட்டுள்ள நாட்டத்தைப்
பூர்த்தி செய்துவைக்கப் பிரயத்தனப்
பட்டு, அக்காரியத்தில் அவர் ஜய
மடைந்த போதிலும், அபஜயமடைந்த
போதிலும் அவருடைய பாபங்களை
யெல்லாம் அல்லாஹுத் தஆலா மன்
னித்து விடுவான்.

34. எவரிடத்திலிருந்து மன்பதைக்கெல்லாம் அதிக நன்மை யுண்டாகிறதோ, அவர்தாம் மனிதர்களுக்குள் மகா சிலாக்கியமானவர்.

35. ஆண்டவனுடைய படைப்புக்களெல்லாம் அவனுடைய குடும்பத்தில் சேர்ந்தவையா யிருக்கின்றன ; ஆதலின், ஆண்டவனுடைய படைப்புக்களுக்கு அதிகமான நன்மையைச் செய்வதற்கு எவரொருவர் பிரயத்தனப்படுகிறாரோ, அவரே ஆண்டவனுக்கு அதிக உவப்புள்ளவரா யிருக்கின்றார்.

36. உண்மையிலும் உத்தமமான காரியத்திலும் மேன்மை பெறுவதற்கு எப்பொழுதும் பாடுபடுங்கள்.

37. ஆண்டவனுடைய சிருஷ்டிப் பொருள்களிடத்தில் பிரியம் பாராட்டுகிறவரிடம் அந்த ஆண்டவனும் பிரி

யம் பாராட்டுகிறான்; ஆதலின், நல்ல வனாயினும் கெட்டவனாயினும் யாரா யிருப்பினும், இவ்வுலகிலுள்ள மனித னிடத்தில் பிரியமாயிருங்கள் ; தீய மனிதனிடத்தில் பிரியமா யிருப்பதால் அவன் அத் தீமையினின்றும் விடுபடு கிறான்; இதனால் வானுலகி லுள்ளவர் கள் உங்களிடத்தில் பிரியமா யிருப் பார்கள்.

38. சுவர்க்கம் புகுவதற்கு அருகர் களா யிருப்பவர்கள் மூவ்வகைப் படு வர்: ஒன்றாவது, சற்குணசீலனா யிரு ந்து, தன் குடிகளுக்கு நன்மை செய் யக்கூடிய நீதிபதியான மன்னன்; இரண்டாவது, தன் பந்துமித்திரர்க ளிடத்திலும் ஏனையோ ரிடத்திலும் தயாளமா யிருக்கக்கூடிய பிரியமுள்ள மனிதன்; மூன்றாவது, சற்குணசீலன்.

39. உங்களுக்கு நான் இரண்டு

விஷயங்களை விட்டுச் செல்கின்றேன்; அவற்றை நீங்கள் பற்றிப் பிடித்திருக்கும் வரையில் வழிதடுமாறிப் போகமாட்டீர்கள்; ஒன்று, அல்லாஹுத் தஆலாவின் வேதம்; இரண்டு, அவனுடைய தூதரால் சொல்லப்பட்ட சட்ட திட்டங்கள்.

40. இரண்டு பக்கங்களிலும் இரண்டு சுவர்களையுடைய ஒரு நேரான பாதையை அல்லாஹுத் தஆலாவானவன் அமைத்திருக்கிறான்; அந்த இரண்டு சுவர்களிலும் திரைகளால் மூடி போடப்பட்ட திறந்த வாயில்கள் காணப்படுகின்றன. "பாதையின் வழியே நேரே செல்லுங்கள்; கோணலாய்ப் போகவேண்டாம்," என்று ஒரு நல்லறிவுறுத்துவோன் அந்தப் பாதையின் தலைப்பிலிருந்து கூறுகிறான். இந் நல்லறிவுறுத்துவோனுக்கு

மேல் மற்றொருவன் நின்றுகொண்டு, "இந்தப் பாதையிலுள்ள திரை மூடிய வாயில்களின் வழியே நுழைந்துவிடாதீர்கள்; அவ்வாறு நுழைந்து விடுவீர்களேல், அபாயத்துக்குள்ளாவீர்கள்," என்று எச்சரிக்கை செய்கிறான். இங்கே நேரான பாதையென்பது தீனுல் இஸ்லாம்; திரை மூடிய வாயில்கள் தாம் ஆண்டவனால் வேண்டாமென்று தடுக்கப்பட்ட விலக்கல்களாயிருக்கின்றன; அவ்வாயில்களிலுள்ள திரைகள்தாம் ஆண்டவனால் குறிப்பிடப்பட்ட வரம்பாகும்; நல்லறிவுறுத்துவதுதான் குர்ஆன் ஷரீபு; அதற்கு மேலுள்ள மற்றொருவன்தான் ஒவ்வொரு மூமினின் மனத்திலுமுள்ள அல்லா(ஹ்)வின் ஞாபகமாகும்.

41. ஆண்டவனுடைய திருவசனத்துக்கு என் வார்த்தைகள் முரண்

பட்டிருக்க மாட்டா ; ஆனால், என் வார்த்தைகளுக்கு ஆண்டவனுடைய திரு வசனம் முரண்பட் டிருக்கலாம். அப்பொழுது ஆண்டவனுடைய திரு வசனங்களையே பின்பற்றுங்கள்.

42. ஆண்டவனுடைய கட்டளை கள் உங்களுக் கிருக்கும்போது, அவற் றைப் புறக்கணிக்காதீர்கள் ; சட்ட விரோதமானவை கூடாதென்று சொல்லப்படும்போது, அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாதீர்கள். ஏவல் இன்னதென்றும், விலக்கல் இன்ன தென்றும் எல்லை கட்டியிருக்கும் போது, அந்த எல்லையைத் தாண்ட வேண்டாம்; ஆனால், சில விஷயங்கள் மறக்கப்படாமல் மௌனமாக விடப் பட் டிருக்கின்றன; அப்படிப்பட்ட விஷயங்களில் தர்க்கம் செய்யவேண் டாம்.

43. "ஓ, அலீ! உம்மையே நீர் உணரக் கடவீர்."

44. "ஞானப் பேரொளியை நான் அடைந்து அவ் வொளியிலேயே வாழ்ந்து வருகிறேன்."

45. "என்னுடைய வார்த்தைகளே சட்டம்; என் நடத்தையே வழி காட்டி; என் நிலைமையே உண்மை."

46. எவருடைய நாவினின்றும் கைகளினின்றும் மனித வர்க்கமானது க்ஷேமமா யிருக்கிறதோ, அவரே சம்பூர்ணமான முஸ்லிமா யிருக்கின்றார்; எவரொருவர் அல்லாஹுத்தஆலாவின் விலக்கல்களிலிருந்து அஞ்சியோடுகிறாரோ, அவரே சரியான முஹாஜிர்* என்னப்படுவார்.

---

* ஹிஜ்ரத் செய்பவர் முஹாஜிர்; நபிகள் நாயக மவர்களுடன் மக்கமா நகரைவிட்டு ஹிஜ்ரத் செய்த (ஹப்ஷா, மதீனாவை நோக்

47. "வேறொருவரிடத்திலும் இனி யொருமுறை யான் சென்று வினவாம லிருக்கும்படி இஸ்லாத்தின் தத்துவத் தை எனக்குப் போதிக்கவேண்டும்." இதற்கு நம் நபிபெருமானாரவர்கள்ஸல் பின் வருமாறு விடை யளித்தார்கள்: "ஓ, ஸுப்யான்! 'நான் ஆண்டவனி டத்தில் உறுதிகொண்டேன்,' என்று சொல்லி, அதன்பின் ஏவல்களைக் கடை ப்பிடித்து விலக்கல்களை விட்டுவிடு வீராக."

48. பொறுமை யென்பது நியாய மான குணமென்று வாதிக்கக் கூடுமா யின், இருவகைப்பட்ட மனிதர்களே அப்படிப்பட்ட பொறுமைக்கு மிகப் பொருத்தமுள்ள பாத்திரர்களா யிருப்

---

கிச் சென்ற) ஸஹாபாக்களாகிய தோழர் களுக்கு முஹாஜிர்கள் என்று பெயர் சொல்வர்.

பார்கள்: ஆண்டவன் ஒருவனுக்குத் திரண்ட ஐசுவரியத்தைக் கொடுத்து, அதில் மிகுதியான தானதர்மங்களை யெல்லாம் செய்யும்படி அவனுக்கு நல்ல மனதையும் தந்திருப்பானாயின், அவனொருவன். 2. மற்றொருவன், ஆண்டவனருளால் மதசம்பந்தமான ஞானத்தை யடைந்து, அதன்படி தான் நடந்து காட்டிப் பிறருக்கும் அதைப் போதிப்பவன்.

49. மனிதர்கள் தங்கச் சுரங்கத்தைப்போலவும் வெள்ளிச் சுரங்கத்தைப்போலவும் ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேத முடையவர்களா யிருக்கிறார்கள்; அறியாத் தனத்தையுடைய அஞ்ஞானிகளும் இச்சன்மார்க்கத்தின் ஞானத்தைமட்டும் அடைந்து விடுவார்களாயின், அவர்கள் இஸ்லாத்தில் நல்லவர்களாகவே யிருப்பார்கள்.

50. இவ்வுலகில் ஒரு மூமினுடைய கஷ்டத்தை ஒரு மனிதன் நிவர்த்தி செய்வானாயின், இவனுடைய கஷ்டத்தை அல்லாஹுத் தஆலா மறுவுலகில் அவ்விதமே நிவர்த்திசெய்வான்; தரித்திரர்களுக்கு உபகாரம் செய்பவனுக்கு ஆண்டவன் இவ்வுலகிலும் வரப்போகின்ற அவ்வுலகிலும் நன்மை கொடுப்பான்.

51. "மனிதனுடைய மகாகொடிய தீமை யாதாயிருக்கும்?" என்று நம் நபிகள் நாயகத்தைக் கேட்டபோது, "தீமையைக் குறித்து என்னைக் கேட்டிருக்கக் கூடாது; ஆனால், நன்மையைக் குறித்துக்கேளுங்கள்," என்று ஒருமுறை, இரண்டு முறை, மூன்று முறை சொல்லிப் பின்னர், "அறிந்து கொள்ளுங்கள்! படித்துக் கெட்டவனே மகா கெட்டவன்; படித்த நல்ல

வனே மகா நல்லவன்,'' என்று திரு வாய் மலர்ந் தருளினார்கள்.

52. தொழுகையானது மனத்தைத் தூய்மையாக்கிப் பிரகாசிக்கச் செய்கிறது; தானதர்மம் செய்வது ஈமானின் (உறுதியின்) சாக்ஷியமா யிருக்கிறது; மேலும் பாபத்தி னின்றும் விலகியிருப்பது சம்பூர்ணமான சிறப்பாயிருக்கிறது. நீங்கள் நன்மையைச் செய்வீர்களேல், குர்ஆன் ஷரீபானது உங்களுடைய இலாபத்துக் கொரு சாக்ஷியா யிருக்கிறது: ஆனால், நீங்கள் தீமையைச் செய்வீர்களேல், உங்களுக்கு அஃதொரு நஷ்டமா யிருக்கிறது.* ஒவ்வொருநாட் காலையிலும்

---

* ஏனெனின், நல்லவர்களுக்குச் சுகத்தையும் தீயவர்களுக்குத் துக்கத்தையும் கொடுப்பதாய் அவ்வேதம் முறையிடுகின்றது.

எழுந்திருக்கும் போது ஒவ்வொரு மனிதனும் தான் மேன்மை பெறுதற்கோ தாழ்மை யுறுதற்கோ வேண்டிய காரியங்களைச் செய்கிறான்.

53. (ஜைனபின்) குழந்தையானது அதனுடைய மரணத் தறுவாயில் நம் நபிகள் பிரானிடம் கொண்டுவரப்பட்டது; அதன் ஆவியானது ஆடி யசைந்து ஊசலாடிக் கொண் டிருந்தது; அதைக் கண்ணுற்றவுடன் எம்பெருமானாவர்களின்[ஸல்] கண்களினின்றும் நீர்வடிய ஆரம்பித்தது; இதைக்கண்ட ஸஅத்[ரலி] அவர்கள், "யாரஸூலல்லா! இப்படித் தாங்கள் அழுது கண்ணீர் விடுவதன் தாத்பரிய மென்ன*?" என்

* சுகதுக்க சம்பந்தமான முகமலர்ச்சிக்கும் கண்ணீர் வீழ்ச்சிக்கும் மேலாக நபி பெருமான் இருத்தல் வேண்டுமென்று அந்தத் தோழர் எதிர்பார்த்தார்.

று கேட்டார்கள். அதற்கு நம் ரஸூலுல் நாயகமவர்கள், "இது தயாளத்தையும் தர்ம சிந்தையையுங் காட்டக்கூடிய அடையாளமா யிருக்கிறது ; இத்தகைய நற்குணத்தை அல்லாஹுத் தஆலா தன் அடியார்களின் மனத்தில் நிரப்பி யிருக்கிறான்; இளகின மனமுடையவராயிருந்து தயை தாக்ஷண்யத்தை உடையவர்களா யிருக்கக் கூடியவர்க ளிடத்தி லல்லாமல் மற்றையோரிடத்தில் ஆண்டவன் இரக்கம் வைத்து மன்னிக்க மாட்டான்," என்று இயம்பினார்கள்.

54. ஸஅத் பின் உபைதா என்பவரை நோக்கி ரஸூலுல் கரீமவர்கள் "அழுது கண்ணீர் விடுவதற்காக அல்லாஹுத் தஆலா ஒருவரையும் தண்டிப்பதில்லை யென்றும், மனம் நொந்த வேளைகளில் அங்கிருந் துண்டாகும்

தேம்புதலுடன் கூடிய அழுகைக்காக வும் அவன் யாரையும் சிக்ஷிப்பதில்லை யென்றும் நீர் கேட்டதில்லையா? முகத் தில் அறைந்துகொண்டும் தலையில் அடித் துக் கொண்டும் அறியாத அஞ்ஞானி கள் போல் அழுவதை மேற்கொண்ட மனிதன் என்னுடைய பக்த கோடியில் சேர்ந்தவனுகான்,"* என்று அருளிச் செய்தார்கள்.

---

*ஒப்பாரி வைப்பதும், மாரடிப்பதும், மண்டையை உடைத்துக் கொள்வதும், முகத்தில் அறைந்து கொள்வதும், கீழே கிடந்து உருளுவதும் ஆகிய இவை போன்ற காரியங்கள் "அஞ்ஞானிகளின் " துக்கக் கொண்டாட்டம்" என்றும், அதனல் அவை கூடாவென்றும் நமது நபிபெருமா ஞர்ஸல் கட்டளையிட் டிருக்கிறூர்கள்; ஆனல், இவ்வுத்தரவுக்கு நேர்மாருன செய் கைகளைப் பல முஸ்லிம்களின் வீடுகளில்

55. நீங்கள் யாரும் மரணத்தைக் கோரவேண்டாம்; நன்மை செய்பவனும் மரணத்தைக் கோரவேண்டாம்; ஏனெனின், ஒருகால் அவன் தன் நீண்ட ஆயுளால் இன்னும் மிகுதியான நன்மையைச் செய்யலாம். பாபஞ் செய்தவனும் மரணத்தைக் கோரவேண்டாம்; ஏனெனின், ஒருகால் அவன் தன் ஆயுளுக்குள் தான் கேட்கும் மன்னிப்பால் ஆண்டவனால் பிழை பொறுக்கப்படவுங் கூடும். குறித்த காலம் வருமுன் மரணத்தைவிரும்பவும் வேண்டாம்; அதைக் கோரவும் வேண்டாம். ஏனெனின், நீங்கள்

---

இன்றும் காண்கின்றோம். இவர்களெல்லோரும் தாங்கள் இன்னமும் நம் நபிபிரானின்ஸல் மெய்யான உம்மத்தென்றுதாமா தங்களுக்குள் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறார்கள்? என்னே காலத்தின் திரிபு!

இறந்து போவீர்களேல், நிச்சயமாக நன்மைக்குச் சன்மானம் (இவ்வுலகில்) கிடைக்குமென்னும் எதிர் நோக்கமும் எண்ணமும் அழிந்துபோம். இன்னமும், நிச்சயமாக ஒரு மூமினுடைய ஆயுள் நீட்சியானது அவனுடைய நற்கிரியைகளை விருத்தி செய்கின்றன.

56. "ஒரு முஸ்லிமுடைய மனமார்ந்த நண்பனொருவனின் ஆவியானது பிரிந்து போகும்போது அந்த முஸ்லிமானவன் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருப்பானாயின், அவனுக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் என்னும் சுவர்க்கத்தினும் மேம்பட்ட சன்மானம் ஒன்றுமில்லை." ஆனால், தங்களுடைய குழந்தைகளைப் பறிக்கக் கொடாதவர்களாயிருக்கும் உம்மத்துக்கள் என் செய்யவேண்டும்? "அப்

படியாயின், நான் அவர்களுடைய குழந்தைபோ லிருக்கிறேன்; அவர்களுடைய மறுமைக்கு வேண்டியதைத் தையாரிக்க நான் முன்னால் செல்லப் போகிறேன்; அவர்கள் தங்களுடைய குழந்தைகளைச் சாகக் கொடுத்தபின் அவர்களுடைய துரதிருஷ்டத்தையும் மனக்கவலையையும் சகித்துக் கொண்டிருக்கும் பொறுமைக்காக அவர்களுக்கு ஆண்டவன் சன்மானம் கொடுக்கிறான். ஆனால், என்னுடைய இஷாஅத்தே இஸ்லாம் வேலையால் அவர்களுக்கு என்ன துரதிருஷ்டம் நேர்ந்ததோ, அப்படிப் பட்ட நஷ்டம் அவர்களுக்கு ஒருபோதும் நேரிட்டதில்லை; ஏனெனின், என்னுடைய பக்தர்கள் தங்களுடைய பெற்றோரைக் காட்டினும் பிள்ளைகளைக் காட்டினும் என்னை அதிகமாக

நேசிக்கிறார்கள்,'' என்று எம்பெருமானார்^ஸல் விடை பகர்ந்தார்கள்.

57. மூமினானவர் எப்பொழுதும் சுகத்தையே அனுபவிக்கிறார்; ஏனெனின், அவருக்குச் சுகமான காரியம் நிகழும் பக்ஷத்தில் ஆண்டவனைச் சிந்தித்து வந்திக்கின்றார்; ஆனால், துக்கமான காரியம் நிகழும்போதும் அந்த ஆண்டவனையே சிந்தித்து அந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுகின்றார்; ஆதலின், ஒரு மூமினுக்கு எல்லா விதத்திலும் நன்மையே கிடைக்கிறது; ஒருவாய் அன்னத்தைத் தன் மனைவியின் வாயில் தீற்றுவதற்காகவும் அவருக்கு நன்மை கொடுக்கப்படுகிறது.

58. இதைக் கவனியுங்கள்! நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தின் வழி

யே ஒரு பிரேதம் கொண்டுவரப் பட்டது; அதைக் கண்டவுடன் ரஸூலுல்லா அவர்கள் எழுந்து நின்றார்கள்; அதைப் பார்த்து அருகிலிருந்த தோழர்கள், "இஃதொரு எஹூதியின் பிரேதம்," என்றார்கள். அதைக் கேட்டு, "அந்தப் பிரேதத்தில் ஓர் ஆத்மா குடிகொண் டிருந்த தில்லையா? அதைப் பார்த்து நாம் அச்சங்கொள்ள வேண்டாமா?" என்று நம் நபிகள் பெருமானார் (இவர்களுக்கு இறைவனது சுபசோபனம் உண்டாகுக) அவர்களுக்குப் புத்தி கூறினார்கள்.

59. ஒரு முஸ்லிமுக்கு மாணமானது ஒரு நன்மையான காரியமாகவே யிருக்கிறது. உங்களுடைய இறந்து போன முன்னோர்களை ஞாபகப்படுத்திக் கொண்டு, அவர்களைக் குறித்து நல்ல விதமாகவே பேசுங்கள்; அவர்

களைக் குறித்து எப்பொழுதும் இழிச் சொல் கூறவேண்டாம்.

60. குர்ஆன் ஷரீபில் ஐந்து விஷயங்கள் குறிக்கப்பட் டிருக்கின்றன; அவை, சட்டத்துக்கு உடன்பாடான விஷயங்களும், சட்டத்துக்கு மாற்றமான விஷ்யங்களும், ஸ்பஷ்டமாகவும் அழுத்தமாகவும் கூறப்பட்ட உபதேசங்களும், மறைவான இரகசியங்களும், உதாஹரணங்களுமா யிருக்கின்றன. ஆதலின், ஏவலான விஷயங்களைச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவையென்றும், விலக்கலான விஷயங்களைச் சட்டத்துக்கு மாற்றமானவையென்றும் கருதி, உண்மையான உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்து, மறைவானவற்றை யெல்லாம் நம்பி, உதாஹரணமான விஷயங்களிலிருந்து நல்லறிவைக் கற்றுக் கொள்ளுவீர்களாக.

61. உங்களை நீங்களே துன்புறுத்திக் கொள்ளாதீர்கள்; இன்றேல், இறைவன் உங்களைத் தண்டிப்பான்.

62. நிச்சயமாக உங்களுக்குக் கட்டளை யிடப்பட்டதி லிருந்து பத்திலொரு பகுதியை யேனும் அலக்ஷியம் செய்வீர்களேல், நீங்கள் நாசமடையக் கூடிய அப்படிப்பட்ட காலத்தில் நீங்கள் இப்பொழுது வசித்து வருகின்றீர்கள். இதன் பிறகு ஒருகாலம் வரும்; அப்பொழுது இப்பொழுதுள்ள கட்டளைகளுள் பத்திலொரு பங்கு மட்டுமையேனும் ஒருவர் செய்யக் கூடுமாயின், அவர் ஈடேற்றம் பெறுவார்.

63. மனித வர்க்கத்தார் சரியான பாதையை ஒரு முறை கண்டு பிடித்து விடுவார்களாயின், மறுபடியும் குதர்க்கங்களில் தலையிட்டா லொழிய ஒரு

போதும் தவறான வழியில் செல்ல மாட்டார்கள்.

64. எவனொருவன் பரி சுத்தான ஆகாரத்தைத் தின்று கொண்டும், என்னுடைய சட்டதிட்டங்களை அனுஷ்டித்துக் கொண்டும், மனித வர்க்கத்தாருக்கு எவ்வகைத் தீங்கும் செய்யாமலும் இருக்கிறானோ, அவன் ஜன்னத்துல் பிர்தௌஸில் நுழைவான்.

65. ரஸூலுல்லா அவர்கள் என்னை (அனஸை) நோக்கிப் பின் வருமாறு சொன்னார்கள்: "மகனே! உன்னால் கூடும் பக்ஷத்தில் காலைமுதல் மாலை வரையிலும், மாலை முதல் காலை வரையிலும் எவரைக் குறித்தும் அசூயை கொள்ளாமல் உன் மனத்தைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்வாய். ஓ, என் மகனே! இஃது என்னுடைய சட்டங்களுள் ஒன்றாயிருக்கும்; என்

சட்டங்களை நேசிப்பவன் என்னை நேசித்தவ னாகிறான்."

66. "நிச்சயமாகவே பனீ இஸ்ராயீல் கூட்டத்தார்கள் எழுபத்திரண்டு கூட்டமாகப் பிரிந்து விட்டார்கள்; ஆனால், என்னுடைய உம்மத்துக்களோ எழுபத்து மூன்று கூட்டமாகப் பிரிந்து விடுவார்கள்; அவர்களுள் ஒரு கூட்டத்தாரைத் தவிர மற்றெல்லோரும் மறைந்து போவார்கள்," என்று நபி பெருமானாரவர்கள்ஸல் சொன்ன போது, உடனிருந்த தோழர்க ளெல்லோரும், "அவர்கள் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு, "நானும் என் நண்பர்களும் அனுஷ்டித்து வரும் மார்க்கத்தைப் பின் பற்றுகிறவர்களே அவர்கள் ஆவார்கள்," என்று மறுமொழி கூறினார்கள்.

67. ஆண்டவனுக்குப் பயந்து எனக்

குப் பின்வரும் பிரதிநிதிக்கு, அவர் ஒரு கருநிறமுள்ள அடிமையாயிருந்த போதிலும், கீழ்ப் படிந்து நடப்பீர்களாக, என்று நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். உங்களுள் எனக்குப் பின்னே ஜீவித் திருப்பவர்கள் பெரும் பெரும் மதப்பிரிவினைகளையெல்லாம் காண்பார்கள். ஆதலின், என்னுடைய வழிகளையும், என்னுடைய பிரதி நிதிகளின் வழிகளையும் உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். என்னுடைய பிரதிநிதிகள் தாங்களே நேர்வழியைக் கண்டு பிடித்து உங்களையும் நேர்வழியில் நடத்துவார்கள். என்னுடைய சட்டதிட்டங்களையெல்லாம் அதிக ஆர்வத்துடன் பற்றிப் பிடித்து அவற்றின்படி உறுதியாக நடந்து கொள்ளுங்கள்.

68. குர்ஆன் ஷரீபில் விலக்கப் பட்

டிருப்பதல்லாமல் வேறொன்றையும் ஆண்டவன் விலக்கிவைக்க வில்லையென்று உங்களுள் எவரேனும் சந்தேகிக்கின்றாரோ? ஜாக்ரதையா யிருந்து கொள்ளுங்கள்! குர்ஆன் ஷரீபில் கூறப் பட்டிருக்கும் விலக்கல்களையும், அதில் கூறப்படாத மற்றும் சில விலக்கல்களையும் நீங்கள் விலக்கி வைக்க வேண்டுமென்று நான் நிச்சயமாக ஆண்டவன்மீது சத்தியம் செய்து கட்டளை யிடுகிறேன்: வேதக் காரர்களாகிய யூதர், கிறிஸ்தவர் முதலிய ஜாதியார்களின் விடுதிகளுக்குள் அவர்களுடைய அனுமதியில்லாமல் நுழைவதையும்; அவர்களுடைய பெண்டுகளைப் புடைப்பதையும், அவர்களுடைய கனிவர்க்கங்களைத் திருடித் தின்பதையும் சட்ட விரோதமான காரியங்களென்று ஆண்டவன் உங்களுக்குக்

கட்டளை யிடுகிறான்.

69. இஸ்லா மார்க்கமானது நிர்ப் பாக்கியமான நிலைமையிலிருந்து ஆரம் பமாயிற்று; அதன் ஆரம்ப காலத்தி லிருந்த நிர்ப்பாக்கியமான நிலைமைக்கு அது மீண்டும் சீக்கிரம் வந்துசேரும்; அப்பொழுது உறுதியான நம்பிக்கை யை யுடைய நீங்கள் முகமலர்ச்சியு டன் சகித்திருக்க வேண்டும்.

70. ஒரு நபியானவர் அவதரித்த போது, அவருடைய உபதேசங்களை ஏற்றுக்கொண்டு, அவருடைய சிஷ்யர் களாக ஆய், அவருக்கு நண்பர்களாக வும் தோழர்களாகவும் மனித்வர்க்கத் தாருள் சிலர் ஆகாம லிருக்கும்படி யான எந்தத் தூதலரயும் அனுப்பின தில்லை; அதன் பிறகு தாங்கள் உபதே சம் செய்வதே போல் நடந்து காட்ட முடியாமலும் உத்தாவிடப் படாத

தைச் செய்து கொண்டும் இருக்கக் கூடியவர்களும் பிறந்திருக்கிறார்கள்; ஆதலின், அப்படிப் பட்டவர்களைக் கையினாலும் வாயினாலும் மனத்தினாலும் எதிர்க்கக் கூடியவர்க ளெல்லாரும் மூமின்களா யிருக்கிறார்கள்; இதைத் தவிர்த்து ஈமான் என்பதில் வேறொன்றும் ஒரு 'கடுகுவிதை' யவ்வளவுகூட இல்லை.

71. இவ்வுலக முடிவுகாலத்தில் மனிதர்கள் பொய்யர்களா யிருப்பார்கள்; நீங்களாவது உங்களுடைய மூதாதைகளாவது எப்பொழுதும் கேட்டிராத அப்படிப்பட்ட கதைகளை யெல்லாம் சொல்லிக்கொண்டு திரிவார்கள். அப்பொழுது அவர்கள் உங்களை வழிக்கேட்டில் இழுத்துக் கொண்டுபோய்ச் சண்டையிலும் சச்சரவிலும் சேர்த்து விடாம லிருக்கும் பொருட்டு நீங்

கள் அவர்களை விலக்கிக் கொள்ளுங்கள்.

72. என்னுடைய மார்க்கமானது சோனா மாரியைப் பொழியக் கூடிய மேகங்கள்போல் இருக்கின்றது; அம் மாரியில் சிலபாகம் பரிசுத்தமான நல்ல நிலத்தில் விழுந்து பசும்புல்லை முளைக்கச்செய்கின்றது; இன்னும் சில பாகம் குட்டங்களில் விழுந்து மனிதர்களுக்குப் பிரயோஜனமாகின்றது; ஆனால், மிகுதிச் சிலபாகம் மேட்டு நிலங்களில் பெய்து அங்கேயும் பிரயோஜனத்தைத் தருகின்றது; அவ்வாறாயின், முதல் இரண்டுவகையான மழைகளும் ஆண்டவனுடைய மார்க்கத்தை யுணர்ந்து, அதை மற்றையோருக்குப் போதிக்கும் மனிதர்களுக் கொப்பாயிருக்கும்; மூன்றாவது வகையைச் சேர்ந்த மனிதர்கள் சன்மார்க்கத்தை

நன்கு கவனியாமலும் அதன் நேரான பாதையில் அலக்ஷிய புத்தியுடையவராகவும் இருந்து வருவார்கள்.

73. நானொரு மனிதனைக் காட்டினும் மற்றொன்றுமில்லை; மத சம்பந்தமாக உங்களுக்கு நான் ஏதேனும் கட்டளையிடுவேனாயின், அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்; ஆனால், இவ்வுலக சம்பந்தமான காரியங்களில் நான் உங்களுக்கொரு உத்தர விடுவேனாயின், அப்பொழுது நானொரு மனிதனைக் காட்டினும் அதிகமாயிருக்க மாட்டேன்.

74. ஆண்டவனுடைய மகா கொடிய விரோதிகள் யாரெனின், அவர்கள் தாம் இஸ்லாத்தில் சேர்ந்த பிறகும் குபிரியத்தான காரியங்களைச் செய்பவர்களும், தக்க காரணமில்லாமல் மனிதனுடைய இரத்தத்தைச் சிந்துபவருமா யிருக்கிறார்கள்.

75. பரலோக வாசத்துக்கு நம்முடைய புதைகுழிதான் முதற்படியாயிருக்கிறது.

76. மற்ற மனிதர்கள் உம்மைக் கொன்றபோதிலும் தீயிட்டுக்கொளுத்தியபோதிலும் ஆண்டவனுக்கு வேறெந்த வஸ்துவையும் இணைவையாதீர்; உம்முடைய பெண்ஜாதியையும், பிள்ளைகளையும், ஆஸ்தியையும் விட்டு விடும்படியாக உம்முடைய பெற்றோர்கள் கட்டளையிட்ட போதிலும், அவர்களை நீர் வேண்டுமென்று துன்பப் படுத்தாதீர். ஒருபோதும் மதுபானம் செய்யாதிருப்பீராக; ஏனெனின், எல்லாக் கெடுதல்களுக்கும் அதுதான் மூலகாரணமாயிருக்கிறது; எவ்வகைத் தீமையினின்றும் விலகிக் கொள்வீராக; மனிதவர்க்கத்தில் கொள்ளை நோய் வரும்போது, அவர்களுடன்

நீர் இருக்கும்படி நேர்ந்தால், அவர்களுடனேயே தங்கி விடுவீராக; உம்முடைய குழந்தைகளையும் பாதுகாப்பீராக.

77. நபிகள் நாயகமவர்கள்ஸல் "ஒரு மனிதன் கள்ளப்புணர்ச்சி செய்து விடுவானாயின், அவனுடைய ஈமான் பறிபட்டுப் போகின்றது; ஆனால், அவன் அப்படிப்பட்ட ஜினாவான கெட்ட காரியங்களை விட்டுவிடுவானாயின், ஈமான் மீண்டும் அவனிடம் வந்துவிடும்," என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

78. ஈமானுக்கு மூன்று மூல வேருண்டு: அவற்றுள் ஒன்றாவது, "ஒரே ஆண்டவனைத்தவிர வேறு தெய்வமே கிடையாது," என்று சொல்லியும், ஒருவனைத் தொந்தரை செய்யாமலும், அவன் ஏதேனுமொரு தவறு செய்து

விடின், உடனே அவனைக் காபிரென்று சொல்லாமலும், ஏதேனுமொரு பாப த்தை அவன் இழைத்துவிடின், அவனை அவமதிக்காமலும் இருப்பது தான்.

79. "பிறர் மனை விழைபவனும், பிறர் பொருளை அபகரிப்பவனும், மது பானம் செய்பவனும், கொள்ளையடிப் பவனும், அயலார் சொத்தை அவர் அனுமதியில்லாமல் சொந்த உபயோ கம் செய்து கொள்ளுபவனும் ஒரு மூமினாக இருப்பது முடியாது; ஆத லின், ஜாக்ரதையா யிருங்கள்! அதி ஜாக்ரதையா யிருங்கள்!" என்று நம் முடைய ரஸூல் நாயகமவர்கள்ஸல் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

80. "அல்லாஹுத் தஆலாவுக்கு வேறொன்றை இணைவைப்பதும், உங் களுடைய மாதா பிதாக்களைத் துன்

புறுத்துவதும், உங்களுடைய மனித வர்க்கத்தைக் கொலை செய்வதும், நீங்களே தற்கொலை புரிந்துகொள்வதும், பொய்ச் சத்தியம் பண்ணுவதும், மகா கொடிய பாபங்களா யிருக்கின்றன," என்று நம் நபிபெருமானு ரவர்கள்ஸல் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

81. நான் நம்முடைய ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக்கண்டு, மேலான ஈமானின் இலக்ஷணம் எதுவென்று கேட்டேன். அதற்கு அவர்கள், "ஆண்டவனை விசுவசிப்பவனை விசுவசித்தலும், ஆண்டவனை வெறுப்பவனை வெறுத்தலும், ஆண்டவனுடைய திரு நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பதில் உம்முடைய நாவை உபயோகிப்பதும் நல்ல ஈமானுயிருக்கும்," என்று அரு

ளிச் செய்தார்கள். இன்னும் என்ன வென்று கேட்டேன். "மற்ற மனிதர்கள் உமக்கு எதைச் செய்தால் திருப்தியா யிருக்குமோ, அதையே நீரும் அவர்களுக் கெல்லாம் செய்யவேண்டும்; உமக்கு எதுவொன்று வேண்டாமென்று நினைக்கிறீரோ, அதை அவர்களுக்குச் செய்யவேண்டாம்," என்று மறுபடியும் அறிவுறுத்தினார்கள்.

82. "இஸ்லா மென்ப தென்ன?" என்று ரஸூல் நாயகமவர்களைக் கேட்டேன். அதற்கு, "ஏவல் விலக்கல்களை நன்றாகப் பகுத்துணர்ந்து கொள்வது தான்," என்று அருளிச் செய்தார்கள். ஈமானில் மேன்மையானது என்ன வென்று கேட்டேன். "விசுவாசமான குண விசேஷத்துடன் நடந்து கொள்வதுதான்," என்று விடை பகர்ந்தார்கள். மகாமேலான ஹிஜ்ரத் என்ன

வென்று கேட்டேன். "ஆண்டவனால் வேண்டா மென்று விதிக்கப்பட்டதி லிருந்து விலகிக் கொள்வதுதான்," என்று பதில் கூறினார்கள்.

83. "இஸ்லா மென்பது என்ன?" என்று நம் நபிகள் நாயகமவர்களைக் கேட்டேன். "வார்த்தைச் சுத்தமும் தரும சிந்தனையுந்தாம்," என்று அருளிச் செய்தார்கள்.

84. ஒருவன் தன்னுடைய நம்பிக்கை உறுதியா யிருக்கிறதா வென்று அறிந்து கொள்ளுதற்கு வேண்டிய அடையாளம் என்ன வென்று நபிகள் நாயகமவர்களை ஒரு மனிதன் கேட்டான். "நீர் செய்திருக்கும் ஒரு நன்மையான காரியத்திலிருந்து உமக்கு இன்பமும், நீர் செய்துவிடும் ஒரு பாபமான காரியத்திலிருந்து உமக்குத் துன்பமும் உம்முடைய மனத்தில்

வினையுமாயின், அப்பொழுது நீர் ஓர் உண்மையான உறுதியுள்ளவரா யிருப்பீர்," என்று அருளிச் செய்தார்கள். அதற்கு அம்மனிதன், "பாபமென்பதென்ன?" என்று கேட்டான். "எதேனுமொரு காரியம் உம்முடைய மனச்சாக்ஷியை இடிக்கும் பக்ஷத்தில், அதை உடனே விட்டுவிடுவீராக," என்று நபிபெருமானார்ஸல் விடை பகர்ந்தார்கள்.

85. என்னை நோட்டமிடுகிறவன் சத்தியத்தை நோட்டமிட்டவனாவான்.

86. தினம் கொஞ்சமாக விருத்தியடைபவன் தளர்ந்த மனத்தையுடையவனென்றே கூறவேண்டும். (அஃதாவது, பரிபூரணமான நிலைமைக்கு வருவதற்கு அவன் இன்னும் நெடுந்தூரம் செல்லவேண்டும்).

87. "அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறொரு தெய்வமும் இல்லை," என்று சொல்லிவிட்டால் அது மட்டும் சுவர்க்கத்தின் சாவியாக மாட்டாதோ வென்று ஜனங்கள் நம் நபிகள் நாயகமவர்களைக் கேட்டார்கள். "ஆம், அந்தச் சாவிக்குரிய காவலாளிகள் பலருளர்; அவர்களிடத்தி லிருப்பதைப் போன்ற சாவியை மட்டும் நீங்கள் கொண்டு செல்வீர்களேல், அப்பொழுதுதான் சுவர்க்கம் உங்களுக்குத் திறக்கப்படும்; இன்றேல் ஒன்றும் பண்ணமுடியாது," என்று அவர்களுக்கு விடைபகர்ந்தார்கள்.

88. நிச்சயமாகவே அல்லாஹுத்தஆலாவானவன் தன்னுடைய அடியார்களின் கையிலிருந்து அறிவைப் பிடுங்கிக் கொள்வதில்லை; ஆனால், கற்றறிந்தவர்களை அவன் பற்றிக்கொள்வதால்

அவர்களுடன் அந்த அறிவும் பறிபட்டுப் போகின்றது; ஆதலின், கற்றறிந்தவர்களெல்லோரும் காலஞ்சென்று போய்விடின், மூடர்கள்தாம் எல்லாக் காரியங்களுக்கும்தலைமை வகிக்க ஆரம்பிப்பார்கள். வியவகாரங்களெல்லாம் அம்மூட சிகாமணிகளிடத்தில்தாம் தீர்மானத்துக்காகக் கொண்டுவரப்படும்; அவர்கள் அப்பொழுது தாங்களும் கெட்டுத் தம்பிமார்களையும் கேடான வழியில் கொண்டுபோய் ஞானசூன்யமான நியாயமே வழங்குவார்கள்.

89. "ஓ முஹம்மத்! ஜனங்களை விட்டுப் பிரிந்து ஏகாந்தத்தி லிருக்கும்போது உம்முடைய ரக்ஷகனையே ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பீராக; வணக்கத்தையே உம்முடைய உறக்கமாகவும்,பசியையே உம்முடைய ஆகாரமாகவும் கொள்ளக்கடவீர்."

90. அளவுக்குமிஞ்சிய *போனகத்தாலும் பானகத்தாலும் உங்களுடைய ஹிருதயங்களைக் கொன்றுவிடாதீர்கள்.

91. மகா மேலான ஜிஹாதாவது தன்னையே தான் வெல்லுவதாகும்.

92. பசித்திருப்பதனால் உங்களுடைய ஹிருதயங்களைப் பிரகாசப்படுத்திக் கொள்ளுங்கள்; பசியாலும் தாகத்தாலும் உங்களையே நீங்கள் வென்றுகொள்ள முயலுங்கள்; பிர்தெளஸென்னும் சுவர்க்கத்தின்வாயிலைப் பசியென்னுங் கருவிகொண்டு தட்டிக்கொண்டேயிருங்கள்.

93. ஒருமணிநேரம் தியானம் செய்வதானது ஒருவருஷத்தின் வணக்கத்தினும் சிறந்ததாயிருக்கிறது.

---

*போனகம்—போஜனம். பானகம்—பருகும் நீர்.

94. தர்மம் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையா யிருக்கிறது. தர்மம் செய்வதற்கு வேண்டிய தனம் படைக்காதவன் ஒரு நல்ல காரியத்தைச் செய்யட்டும்; அல்லது ஒரு தீயகாரியத் தினின்றும் விலகிக் கொள்ளட்டும். இதுதான் இவனுடைய தர்மம்.

95. தானம் செய்ய வேண்டியது உங்களுக்கொரு கடமையா யிருக்கிறது. பணக்காரர்க ளிடமிருந்து தானம் வாங்கி ஏழைகளுக்குப் பங்கிட வேண்டும்.

96. ஏக நாயனையும், இனிவரும் நியாயத் தீர்ப்புநாளையும் நம்பின ஒருவர் (அஃதாவது, ஒரு முஸ்லிம்) தன்னுடைய விருந்தினரைக் கண்ணியப் படுத்துவாராக.

97. நாகமானது இவ்வுலகத்திலு

ள்ள ஆனந்தம் விளைவிக்கக் கூடிய செய்கைக ளென்னும் திரையால் மறைக்கப்பட்டிருக்கிறது; சுவர்க்கமானது கஷ்ட நிஷ்டூரங்களாகிய திரையின் பின்னே அமைக்கப்பட்டிருக்கிறது.

98. இறந்த மனிதர்களைக் குறித்து எப்பொழுதும் இழிவாகக் கூறவேண்டாம்.

99. இயற்கைக்கு ஒத்த வண்ணமாக இலேசாக அமைக்கப்பட் டிருக்கும் (இஸ்லாம்) மார்க்கத்தில் நடப்பதற்கு வேண்டிய இயல்புடன்தான் ஒவ்வொரு குழந்தையும் இவ்வுலகில் பிறக்கின்றது. ஆனால், அதன் பெற்றோர்களே அக்குழந்தையை ஒரு யூதனாகவோ, அல்லது கிறிஸ்தவனாகவோ, அல்லது மஜூஸியாகவோ செய்து விடுகிறார்கள்.

(ஆதலின், கிறிஸ்தவர்கள் கூறுவதே போல் ஞானஸ்நானம் பெறாமல் ஒரு குழந்தை இறந்துவிடுமாயின், அஃது ஊழியூழிக் காலம் நரகத்தில் கிடந்து வேகுமென்று எமதிஸ்லாம் மார்க்கம் இயம்பவில்லை.)

100. பலாஸிபாவானது (தத்துவ சாஸ்திரம்) நம்பிக்கை யுடையவர்களின் (மூமின்களின்) காணாமற்போன ஒட்டகமா யிருக்கிறது; அதை நீங்கள் எங்கே கண்டபோதிலும் உடனே பிடித்துக் கொள்ளுங்கள்.

101. நல்லறிவானது சீனத்திலிருந்த போதிலும் (அஃதாவது, இவ்வுலகின் எந்த மூலையி லிருந்தபோதிலும்) அதைத் தேடிச் செல்லுங்கள்.

102. தொட்டிலி லிருந்து கட்டைக்குச் செல்லுமட்டும் நல்லறிவை நாடிச் செல்லுங்கள்.

103. நம்பிக்கையுடைய மூமின்க

ளின் தொழுகையே அவர்களுக்கு மிஃராஜா யிருக்கிறது; (அஃதாவது, ஆண்டவனுடைய சந்திப்பான லிக் காவைப் பெறுவதாயிருக்கிறது.)

104. எல்லாக் காரியங்களும் அவ்வ வற்றின் நோக்கத்துக்குத் தக்கவாறு தீர்மானம் செய்யப்படும்.

105. அவரவருடைய சுவர்க்கமா னது அவரவரின் மாதாக்களின் பாதத் தடியி லிருக்கிறது.

106. தேகத்துடன் ஹிருதய(மன) மானது தொடர்ந்து நில்லாமல் தொழு வோமாயின், அந்தத் தொழுகையை ஆண்டவன் ஏற்றுக் கொள்வதில்லை.

107. தொழுகையினால் தன்னு டைய பாவங்களையும் தீமைகளையும் பகைத்து ஒழிக்காத மனிதன் தன்னு டைய நாயனிடத்திலிருந்து அதிக தூரத்தில் விலகிப் போவதல்லாமல்,

வேறொரு விஷயத்திலும் அவன் விருத்தி யடைவதில்லை

108. இவ்வுலகத்தை அளவுக்கு மீறி ஆசிப்பதுதான் எல்லாவிதமான கேடுகளுக்கும் மூலகாரணமா யிருக்கிறது.

109. நீர் பேசும்போது உண்மையையே பேசுவீராக; ஒருமுறை வாக்களித்துவிட்டால், அதைநிறைவேற்றி வைப்பீராக; உம்மிடம் பிறர் ஒப்புவித்த அமானத்தைப் பூர்த்தி செய்வீராக; பிறர் மனை (ஜினு) விழையாதிருப்பீராக; ஜினுவில் நின்றுந் தப்புவீராக; ஆபாசமான துராசைகளை ஒழித்து விடுவீராக; பிறரை அடிப்பதில் நின்றும், சட்ட விரோதமானதும் கெட்டதுமான வஸ்துவைத் தீண்டுவதினின்றும் உம்முடைய கையை விலக்கி வைப்பீராக. எப்பொழுதும்

ஆண்டவனையே தியானிப்பவர்கள் அவனுடைய நல்லடியா ராகின்றனர்; எப்பொழுதும் கோட் சொல்லிக் கொண்டும், மித்திர பேதத்தால் நண் பர்களை ஒருவரை விட்டு ஒருவரைப் பிரிவினை செய்து கொண்டும், நல்ல மனிதர்களிடத்தில் என்னவிதமான தீமைக ளுண்டென்று அவற்றைத் தேடிக்கொண்டும் திரிபவர்களே ஆண் டவனிடத்தில் கெட்ட அடியார்களாய் விடுகிறார்கள்.

110. •இஸ்லாத்தில் ஈமான் கொள் ளாத காபிரும் லோக ரக்ஷகனது கிருபா சமுத்திரத்தின் அளவை அறி வானாயின், அவன் தனக்குச் சுவர்க் கானந்தம் கிடைக்காமற் போகுமோ வென்று மனம் நோவ வேண்டுவ தின்று.

111. ஒரே தெய்வத்தி னிடத்தி

லும் இனி வரப்போகும் நியாயத் தீர்ப்பு நாளின்மீதும் உறுதிகொண்ட ஒருவர் (அஃதாவது, ஒரு முஸ்லிம்) நல்ல விஷயங்களையே பேசட்டும்; இன்றேல், மௌனமா யிருக்கட்டும்.

112. ஒரே தெய்வத்தினிடத்திலும், இனி வரப்போகும் நியாயத் தீர்ப்பு நாளின்மீதும் உறுதிகொண்ட ஒருவர் (அஃதாவது, ஒரு முஸ்லிம்) தம்முடைய அயல் வீட்டு மனிதர்களுக்குத் துன்பம் செய்யாதிருப்பாராக.

113. மனிதர்களிடம்பேசும்போது அவரவருடைய மனோசக்திக்குத் தக்கவாறு பேசவேண்டும்; எல்லாரிடத்திலும் எல்லா விஷயத்தையும் பற்றிப் பேசுவீரேல், சிலர் நீர் பேசுவது இன்னதென உணரமுடியாமல் தீயவழியில் சென்றுவிடக்கூடும்.

(இதனால் நல்லவிஷயங்களை எல்லோருக்

கும் போதிக்கவேண்டா மென்பது தாத்பரியமன்று. மூளையில் நுழைவது கடினமாயிருந்தபோதிலும், நல்ல விஷயங்களை ஒருவருக்கும் ஒளிக்காமல் எல்லோருக்கும் கற்றுக் கொடுப்பதே முறையாகும். மேற்கூறிய ஹதீதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, யார் என்ன சந்தேகம் கேட்டபோதிலும், இஃது உனக்கு வேண்டாம்; இது நீ கேட்கக்கூடிய தன்று; இதை அறியும்படியான பக்குவம் உனக்கு இன்னும் வரவில்லை, என்று சில குருமார்கள் மற்ற மனிதர்களிடம் சாக்குப் போக்குக் கூறி வருவது கூடாத காரியமாகும். இஃது அறிவைவிருத்தியாக வொட்டாமல் தடுப்பதே யாகும். இப்படிப்பட்ட விடையானது பல சமயங்களில் குருமார்களின் அறியாமை யையே வெளிக் காட்டுகின்றது. எந்த மனிதனுக்கும் நல்லறிவைப் புகட்டவேண்டா மென்றும், அவனுக்குண்டாகும் சந்தேகங்களை ஒருபோதும் நிவர்த்தி செய்ய வேண்டா

மென்றும் மேற்சொன்ன ஹதீது யாதொரு விதமான கட்டளையையும் இடவில்லை.)

114. மனிதகுமாரன்வளர்ந்துவரும் போது, அவனுடன் இன்னுமிரண்டு குணங்களும் விருத்தியடைந்து வருகின்றன: அவை அதிகமான பண ஆசையும், அதிகமான ஆயுள் அவாவுமாம்.

115. அவனவனும் தன் தன்னுடைய குணவிசேஷத்துக்குத் தக்கவாறே ஆத்மஞான வழியிலும் ஆண்டவனால் கைதூக்கி விடப்படுகிறான்.

116. உன்னுடைய நடத்தையே உனக்குச் சன்மானத்தையும் தண்டனையையும் அது அதற்கு ஏற்றவண்ணமாகக் கொண்டுவந்து கொடுக்கும்.

117. ஒவ்வொரு மனிதனிடத்திலும் இரண்டுவிதமான குணம் காணப்படுகின்றன: ஒன்று, அவனை நல்ல காரியங்களைச் செய்யும் படியாகத்

தூண்டி, உற்சாகத்தை ஊட்டுகின்றது; மற்றொன்று, அவனைத் தீய காரியங்களில் தலையிடும் படியாகத் தூண்டுகின்றது. ஆனால், ஆண்டவனுடைய உதவியானது அவனுக்கு அதி சமீபத்திலிருக்கிறது; எவனொருவன் தன்னுடைய மனத்தின்கண் எழும் தீய குணங்களை வெல்லவேண்டுமென்று விரும்பி, ஆண்டவனிடம் உதவி தேடுகிறானோ, அவனுக்கு அப்படிப்பட்ட உதவி கிடைக்கின்றது.

118. "ஓ, மஆது! நீர் எமன் தேசத்தில் ராஜ்ய பரிபாலனம் புரியும்போது யாருடைய சட்ட திட்டங்களைப் பின்பற்றி யொழுகுவீர்?" என்று நமது நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூல் (இவர்கட்கு இறைவனருளும் அவனன் மாராயமு முண்டாகுக) அவர்கள் கேட்டார்கள்; அதற்கு

அவர், "குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டிருக்கும் சட்டதிட்டங்களைப் பின்பற்றி நடப்பேன்," என்று மறுமொழி கூறினார். "ஆனால், உமக்குவேண்டிய ஏதேனுமொரு விஷயம் குர்ஆன் ஷரீபில் காணப்படாவிடின், பிறகு என் செய்வீர்?" என்று எம்பெருமானவர்கள் வினவினார்கள்; அதற்கு அந்த மஆது, "ஆண்டவனது திருத் தூதரவர்களைப் பின்பற்றி நடப்பேன்," என்று விடை பகர்ந்தார். மறுபடியும் ரஸூல் நாயகமவர்கள், "அந்தத் திருத்தூதருடைய உதாஹரணத்திலும் உமக்கு வேண்டிய வழி புலப்படாவிடின், அப்பால் என் செய்வீர்?" என்று வினவினார்கள்; அதற்கு அவர், "யாரஸூலுல்லா(ஹ்)! பிறகு யான் என்னுடைய சொந்தமான பகுத்தறிவையும், நியாயமான முறையையும் பின் பற்று

வேன்," என்று சற்றும் தயங்காமல் விடைபகர்ந்தார்.

(இதைக் கண்ணுற்ற பின்னருமா மத விஷயத்தில் பகுத்தறிவுக்கு இடமில்லை யென்று கருதுகின்றீர்கள்?)

119. மனிதனுடைய வணக்கத்தில் ஆறிலொரு பங்கா? அல்லது பத்தி லொரு பங்கா? ஆண்டவனால் அங்கீ கரிக்கப்படுகிற தென்று ஒரு வரை யறையான எல்லை கட்டிவிட முடி யாது; ஆனால், ஒருவன் தன்னுடைய வணக்கத்தில் எவ்வளவுக் கெவ்வளவு பகுத்தறிவைச் செலுத்தி, உண்மை யான பக்தியுடன் உழைக்கிறானோ, அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய வணக்கமானது அல்லாஹுத் தஆலா வால் அங்கீகரிக்கப்படும்.

120. இவ்வுலகில் நீங்கள் செய்யும் நன்மையும் தீமையுமே நாளை நியாயத்

தீர்ப்பு நாளின்போது உங்களுடைய விசாரணைக்குச் சாக்ஷியமாக எடுத்துக் கொள்ளப்படும்; அப்பொழுது உங்களுடைய சன்மானத்துக்கும் சிக்ஷைக்கும் உங்களுடைய நன்மை தீமைகளே காரணமா யிருக்கும்.

121. ஒரு நண்பனை மற்றொரு நண்பனுடன் சேர்த்து வைக்கும் பாலமானது மரணமா யிருக்கிறது.

122. நம்பிக்கையுள்ள மூமின்களுக்கு இவ்வுலகமானது ஒரு சிறைச்சாலைபோ லிருக்கிறது; ஆனால், நம்பிக்கை யற்றவர்களுக்கு இகலோக வாழ்க்கையே சுவர்க்கானந்தமா யிருக்கிறது.

123. ஆண்டவனுடைய ஞாபகத்தை உண்டாக்கக் கூடியதும், அத்தகைய ஞாபகத்துக்கு உதவிபுரியக் கூடியதுமான காரியங்க ளல்லாமல், மற்

றும் இவ்வுலகில் காணப்படும் எல்லா வஸ்துக்களும், இவை யெல்லாவற்றிற்கும் பிறப்பிடமாயிருக்கும் இந்தத் தாணியும் சபிக்கப் பட்டவையாகவே காணப்படுகின்றன.

124. இவ்வுலகமானது ஹாருத், மாருத்தைக் காட்டினும் மிகக் கொடிய மந்திர மூர்த்தியா யிருக்கிறது; ஆதலின், நீங்கள் இதினின்றும் தப்ப முயலுங்கள்.

125. ஒரு தாயானவள் தன்னுடைய குழந்தையி னிடத்தில் பாராட்டும் பக்ஷத்தைக் காட்டினும் அதிகமாக ஆண்டவன் தன்னுடைய படைப்புக்களிடத்தில் பக்ஷம் பாராட்டுகிறான்.

126. அல்லாஹுத் தஆலாவை நீங்கள் நேரில் காண்பதேபோல் எண்ணி வணக்கம் புரியுங்கள்; ஏனெனின், நீங்கள் அவனைக் காணுமற் போயி

னும், அவன் உங்களைப் பார்த்துக் கொண்டே யிருக்கிறான்.

127. மரணத்தின் சகோதரன் தூக்கமா யிருக்கிறது.

127a. தூக்கம் சிறிய மரணமா யிருக்கிறது.

128. என்னைப் பின்பற்றிய மனிதர்களுள் சிலர் (தாங்கள் இவ்வுலகில் வசிக்கும்போது எவ்வித மிருகத்தின் குண விசேஷத்தை அதிகமாய்ப் பின்பற்றி யொழுகுகிறார்களோ, அதற்குத் தக்கவாறு) நாளை இறுதித் தீர்ப்பு நாளின் போது கூட்டங்கூட்டமான வாலில்லாக் குரங்குகளைப் போலவும், புலிகளைப்போலவும், நாய்களைப் போலவும், இன்னமும் பல்வகையான மிருகங்களைப் போலவும் வெளிப்படுவார்கள்.

129. பக்கீராயிருப்பதிலேயே (ஏழை

7845



யா யிருப்பதிலேயே) எனக்கு பக்ரு (பெருமை) இருக்கிறது.

130. ஒரு நாள் நமது ரஸூல் நாயகமவர்கள்ஸல் தங்களுடைய ஸஹாபாக்களான தோழர்களை நோக்கி, "உங்களுக்கு யோக்கியமான வண்ணமாய் ஆண்டவனுக்கு வணக்கம் புரியுங்கள்," என்று உத்தரவளித்தார்கள். உடனே அங்கிருந்த தோழர்கள், "யாரஸூலல்லா(ஹ்)! நிச்சயமாகவே நாங்கள் ஆண்டவனைத் துதித்து எங்ஙனாலியன்ற மட்டும் அவனை வணங்குகின்றோம," என்றார்கள். அதற்கு நம் நபிகள் நாயக மவர்கள், "அஃ தப்படியன்று! ஆனால், ஒருவன் தன்னாலியன்ற மட்டும் அல்லாஹுத் தஆலாவை வணங்குவதென்றால், அந்தத் தனிமுதற் கடவுளுக்கல்லாமல் மற்றெவர்க்கும் சிரவணக்கம்

புரியாமலும், ஆண்டவ னிடத்திலும் அவனது படைப்புக்களிடத்திலும் அகங்கார மமகாரத்துடன் நடந்து கொள்ளாமலும், தன்னையே தான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; பாப மான செய்கைகளினின்றும் பஞ்சேந் திரியங்களையும் பாதுகாக்க வேண்டும்; விலக்கப்பட்ட வஸ்துக்களைப் புசிப்பதி னின்றும் வாயைப் பத்திரப்படுத்த வேண்டும்; பாபமான எண்ணங்கள் மனத்துக்குள் புகுந்து விடாமல் அதைக் கெட்டிப்படுத்த வேண்டும்; மாணத்தை எப்பொழுதும் மனத்தில் நினைத்து, நமது சரீரத்தின் எலும்பு களும் அழுகும்படியான கதிக்குவந்து விடுமேயென்று அந்த எண்ணத்தை யும் எப்பொழுதும் அழுத்தமாய்ப் பற்றிப் பிடிக்கவேண்டும். எவரொரு வர் பரலோக இன்பத்தைப் பெரி

தென்று மதிக்கின்றாரோ, அவர் இக லோக அலங்காரங்களை யெல்லாம் இன்பமெனக் கொண்டாடா திருப்பாராக. ஆதலின், மேற்சொன்ன விதமாக வெல்லாம் நடப்பவர் எவரோ, அவரே தன்னாலியன்ற மட்டும் அல்லா(ஹ்)வைத் துதித்தவராவார்,'' என்று திருவாய் மலர்ந் தருளினார்கள்.

131. நபிபெருமானா ரவர்கள் (இவ்விகலோக வாழ்வைவிட்டுப் பிரிவதற்கு மூன்று தினம் முன்பாக) "அல்லாஹுத் தஆலாவின் விருப்பத்துக்கு முற்றிலும் கட்டுப்பட்டு, அவனது மன்னிப்பின் மீதும் மன இரக்கத்தின் மீதும் நம்பிக்கை வையா முன்னம் உங்களுள் ஒருவரேனும் மாணமடைதல்கூடாது,'' என்று திருவாய் மலர்ந் தருளியது எனக்குத் தெரியும்.

132. இவ்வுலக இன்பங்களை அடி

யோடழித்து நாசஞ் செய்யக் கூடியது மரணமென்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

133. இவ்வுலக சம்பந்தமான துன்பத்தைக் கண்டஞ்சி உங்களுள் எவரும் உயிரை விட்டு மரணமடைய விருப்பங்கொள்ளா திருப்பாராக; எவரே னுமொருவர் மரணமடையத்தான் வேண்டு மென்னும் விருப்பத்தால் தூண்டப்படுவாராயின், அவர் அப்படிப்பட்ட விருப்பமுண்டாகும் வேளையில், "ஏ என் னிறைவனே! என்னுடைய மனத்தின்கண் இவ்வுயிர் வாழ்க்கையா லுண்டாகும் இன்பம் ஜனிக்கு மட்டும் என்னைப் பிழைத்திருக்கச் செய்து; என்னுடைய மரணமானது எனக்கு இன்பமாய்க் காணப்படும் வேளையில் என்னை மரிக்கச் செய்வாயாக," என்று ஆண்டவனிடம் விண்

ணப்பம் புரிதல் வேண்டும்.

134. ஒரு யூதனுடைய, அல்லது ஒரு கிறிஸ்தவனுடைய, அல்லது ஒரு முஸ்லிமுடைய பிரேதமானது தூக்கிச் செல்லப்படும்போது, நீர் அதைக் காண்பீரேல், உடனே எழுந்து நிற்பீராக.

135. நபிகள்நாயக மவர்களுடன்ஸல் நான் அபூயூஸுபு என்னும் கொல்லர் வீட்டுக்குச்சென்றேன்; இப்ராஹீமின் செவிலித்தாயின் புருஷர் அந்த அபூயூஸுபு என்பவர். ரஸூல் நாயகமவர்கள் இப்ராஹீமை எடுத்து உச்சி மோந்து முத்தமிட்டு உள்ளமகிழ்ந்தார்கள். பிறகு மறுபடியும் நபிபெருமானுடன் இப்ராஹீமின் மரணகாலத்தில் அங்கே நான் சென்றேன். அப்பொழுது நபிகள் பிரானின் கண்களிரண்டும் அக்குழந்தையை உற்றுநோக்கிய வண்ண

மாயிருக்கும்போது, அவற்றினின்றும் கண்ணீர் வடிந்தது. ஒளபின் மகனுன அப்துர்ரஹ்மான் ரஸூலுல்லாவைப் பார்த்து, "யாரஸூலல்லா(ஹ்)! தாங்கள் கண்ணீர்விட்டு அழுவது தகுமோ?" என்றுவினவினர். "ஓ ஒளபின் குமாரரே! இந்தக் கண்ணீரானது கரிசனத்தால் உண்டாகிறது; இறந்தோர் மீதுண்டாகும் இரக்கத்தால் இப்படி நேரிடுகின்றது," என்று நபிபிரான்ஸல் மறுமொழி கூறினர்கள். பிறகு மறுபடியும் ரஸூலுல்லா அவர்கள் கண்ணீர்வடித்துக் கொண்டு, "நிச்சயமாகவே என் கண்களிலிருந்தும் நீர் வடிகின்றது; என் மனமோ உருகுகின்றது; ஆயினும், என் நாயகனுக்குப் பொருத்த மில்லாத தொன்றையும் யான் சொல்லவில்லை; ஏனெனின், ஏ இப்ராஹீம்! உன்னைவிட்டுப் பிரிய

நேரிட்டதால் என் உள்ளம் வருந்து கின்றது," என்று கூறினார்கள்.

136. "இப்பொழுது, வேற்றுமனித னொருவனுடைய மனைவியைக் கண்டு காதலிப்பதானது கண்ணால் செய்யும் ஜினவாகும்; விலக்கலான விஷயங்களை வாயினா லுரைப்பது நாவால் செய்யும் ஜினவாகும்," என்று எம்பெருமா னவர்கள்ஸல் இயம்பினார்கள்.

137. மனிதர்களை மன்னிப்பதற் காக வல்லாமல், ஆண்டவன் ஒருவரை யும் இவ்வுலகைவிட்டு அப்புறப் படுத் துவதில்லை; மேலும் அவனுடைய உடம்பின் வியாதிகளினாலும் வறுமை யினாலும் ஆண்டவன் அவனுடைய பாபத்தைப் போக்குகிறான்.

138. "ஏ முஹம்மதின் உம்மத்துக் களே! (அவரைப் பின்பற்று வோர் களே!) ஆண்டவனுடைய படைப்புக்

களாகிய ஆடவரும் பெண்டிரும் செய்யும் ஜினவைக் காட்டினும் மற்றொன்றையும் அவன் அவ்வளவு கடுமையாக வெறுப்பதில்லை," என்று அந்த ஆண்டவன்மீது சத்தியமாகக் கூறுகின்றேன்.

139. நிச்சயமாகவே எவ்வளவுக் கெவ்வளவு ஒருவனுக்குச் சிறுமையுண்டாகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அவனுக்கு அனுக்கிரகத்தின் பெருமை யுண்டாகிறது; அஃதாவது, ஒருவனுக்கு எவ்வளவுக் கெவ்வளவு வறுமையும் கொடுமையும் உண்டாகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய சன்மானமும் அதிகரிக்கும். நிச்சயமாகவே ஆண்டவன் மனிதர்களைச் சோதிக்கும்போது, அவர்களுக்கு வறுமையைக் காட்டுகிறான்; ஆதலின், வறுமையின் கொடுமையில்

ஒருவன் ஆண்டவன்மீது நம்பிக்கை வைத்து, அவன் செய்வ தெல்லாம் நம்முடைய நன்மைக்கே யென்று சாந்தி யடைவானாயின், அவனுக்கு ஆண்டவனுடைய அனுக்கிரகம் அதிக மாயுண்டாகிறது.

140. நிச்சயமாகவே நபிபெருமானா ரவர்கள் கூறினார்கள்: "எப்படிப்பட்ட துரதிருஷ்டமாவது, மனக்கிலேசமாவது, தவறுகளினு லல்லாமல் எந்த மனிதனுக்கும் உண்டாவதில்லை; மேலும் இவற்றுள் பெரும்பான்மையானவற்றை ஆண்டவன் மன்னித்து விடுகிருன்.

141. நோயாளியா யிருப்பவரைக் காலையில் சென்று ஒருமுஸ்லிம் யோக க்ஷேமம் விசாரித்தால், மாலைக்குள் அம்முஸ்லிமுக்கு எழுபதினுயிரம் மலக்குகள் ஆசி கூறுகின்றனர்; இன்னும்

அந்நோயாளியை மாலையில் சென்று வினவினால், மறுநாட் காலைக்குள் அம் முஸ்லிமுக்கு எழுபதினாயிரம் மலக்கு கள் ஆசிகூறுகின்றனர். எந்த நோயா ளியையும் இவ்வாறு க்ஷேமம் விசாரிக் கும் எந்த முஸ்லிமும் மலக்குகளின் மேற்கூறிய ஆசீர்வாதத்தைப் பெறு மற் போவதில்லை. மேலும் அவருக் குச் சுவர்க்கலோகத்தில் பாபமன்னிப் பும் கொடுக்கப்படும்.

142. பசியாயிருப்பவருக்குப் போ ஜனம் கொடுங்கள்; வியாதியாயிருப் பவரிடம் சென்று க்ஷேமம் விசாரியுங் கள்; இன்னும் அடிமையாயிருப்பவன் அநியாயமாய்ச்சிறைப்பட்டால் அவனை மீட்டு விடுங்கள்; துன்புறுத்தப்படுகிற மனிதர்களுக்கு, அவர்கள் முஸ்லிமா யிருப்பினும் முஸ்லிமல்லாதவரா யிருப் பினும் உதவி புரியுங்கள்.

143. "முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் காட்டிக்கொள்ள வேண்டிய கடமைகள் அறுவகைப்படும்," என்று எம்பெருமானவர்கள்ஸல் கூறியபோது, "யாரஸூலல்லா(ஹ்)! அவை என்னென்ன?" என்று கேட்டார்கள். அதற்கு நபிகள் நாயகமவர்கள்ஸல் மறுமொழி கூறினார்கள்: "நீங்கள் ஒரு முஸ்லிமைச் சந்திக்கும்போது அவருக்கு ஸலாம் சொல்லுங்கள்; உங்களை அவர் விருந்துக் கழைத்தால், அதை அன்புடன் ஏற்றுக் கொள்ளுங்கள்; அவர் உங்களை ஒரு யோசனை கேட்டால், அவருக்கு வேண்டிய யோசனையைச் சொல்லுங்கள்; அவர் தும்மும்போது 'எல்லாப்புகழும் அல்லா(ஹ்)வுக்கே' என்று சொல்வார்; அதைக் கேட்டவுடன் 'ஆண்டவன் உம்மீது கருணைபுரிவானாக' என்று மறுமொழி

கூறுங்கள்; அவர் நோயாளியாகும் போது, அவரிடம் சென்று க்ஷேமம் விசாரியுங்கள்; இன்னும் அவர் இறந்து விடுவாராயின், அவரது ஸந்தூக்குடன் (இறந்தோரை எடுத்துச்செல்லும் பெட்டியுடன்) பின் செல்லுங்கள்.''

144. நோயாளியா யிருப்பவரை எவரேனும் சென்று க்ஷேமம் விசாரிப்பாராயின், அவரைக் குறித்து ஒரு மலக்கு வானத்திலிருந்து, ''இவ்வுலகில் நீர் திருப்தியான சந்துஷ்டியுடன் இருக்கக்கடவீர்; இன்னும் உம்முடைய நடையானது இன்பமுறுவதுடன் சுவர்க்க லோகத்திலும் உமக்கோர் அழகிய வாஸஸ்தலம் கிடைக்கும்,'' என்று ஆசி கூறுகின்றார். இன்னும், வியாதியஸ்தரைக் கண்டு முகமன் கூறுவதால் ஒருவர் அருள்மய

மான ஆனந்தவாரிதியுள் சென்று நீந்திக்கொண்டே போய்க் கடைசியில் அதிலேயே உட்காருகின்றார்; அப்படி உட்கார்ந்த பின்னர் அதற்குள்ளேயே மூழ்கிவிடுகின்றார்.

145. வியாதியஸ்தரைக் கண்டு வினவும்போது அவரது துயரத்தை மாற்றி, "நீர் சீக்கிரம் சுகமடைந்து நெடுநாள் மட்டும் வாழ்ந்திருப்பீர்," என்று நற்செய்தி கூறவேண்டும்; ஏனெனின், இதனால் இறைவனது ஏற்பாடானது மாற்றமடையாவிடினும், அந்நோயாளிக்கு மெத்த மனச்சாந்தி யுண்டாகும்.

146. ஒரு முஸ்லிம் வியாதி யடைந்து சுகம் பெறுவானாயின், உண்மையாகவே அவனுடைய வியாதியானது அவனது பழைய குற்றங்களை மறைக்கக்கூடிய ஒரு மூடிபோல் ஆகின்றது;

இதனால் அவன் தனக்கு இனி வரக் கூடிய விஷயங்களைக் குறித்து எச் சரிக்கை யடைகின்றான். ஆனால், கள் ளத்தனமான முனாபிக்கு ஒருவன் வியாதியடைந்து சுகம் பெறுவானா யின், உண்மையாகவே அது கட்டி வைத்திருந்த ஓர் ஒட்டகத்தை அவிழ் த்து விட்டது போலாகின்றது; அவ் வொட்டகத்துக்குப் பகுத்தறிவென் பது ஒரு சிறிதும் இல்லாமையால், தன்னை ஏன் அவர்கள் கட்டிவைத் தார்களென்றாவது, பிறகு ஏன் அவிழ் த்துவிட்டார்களென்றாவது அம்மிரு கம் உணர்வதில்லை; இப்படிப்பட்ட வன்தான் முனாபிக்கு. ஆனால், உண் மை முஸ்லிமானவன் தன்னைப் பிடி த்த வியாதியானது தன்னுடைய பழைய தவறுகளை மறைக்கக் கூடிய ஒரு மூடியென்று கருதுகின்றான்.

147. துரதிருஷ்டமானது ஒரு முஸ்லிமையும் அவனது மனைவியையும் அவர்களுடைய மரணபரியந்தம் அவரது தேகசுகத்திலாவது, அல்லது அவர்களுடைய ஆஸ்தியிலாவது, அல்லது அவர்களுடைய குழந்தைகளின் விஷயத்திலாவது, அல்லது அவர்களது பிணிமூப்புச் சாக்காட்டிலாவது எப்பொழுதும் சம்பந்தப் பட்டுக்கொண்டே யிருக்கும்; ஆனால், அவர்களுக்கு ஒருவிதமான குற்றங் குறையும் உண்டாகமாட்டா.

148. மறுவுலகுக்கு வேண்டிய உழவு நிலமா யிருக்கிறது இவ்வுலகம். ஆதலின், அவ்வுலகில் அறுவடை செய்யும் பொருட்டு இவ்வுலகில் நன்மை செய்யுங்கள். ஏனெனின், நாமெல்லாரும் முயற்சி செய்யவேண்டு மென்பதுதான் ஆண்டவனுடைய கட்டளை:

ஆண்டவ னருளியதை நாம் அடைய வேண்டு மாயின், நம்முடைய முயற்சி யைக் கொண்டே அதைப்பெறவேண் டும்.

149. ஒவ்வொரு கண்ணும் வியபி சாரமே செய்யும்; ஆதலின், எவளொ ருத்தி தன்னுடைய தேகத்தை வாச னைத் திரவியங்களால் நறுமணங் கம ழும்படி செய்துகொண்டு, புருஷர்கள் நிறைந்துள்ள கூட்டங்களுக்குச் செ ன்று, காமமுற்ற கண்களுடன் அப் புருஷர்களின் முன்னே தன்னைக்காட் டிக்கொள்ள விரும்புகிறளோ, அவள் ஒரு வியபி சாரியே.

[அஃதாவது, மேற்கூறியவாறு அலங்காரம் செய்துகொண்டு அப்படிப்பட்ட எண்ணத் துடன் புருஷர்களின் எதிரில் செல்லும் ஒவ்வொருத்தியும் வியபிசாரியேயாயின், அப் படிப்பட்டவளைக் கண்ணால் நோட்டமிடும்

ஒவ்வோர் ஆடவனும் வியபிசார புருஷனே. இவ்வகை இலக்ஷணத்துடன் சிந்திக்கும் போது, இக்காலத்தில் ஐரோப்பிய மேல் நாடுகளிலுள்ள அனேக மாதர்களும், இன்னும் கீழ்நாடுகளிலுள்ள சிற்சில ஸ்திரீகளும் இப்படிப்பட்ட இலக்ஷணத்தினின்றும் தப்பமாட்டார்களென்றே யாம் பெரிதும் அஞ்சுகின்றோம்.]

150. நமது நபிகள் நாயகமவர்கள்ஸல் தங்களுடைய ஈமானைப் புதுப்பிக்குந் தோறெல்லாம் பின்வருமாறு கூறுவார்கள்: "ஏ, என் இறைவனே! இஸ்லாத்தில் என் மனமானது நன்கு பதியும் பொருட்டு உன்னிடம் துணைதேடுகின்றேன்; நேரான பாதையில் என் மனமானது திரும்பும் பொருட்டும், உன்னிடம் யான் நன்றி செலுத்துவதற்கு வேண்டிய துணையை எனக்குப் புரியும் பொருட்டும், ஒவ்வொரு

நல்ல வழியிலும் உன்னை யான் வண
ங்கி ஸ்தோத்திரம் புரியும்பொருட்டும்
யான் உதவி தேடுகின்றேன். தீமை
யின்பக்கம் திரும்பாம லிருக்கக்கூடிய
அத்துணைக் குற்றமற்ற ஹிருதயத்தை
எனக்குக் கொடுத்தருளும்படியும் உன்
னிடம் உதவி தேடுகிறேன்; இன்னும்
என்னுடைய நாவை உண்மையான
நாவாக ஆக்கித் தரும்படியும் உதவி
தேடுகிறேன்; உன்னுடைய ஞானத்
தில் உண்மையானசன்மார்க்கமென்று
காணப்படும் அப்படிப்பட்ட சன்மார்
க்கத்தை எனக்குக் கொடுத்தருள்வா
யாக; இன்னும், உன்னுடைய ஞானத்
தில் துன்மார்க்க மென்று காணப்
படும் அப்படிப்பட்ட துன்மார்க்கத்
தை விட்டு யான் தப்பும் பொருட்டு
எனக்கு மன வன்மையைக் கொடுத்
தருள். உன்னுடைய ஞானத்தில்

குற்றமென்று காணப்படும் எவ்வகைக் குற்றங்களி னின்றும் யான் தப்பும் பொருட்டும் கிருபைகூர்ந் தருள்வா யாக."

151. ஆண்டவனுடைய திருத்தூத ரான நபிகள் நாயகமவர்கள்ஸல் தங் களுடைய தோழர்களை நோக்கிப் பின் வருமாறு வினவினார்கள்: "மதுபானம் செய்துகொண்டும், மாதர்களைப் புணர் ந்து கொண்டும், மற்றவர் பொருளைக் கவர்ந்து கொண்டும் திரியும் அப்படிப் பட்ட மனிதனைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?" அதற்கு அத்தோ ழர்கள், "ஆண்டவனும் அவனுடைய திருத் தூதருமே நன் கறிவார்கள்," என்றார்கள். அப்பொழுது நபிபெரு மானா ரவர்கள், "அவை யெல்லாம் பெரும் பாப மாகும்; அவற்றின் தண் டனையும் மிகக்கொடிய தாகும்,"

என்று மறுமொழி கூறினார்கள்.

[இவ்விஷயங்களைப் பற்றிய கட்டளை யெல்லாம் குர்ஆன் ஷரீபில் வெளிப் படு முன் மேற்கூறியவாறு நம் நபிகள் பிரான் விடை பகர்ந்தார்கள்.]

152. "யாரஸூலல்லா (ஹ்)! யா னொரு நபுஞ்சனாக *ஆகும்படி அனு மதி கொடுக்கவேண்டும்," என்று எம் பிரானிடம் கேட்டேன்; அதற்கு அவர்கள், "பிறரை நபுஞ்சனாக ஆக்கக் கூடியவனாவது, அல்லது தன்னை யே நபுஞ்சனாகச் செய்து கொள்ளக் கூடியவனாவது என்னுடைய கூட்டத்தைச் சேர்ந்தவனாக மாட்டான்; ஏனெனின், என்னைப் பின்பற்றுகிறவர்கள் நபுஞ்சகர்களாகக் கூடிய வழியானது தீமைகளினின்றும் விலகியிருப்பதும் நோன்பு நோற்பதுந்தாம்," என்று

*ஆணும் பெண்ணுமல்லாத அலி.

விடைபகர்ந்தார்கள். மறுபடியும்நான், "இவ்வுலக சம்பந்தமான மனிதகோஷ்டி யினின்றும் விடுபட்டுப்போய் இதன் சார்பான இன்பங்களை யெல்லாம் விட்டொழிக்கும் படியாவது அனுமதி தரவேண்டும்," என்று விண்ணப்பித்துக் கொண்டேன். அதற்கும் அவர்கள், "என்னைப் பின்பற்றுவோர் அடையக்கூடிய ஏகாந்த மெல்லாம் இவ்வுலகத்திலேயே வசித்துக் கொண்டு, ஆனால், வேளை தவறாது பள்ளிக்குச் சென்று தொழவேண்டிய காலத்தை அதன் மூலையிலிருந்து கொண்டு எதிர்பார்த் திருப்பதுதான்," என்று விடை பகர்ந்தார்கள்.

153. (மனித கோடிகளுக்கு யாதொரு விதமான) பிரயோஜனத்தையும் தரமாட்டாத அறிவானது ஆண்டவன் பாதையில் யாதொருவிதமான

தர்மமும் செய்யாத புதையலை ஒத்தி ருக்கும்.

154. மார்க்க சம்பந்தமான சண் டைகளைப்பற்றி நபிகள் நாயகமவர்கள் சில விஷயங்களைக் கூறிவிட்டுப் பின் னர், "அறிவானது இவ்வுலகைவிட்டுப் பிரிந்துபோகக் கூடிய அக் காலத்தில் தான் அப்படிப்பட்ட சண்டை யுண் டாகும்," என்று கூறினார்கள். அப் பொழுதுநான், "யாரஸூலல்லா(ஹ்)! நாங்கள் குர்ஆன் ஷரீபை ஓதிக்கொண் டும், எங்கள் குழந்தைகளுக்கு அதை ஓதிக்கொடுத்துக் கொண்டும், அவர் கள் தங்களுடைய குழந்தைகளுக்கு ஓதிக் கொடுத்துக் கொண்டும், இவ் வாறே கியாமத்து நாள்மட்டும் இருக் கும்போது, அறிவானது இவ்வுலகை விட்டு எவ்வாறு பிரிந்து செல்லக் கூடும்?" என்று வினவினேன். அத

ற்கு ரஸூல் நாயக மவர்கள், "ஓ, ஜீயாத்! இந்த மதீனு நகரில் நீர்தாம் மிகப் படித்தவரென்று எண்ணியிருந்தேன். தௌராத்தையும், இன்ஜீலையும் படித்துவரும் யூதரும் கிறிஸ்தவரும் அவ்வேதங்களில் சொல்லப்பட்டபடி நடக்கின்றார்களா?" என்று மறுமொழி கூறினார்கள்.

155. அல்லா(ஹ்)வின் திருத்தூதாவர்களிடமிருந்து இரண்டு விதமான ஞானத்தை நான் அடைந்தேன். அவற்றுள் ஒன்றை நான் மற்றவர்களுக்குப் போதித்தேன்; மற்றொன்றை வேறு யாருக்கேனும் யான் உபதேசித்திருப்பேனுயின், அஃது அவர்களுடைய தொண்டையைக் கிழித்திருக்கும்.

156. இஸ்லாத்தின் மூலவேரை அறுத்து, அதன் சாற்றைப் பிழிவது

எதுவென்று உங்களுக்குத் தெரியுமா? படித்தவர்கள் செய்யும் பிழையும், குதர்க்கமும், நேர்வழி தப்பிய மன்னர்களின் கட்டளையுமே தீனுல் இஸ்லாத்துக்கு மிகத் தீமையைத் தரும்.

157. ஸ்திரீகள் புருஷர்களின் இரட்டைப் பிறவியா யிருக்கிறார்கள்.

158. தன்னுடைய நிழலல்லாமல் வேறொருவிதமான நிழலும் காணப் படக்கூடாத அந்த இறுதி நாளில் அல்லாஹுத் தஆலாவானவன் தன்னுடைய நிழலின்கீழ் எழுவ்கையான மனிதர்களை அணைத்துக் கொள்வான். அவ்வெழுவருள் ஒருவன் 'தன்னுடைய வலக்கரத்தினால் செய்த தான தர்மத்தைத் தன்னுடைய இடக் கரத்துக்குத் தெரியாமல் அத்துணை மௌனமாக மறைத்து வைத்தவனா யிருப்பான்.

159. நபிகள் நாயகமவர்களுடைய பள்ளியில் ஒரு *பத்து வானவன் நின்று கொண்டு சிறுநீர் பெய்து அந்தப் பள்ளிவாயிலை அசுத்தமாக்கினான்; அப்பொழுது அங்கிருந்த ஸஹாபாக்கள் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். உடனே நபிகள் நாயகமவர்கள், அவரை விட்டுவிடுங்கள்; அவர் அசுத்தம் பண்ணின இடத்தில் ஒரு தோற்பைத் தண்ணீரைக் கொட்டிக் கழுவுங்கள்; ஏனெனின், நீங்கள் மனிதர்களுக்குச் சௌகரிய முண்டாக்கும் பொருட்டுப் படைக்கப்பட்டிருக்கிறீர்களே யல்லாமல், அவர்களுக்குத் துன்பம் உண்டாக்கும்

* கூடாரங்களில் வசித்துக்கொண்டும், ஆடுமாடு ஒட்டகங்களை மேய்த்துக் கொண்டும் நாடோடியாய்த் திரியும் அரபிகள் பத்துக்கள் எனப்படுவார்கள்.

பொருட்டன்று," என்று சொல்லி அந்த ஸஹாபாக்களுக்கு எச்சரிக்கை செய்துவிட்டு, அந்த பத்து வானவன் சிறுநீர் பெய்து முடித்தவுடன் அவனை நம் நபிபெருமானார் அருகிலழைத்து, "எ அராபி! இந்தப் பள்ளியானது இப்படிப்பட்ட துர்க் கிருத்தியங்களுக்காகக் கட்டப்பட்டில்லை; ஆனால், இப்படிப்பட்ட இடமானது ஆண்டவனைத் தியானிப்பதற்காகவும், அவனை நினைத்துத் தொழுவதற்காகவும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது," என்று அவனுக்கு மிக்க நயமாகப் புத்தி புகட்டினார்கள்.

160. சுவர்க்கம் புகுதற்குரிய மார்க்கம் தொழுகையா யிருக்கிறது ; தொழுகைக்குரிய மார்க்கம் உ ளூவாயிருக்கும். (உ ளூகை, கால், முகம் சிரசு முதலிய உறுப்புக்களைச் சுத்திசெய்து

கொள்ளுதல்.)

161. அறிவின் துரதிருஷ்டமானது மறதியா யிருக்கிறது; மேலும் அவ்வறிவைத் தகாதவர்களிடம் உபயோகிப்பதானது அதை இழப்பதற்கு ஒப்பா யிருக்கிறது.

161a. கற்ருே ரென்போர் யாவர்? தாம் கற்றுக் கொண்டதைப் பழக்கத்தில்கொண்டு வந்து அனுஷ்டிப்பவரா யிருக்கிருர்.

162. இஸ்லாத்தின் பெயர்மட்டு மல்லாமல் மற்ருென்றும் அம்மார்க்கத்தின் அம்சம் இல்லாமலும், குர்ஆன் ஷரீபின் தோற்றம்மட்டு மல்லாமல் அவ்வேதத்தின் அறிவொன்று மில்லாமலும், முஸ்லிம்களின் பள்ளிகளும் தொழுவோரும் அறிவாளரு மில்லாமல் வெற்றிடங்களாகவும் போகக் கூடிய காலம் சமீபத்தில் வரும்;

அப்பொழுது படித்தவர்களே வானத்தின் கீழ் மகா கெட்டவர்களா யிருப்பார்கள். குதர்க்கமும் வீண் சண்டைகளுமே அதிகமாகக் காணப்படும்; அதனுல் அவர்களுக்கே அக்கொடுமைகளெல்லாம் தீமைகளாய் முடியும்.

[இப்படிப்பட்ட பொல்லாத காலம் இது வல்லவா? என்று யாம் வினவுகின்ரும்.]

163. அதிகமான தொழுகையைக் காட்டினும் அதிகமான அறிவே சிலாக்கியமானதா யிருக்கிறது...ஆதலின், இராமுழுதும் வணக்கம் புரிவதைக் காட்டினும் அந்த இரவில் ஒரு மணி நேரம் அறிவு புகட்டுவதானது அதிக நன்மை பயக்கக் கூடியதாயிருக்கிறது.

[மனிதர்களுடைய கண்களைத் திறந்து விடுவது கூடாதென்றும், அவர்களை யெல்லாம் ஆடுமாடுகளைப் போலவே அந்தகாரத்தில் அலையும்படி விட்டு வைக்கவேண்டு

மென்றும் தந்திரசூழ்ச்சி செய்யும் மந்திர வாதிக ளெல்லாம் இவ்வாக்கியத்தை நன்கு நோட்டமிடுவார்களாக.]

164. எவனொருவன் அறிவைத் தேடி அதை அடைகிறானோ, அவன் இரு வகையான சன்மானம் பெறுவான்: அறிவை யடைய வேண்டுமென்று நாடியதற்காக ஒரு சன்மானமும், அப்படிப்பட்ட அறிவை அடைந்ததற்காக மற்றொரு சன்மானமும் பெறுவான். ஆதலின், ஒருவன் அறிவை யடைய வேண்டுமென்று ஆர்வங்கொண்டு விடுவானாயின், அவ்வகை அறிவு அவனுக்குக் கிட்டாவிடினும், அவனுடைய ஆவலுக்காக மட்டுமாவது ஒருவகைச் சன்மானம் கிடைக்கும்.

[அறிவின் பெருமையைப்பற்றி இதைக் காட்டினும் வேறென்ன உபதேசம் உங்களுக்கு வேண்டப் படுகிறது?]

165. மதசம்பந்தமான அறிவைப் புதுப்பிக்கும் பொருட்டு ஒருவன் முயன்று அவ் வறிவைக் கற்றுக்கொண்டிருக்கும்பொழுது அவன் மரணமடைந்து விடுவானாயின், நபிமார்களைக் காட்டினும் ஒரு சிறிதுதான் அவன் தாழ்ந்தவனா யிருப்பான்.

[இவ்வாறிருக்கும் போது என் நீங்களெல்லாம் மார்க்க சம்பந்தமான ஞானத்தையடைய முற்படுவதில்லை?]

166. குர்ஆன் ஷரீபானது எழுவிதமான "அரபிப் பிராகிர்த" பாஷையில் வெளியாக்கப் பட்டது; அதன் ஒவ்வொரு திருவாக்கியத்திலும் ஒவ்வொரு விதமான பகிரங்க அர்த்தமும், அந்தரங்க அர்த்தமும் காணப் படுகின்றன.

[குர்ஆன் ஷரீபின் வெளிப்படையான பொருளைமட்டும் வைத்துக்கொண்டு வீண்

வாதம் புரிபவர்கள் அதன் அந்தரங்கத் தாத்பரியத்தையும் அறிய முயலமாட்டார்களா?]

167. ஆயிரம் வணக்கக்காரர்களைக் காட்டினும், ஒரு கற்றறிந்தவன் ஷைத்தான் விஷயத்தில் மிகக் கடுமையா யிருக்கிறான்.

167 a. அறிவைப் பெறுவதில் ஆசைகொள்ள வேண்டுவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் தெய்வக் கட்டளையா யிருக்கிறது. ஆனால், தகாதவர்களுக்கு அறிவு போதிக்க முற்படுவதானது முத்துக்களையும் இரத்தினங்களையும் தங்கத்துடன் சேர்த்துப் பன்றிகளின் கழுத்தில் போடுவதை ஒக்கும்.

168. "அறிவு கிடைக்கக் கூடிய வழியை நாடிச் செல்பவன் ஆண்டவனால் சுவர்க்கத்தை நோக்கி நடத்தப் படுவான்; மேலும் அறிவில்லாத ஒரு

வணக்கக்காரனைக் காட்டினும் கற்றறி ந்த ஒருவனுடைய மேன்மையானது எல்லா நக்ஷத்திரங்களைக் காட்டினும் பூரணச் சந்திரனுனது மேன்மையுற் றதை ஒத்திருக்கிறது,'' என்று நமது நபிகள் நாயக மவர்கள்ஸல் கூறினதை யான் நிச்சயமாகக் கேட்டேன்.

169. ஏ முஹம்மதின்ஸல் உம்மத்துக் காள்! இரக்ஷகன்மீது ஆணையாக யான் உங்களுக்குக் கூறுகின்றேன்: மறு வுலக வாழ்க்கையைப் பற்றி எனக்குத் தெரிந்த அவ்வளவு விஷயம் உங்களு க்கு மட்டுந் தெரிந்திருக்கு மாயின், நிச்சயமாகவே நீங்கள் கொஞ்சமாகச் சிரித்து அதிகமாக அழுவீர்கள்.

170. ஆண்டவனுடைய பார்வை யில் அதிகமேலானதாகக் காணப்படும் நன்மையான செய்கை யாதெனின், கொஞ்சமாகக் கவனித்த போதிலும்,

அடிக்கடி கவனிக்கும் காரியம்தான்.

171. மார்க்கக் கட்டளையானது மூன்று வகைப்படும்: ஒன்று, எந்தக் காரியத்தில் அதன் சன்மானமானது திட்டமாகத் தெரிகின்றதோ, அதைக் கடைப்பிடியுங்கள்; இரண்டு, எந்தக் காரியமானது பாபகரமான வழியில் கொண்டுபோய் விடுமோ, அப்படிப் பட்ட காரியத்தை அடியோடு விட்டு விடுங்கள்; மூன்று, எந்தக் காரியத்தில் தகாரார் உண்டாகக்கூடுமோ, அப்படிப் பட்ட காரியத்தை ஆண்டவனிடம் ஒப்படைத்து விடுங்கள்.

172. மறுவுலக வாழ்க்கையில் மனத்தைச் செலுத்தினோர்க்கு இவ்வுலக இன்பம் இனிதாய்ப் புலப்படாது; இவ்வுலக வாழ்க்கையின் இன்பத்தில் மூழ்கினோர்க்கு அவ்வுலக ஆனந்தம் அளிக்கப்பட மாட்டாது. ஆனால், அல்

லாஹுத் தஆலாவின் உண்மையான அடியார்கள் இவ்வுலக இன்பத்தையும் அவ்வுலக இன்பத்தையும் ஒரு பொருட்டா யெண்ண மாட்டார்கள்.

173. உண்மையான உறுதி யுடையோர் ஒருபோதும் இறப்பதில்லை; ஆனால், அவர்கள் அநித்தியமாகிய இவ்வுலகை விட்டு நித்தியமாகிய அவ்வுலகுக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள்.

174. ஏதேனுமொரு தீமையைச் செய்து விடுவீராயின், அதன்பின் ஒரு நன்மையைச் செய்யும்; இதனால் தீமையின் பாபம் நன்மையால் ஒழிந்து போகும்.

175. தன்னை யுணர்ந்தவன் தன் தலைவனை யுணர்வான்.

176. என்னுடைய வாக்கியங்களுள் உங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்தவற்றை யல்லாமல் மற்றொன்றையும்

வேறொருவருக்கும் போதிக்க வேண்டாம்.

177. என்னுடைய வார்த்தைகள் ஆண்டவனுடைய வசனத்தைப் பாதிக்கமாட்டா; ஆனால், ஆண்டவனுடைய வசனம் என் வார்த்தைகளை மாற்றியமைக்கக் கூடும்.

178. பிர்தௌஸென்னும் சுவர்க்கத்துள் நுழையக்கூடிய என்னுடைய உம்மத்துக்களுள் (என்னைப் பின்பற்றியவருள்) அஞ்ஞான காலத்திலிருந்து அறியாத மக்களைப்போல் சிப்பி, கிளிஞ்சில் முதலியவற்றின் ஓடுகளை உபயோகிப்பவரும், சகுனம் பார்ப்பவரும் சேரமாட்டார்; ஆனால், என்னுடைய உம்மத்துக்கள் அல்லா(ஹ்)வின் மீது ஆழிய நம்பிக்கைவைப்பவராவர்.

[தர்காக்களுக்கும் தக்யாக்களுக்கும் நேர்ச்சை செய்து முடிவைத்தும், சிகைவைத்

தும், ஜில்ப்பா வைத்தும், காரை, கண், காது, மூக்குப்போன்ற உலோகங்களை மாட்டிக் கொண்டும் காணிக்கை செலுத்துவோர் இதைக் கவனிக்க மாட்டார்களா?]

179. உண்மையுள்ள முஸ்லிம் வாழ்வு வந்தபோது ஆண்டவனுக்குத் துதி செய்தும், தாழ்வு வந்தபோது அவ்விறைவனுடைய விருப்பத்துக்குக் கீழ்ப்படிந்தும் நடப்பார்.

180. ஆண்டவன்மீது நீங்கள் முழு நம்பிக்கையும் வைப்பீர்களேல் (இப்படித்தான் நீங்கள் அவன்மீது நம்பிக்கை வைத்தல்வேண்டும்) அவன் ஆகாயத்திலுள்ள பறவைகளுக்கு உணவளிப்பதே போல் உங்களுக்கும் மகாநிச்சயமாக உணவளிப்பான்; அந்த அந்தப் பறவைகள் காலையில் பசியுடன் வருகின்றன; மாலையில் வயிறுநிரம்ப இரை தின்று விட்டுத் திரும்புகின்றன.

181. ஆண்டவன் மீது நம்பிக்கை வையுங்கள்; ஆனால், உங்களுடைய ஒட்டகத்தையும் கட்டி வையுங்கள்.

182. ஜாக்கிரதையா யிருந்துகொள்ளுங்கள்! மனிதனுடைய தேகத்தில் ஒரு துண்டு இறைச்சி யிருக்கிறது; அது நல்ல ஸ்திதியிலிருந்தால், தேக முழுதும் நல்ல ஸ்திதியிலிருக்கிறது; அது தீமையடைந்து கெட்டுவிடுமாயின், தேகமுழுதும் கெட்டுவிடுகிறது; அதுதான் ஹிருதயம்.

183. நபிகள் நாயகமவர்கள் என்னைப் பார்த்து, "ஒ வாபீஸா! நன்மை இன்னதென்றும், தீமை இன்னதென்றும் நீர் என்னிடம் கேட்கவா வந்திருக்கிறீர்?" என்று வினவினார்கள்; அதற்கு யான், "ஆம், அதற்காகத்தான் வந்திருக்கிறேன்," என்று விடை பகர்ந்தேன். உடனே ரஸூல் நாயக

மவர்கள்ஸல் தங்களுடைய கைவிரல்களை ஒன்று சேர்த்து என் நெஞ்சின் மீது வைத்து (அஃதாவது, என்னுடைய ஹிருதயத்தைச் சுட்டிக் காட்டி) "உம்முடைய ஹிருதயம் என்ன விதமாகத் தீர்மானம் செய்கிறதென்று விசாரணை செய்யும்," என்று மூன்று முறை கூறி, மீண்டும், "உம்முடைய ஹிருதயமானது எந்தக் காரியத்தில் சாந்தியும் சமாதானமான உறுதியுங் கொள்ளுகின்றதோ, அதுதான் நல்ல காரியம்; எந்தக் காரியத்தில் உம்முடைய மனமானது சந்தேகத்துள் ஆழ்ந்து விடுகிறதோ, அதுதான் (அக்காரியத்தில் மனிதர்கள் உம்மை விடுதலை செய்தபோதிலும்) தீயகாரியமாகும்," என்று உறுதி கூறினார்கள்.

184. எவரேனும் தம்முடைய குழந்தைகளைக் கடனாளிகளாக விட்

டுச் செல்வாராயின், அப்படிப்பட்ட குழந்தைகள் என்னிடம் வரட்டும்; நான் அவர்களுக்கு ஆதரவளித்து, அவர்களுடைய கடனை யெல்லாம் கொடுத்து, அவர்களையும் நண்பர்களாக ஏற்றுக் கொள்வேன்.

185. இஸ்லாத்தில் சன்னியாச மென்பது அறவே கிடையாது.

[உண்மை இவ்வாறிருக்குங்கால், என் இக்காலத்தில் இம்மார்க்கத்தில் இத்துணை தர்வேஷ்களும், மஷாயிகுகளும், சன்னியாசிகளும், மஸ்தான்களும்?]

186. விவாகத்துக்குரிய சக்திவாய்ந்த எல்லா மனிதர்களின்மீதும் அவ்விவாகமானது கடமையாக விதிக்கப்பட்டிருக்கிறது.

187. முஸ்லிம்கள் தங்களுக்குள் ஒருவரோ டொருவர் பக்ஷம் பாராட்டுவதைக் காட்டினும் அவர்கள் பால்

நான் அதிகமான பக்ஷம் பாராட்ட வேண்டுவது என்னுடைய பொறுப்பா யிருக்கிறது; ஆதலின், யாதேனு மொரு முஸ்லிம் கடனை வைத்துவிட்டு, அதைத் தீர்ப்பதற்குவேண்டிய ஆஸ்தி யொன்று மில்லாமல் மாணமடைந்து விடுவாராயின், அவரது கடனைத் தீர்ப் பது எனது பொறுப்பாகும்; எவரொ ருவர் தனவந்தரா யிருந்து மரித்துப் போகின்றாரோ, அவரது ஆஸ்தி யெல் லாம் அவருடைய வாரிஸ்களுக்கே சொந்தமாகும்.

188. ஸஅத் இப்னு அபீ வக் காஸ்[ரலி] கூறுகின்றார்கள்: உதுமான் இப்னு மஅஸூன்[ரலி] அவர்களுக்கு, விவாகம் செய்து கொள்ளாமல் சும்மா இருக்க வேண்டாமென்று நம் நபி பெருமானாவர்கள் கட்டளை யிட்டார் கள்; விவாகம் செய்துகொள்ள வே

ண்டு மென்று அந்த உதுமானுக்கு ரஸூல் நாயகமவர்கள் அனுமதி கொடுத்திராத பக்ஷத்தில், நம் முஸ்லிம்கள் நிச்சயமாகவே (தர்வேஷ்க ளாகப் போய்) நபுஞ்சகர்களாக ஆயிருப்பார்கள்.

189. நான்கு விதமான குணங்களின் காரணமாக ஒரு பெண்ணை விவாகம் செய்து கொள்ளலாம்: ஒன்று, அவளுடைய ஐசுவரியம்; இரண்டு, அவளுடைய வம்ச பரம்பரையின் பெருமை; மூன்று, அவளுடைய அழகு; நான்கு, அவளுடைய சற்குண விசேஷம். ஆதலின், குண விசேஷ முள்ள நல்ல பெண்ணையே நீங்கள் தேடிக்கொள்ளுங்கள்; இந்த ஒரு காரணத்தா லல்லாமல், வேறு ஏதேனு மொரு காரணத்தால் ஒரு பெண்ணை நீங்கள் விவாகம் செய்து

கொள்ளுவீர்களேல், உங்களுடைய கைகள் மண்ணில் போட்டுத் தேய்க்கப்படட்டும்.

190. இவ்வுலகும் இதிலுள்ள எல்லா வஸ்துக்களும் விலையுயர்ந்தவைகளே; ஆனால், இங்குள்ள எல்லா வஸ்துக்களிலும் மகா விலையுயர்ந்ததாயிருப்பது குணசாலியான ஒரு பதிவிரதை யாகும்.

191. அரபு நாட்டில் மகா மேலான பெண்கள் குரைஷ் குலத்தின் குணசாலிக ளாவார்கள்; இவர்கள் குழந்தைகளிடத்தில் மகா மேலான பக்ஷம் பாராட்டுகிறவர்களா யிருக்கிறார்கள்; இவர்கள் தாம் தங்களுடைய கணவன்மார்களின் பொருளைக் காப்பாற்றுவதில் மகா ஜாக்கிரதை யுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

192. இவ்வுலகமானது மனத்துக்கு

மிக்க இனிமையாகவும், பார்ப்பதற்கு அதிக அழகாகவும் இருக்கிறது; ஆனால், உங்களுக்கு முன் பல மனிதர்கள் இவ்வுலகை விட்டுச் சென்ற பின்னரே நிச்சயமாக ஆண்டவன் உங்களை இங்கு அனுப்பி யிருக்கிறான். ஆதலின், உங்களுடையசெயலை நன்கு நோட்டமிட்டுப் பாருங்கள்; அதன் பின் இவ்வுலகத்திலின்றும் இதன் தீமையினின்றும் தப்பிப் பிழைத்துக் கொள்ளுங்கள்.

193. உங்களுடைய மனைவிகளைப் பக்ஷத்துடன் நடத்தி, அவர்களுக்குப் புத்தி புகட்டுங்கள்.

194. ஒரு முஸ்லிமாயிருப்பவர் தம்முடைய மனைவியைவெறுப்பது கூடாது; அவள்பா லுள்ள ஒரு குணதோஷத்தைக்கண்டு நீர் அதிருப்தி யடைவதைக் காட்டினும், அவளிடத்திலு

ள்ள மற்றொரு நற்குணத்தைக் கண்டு திருப்தியடைதல் வேண்டும்.

195. ஓர் அடிமையை அடிப்பது போலவே உம்முடைய மனைவியையும் அடிப்பீரோ? இவ்வாறு நீங்கள் ஒரு போதும் செய்வது தகாது.

196. ஆண்டவன் முன்னும் அவனுடைய சிருஷ்டியின் முன்னும் உங்களுள் மிக நல்லவர்களாயிருப்பவர், தம்முடைய குடும்பத்தினரிடத்தில் நல்லவிதமாய் நடந்து கொள்ளுபவராயிருக்கிறார். இப்படிப்பார்க்குமளவில், நான் என்னுடைய குடும்பத்தினரிடத்தில் மிக நல்லவனாய் நடந்துகொண்டு வருகிறேன்.

196a. உம்முடைய நண்பர் இறந்து போன பின்னர் அவருடைய குற்றங்களைச் சொல்லிக் குறைகூற வேண்டாம்.

197. ஒரு பெண்பிள்ளை யானவள் தினந்தோறும் ஐந்து வேளையும் தொழுதுகொண்டும், ரமலான் மாதத்தில் நோன்பு நோற்றுக் கொண்டும், பதிவிரதா தர்மத்துடன் கணவனுக்கு மீறி நடவாம விருப்பா ளாயின், அவளுக்கு இஷ்டமான எந்த வாயிலின் வழியாக வேனும் பிர்தௌஸென்னும் சுவர்க்கத்துக்குள் நுழையச் சொல்லுங்கள்.

198. "யா ரஸூலல்லா(ஹ்)! யான் என் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமை யாது?" என்று நான் (முஆவியா பின் ஹைதா) கேட்டேன்; அதற்கு அவர்கள், "நீர் புசிக்கும்போது உம் மனைவியையும் புசிக்கச் செய்யும்; நீர் உடுத்திக் கொள்ளும்போது அவளையும் உடுத்திக்கொள்ளச் செய்யும்; அவளுடைய கன்னத்தில் நீர் அறை

வது கூடாது? அவளை வைதலும் மன வருத்தத்தால் விலக்கி வைப்பதும் தகாத காரியமாகும்,'' என்று விடை பகர்ந்தார்கள்.

199. உம்முடைய மனைவிக்கு நற் புத்தி போதியுங்கள்; அவள் பால் நற் குணம் இருக்குமாயின், அவள் உம்மு டைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு தன்னுடைய அனுவசியமான வீண் பேச்சுக்களை யெல்லாம் விட்டு விடு வாள். ஓர் அடிமையை அடிப்பது போல உம்முடைய மேலான மனை வியை அடிக்க வேண்டாம்.

200. "உங்களுடைய மனைவியரை அடிக்க வேண்டாம்,'' என்று ரஸூல் நாயகமவர்கள் உத்தர விட்டபோது, "இதைக் கேட்டது முதல் எல்லாப் பெண்களும் தங்கள் கணவன்மார்மீது அதிகாரம் செலுத்த ஆரம்பித்து விட்

டார்கள்,'' என்று உமர்[ரலி] அவர்கள் கூறினார்கள்.

201. (அப்பொழுது நபிகள் பிரான் கூறியதாவது:) நிச்சயமாகவே அதிக மான ஸ்திரீகள் தங்களுடையகணவன் மாரின் கொடுமையைப் பற்றிப் பிரி யாது செய்துகொண்டு என் குடும்பத் தாரிடம் வந்திருக்கிறார்கள்; தங்களு டைய மனைவியரைப் புடைக்கும் புரு ஷன்மார் நல்ல மனிதர்களல்லர். ஒரு பெண்பிள்ளையை அலைந்து திரியும்படி யாக விட்டுவிடுகிறவன் என்னுடைய மார்க்கத்தில் சேர்ந்தவனுகான்.

202. எவருடைய குணுதிசயத்தை அவருடைய குடும்பத்து ஸ்திரீகளே அதிகமாக விரும்புகிறார்களோ, அவர் தாம் மகா சிலாக்கியமான முஸ்லிமா யிருப்பார்.

203. எவருடைய குணுதிசயம் மிக

அழகா யிருக்கிறதோ, அவரே மகா சிலாக்கியமான முஸ்லிம்; உங்களுள் எவர் தம்முடைய மனைவியரிடம் மிக நேர்த்தியாய் நடந்து கொள்ளுகிறாரோ, அவரே மகா சிலாக்கியமானவர்.

204. கைஸ் பின் ஸஅத்[ரலி] பின் வருமாறு கூறியிருக்கிறார்: நான் ஹீரா என்னு மிடத்திற்குச் சென்றபோது, அங்குள்ள மனிதர்கள் தங்களுடைய தலைவனை (தெய்வமாக) வணங்கிக் கொண் டிருந்தார்கள்; அதைக் கண்ட நான், "நிச்சயமாகவே அல்லாஹுத் தஆலாவின் திருத்தூதர் அவர்களே வணக்கத்துக் குரியவர்கள்," என்று கூறிவிட்டுப் பிறகு ரஸூல் நாயகமவர்களிடம் சென்று, "ஹீராவி லுள்ளவர்கள் தங்களுடைய தலைமைக் காரனை வணங்கிக்கொண் டிருந்ததைக் கண்டேன்; அவ்வாறாயின், எல்லா மனி

தர்களுள்ளும் ரஸூலுல்லா வாகிய தாங்களே வணக்கத்துக்குரிய மகா பெரியவ ரென்று சொல்லி வந்தேன்," என்று நபி பிரானிடம் விண்ணப்பித்துக் கொண்டேன். அதைக் கேட்டு அவர்கள் ஆச்சரியங்கொண்டு, "நீர் என்னுடைய கபுர் (சமாதி) வழியே செல்ல நேர்ந்தால் அதை நீர் வணங்குவீரோ?" என்று கேட்டார்கள். "தங்களுடைய புதை குழியான சமாதியை நான் ஒருபோதும் வணங்கமாட்டேன்," என்று கூறினேன். "அவ்வாறாயின், என்னை நீங்கள் ஒருவரும் வணங்க வேண்டாம்," என்று கடுமையாக உத்தர விட்டார்கள்.

[நம் ரஸூல் நாயகமவர்கள், மற்ற மதத் தலைவர்களை யெல்லாம் மனிதர்கள் தெய்வமாகக் கொண்டாடுவதேபோல் தங்களையும் தேவ அவதாரமென்று உலகோர் கருதி

விடாம விருக்கும்பொருட்டே இவ்வாறெல்லாம் தடையுத்தரவு செய்திருக்கிறார்கள். இக் காரணத்தாலேயே, "நிச்சயமாகவே நானும் உங்களைப்போல் ஒரு மனிதன் தான்," என்று எல்லோருக்கும் அறிவிக்கும்படி அவர்களுக்கு ஆண்டவனிடத்திலிருந்து வேத வாக்கியமும் வெளியாயிருக்கின்றது. இவற்றையெல்லாம் கண்டும் இந்திய முஸ்லிம்களுள் பலர் *அல்லா சாமி (பஞ்சா) பூஜை, அவுல்யா பூஜை, ஆலிம் பூஜை, மஷாயிகு பூஜை, பீர் பூஜை, தர்கா பூஜை, தக்யா பூஜை முதலிய உயிருள்ளதும் உயிரற்றதுமாகிய விக்கிரகப் பூஜை போன்றவற்றை ஏன் செய்துவருகிறார்களென்று யாம் கேட்கின்றோம். இப்படிப்பட்ட ஷிர்க்குகளை யெல்லாம் திருத்த வேண்டியது நம் மதத் தலைவர்களென்பவர்களின் கடமையன்றோ?]

205. நபிகள் நாயகமவர்கள் ஒரு

---

* நஊது பில்லாஹி மின் கதாலிக.

நாள் தங்களுடைய தோழர்களின் மத்தியில் வீற்றிருந்தார்கள்; அப்பொழுது ஓர் ஒட்டகம் வந்து ரஸூலுல்லாவின் முன்னிலையில் மண்டியிட்டுப் பணிவு செய்தது. அதைக் கண்ட தோழர்கள் "யா ரஸூலல்லா(ஹ்)! மிருகங்களும் மரங்களும் தங்களுக்கு வணக்கம் புரியும்போது, மனிதர்களாகிய நாங்களும் உங்களை வணங்குவது நியாயம்தானே?" என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். அதற்கு ஆண்டவனுடைய திருத்தூதாகிய மனித நபியானவர், "ஆண்டவன் ஒருவனையே வணங்குங்கள்; ஆனால், உங்கள் சகோதரனாகிய என்னை நீங்கள் ஒரு சாதாரண மனிதனைப்போல் கௌரவிக்கலாம்," என்று அதிக அழுத்தமாகக் கூறினார்கள்.

[இன்னும் நீங்கள் என் தர்காக்களிலும்

தக்யாக்களிலும் சென்று மண்டியிட்டுச் சிர வணக்கம் (ஸுஜூத்) புரிந்து தோப்புக்கரணமும் போடுகின்றீர்கள்? இப்படியெல்லாம் செய்து கொண்டு இன்னும் நீங்கள் மெய்யான முஸ்லிம்களென்று ஒய்யாரம் பேசுகின்றீர்களோ? "உன்னையே வணங்குகிறோம்; உன்னிடத்திலேயே உதவிதேடுகிறோம்," என்னும் ஆண்டவன் அருண்மொழி ஏன் உங்கள் கண்களில் படுவதில்லை?]

206. காரண மில்லாமல் தன்னுடைய கணவனிடத்திலிருந்து விடுபடும் பொருட்டு விவாக விலக்கு (தல்லாக்கு)க் கேட்கும் ஒவ்வொரு பெண்பிள்ளைக்கும் ஜன்னத்தின் (சுவர்க்கத்தின்) சுகந்தமானது தடுக்கப்பட்டிருக்கிறது.

207. சட்டத்துக்கு முரண்படாததும், ஆனல், ஆண்டவனல் வெறுக்

கப்படுவதுமா யிருப்பது விவாக விலக்கா யிருக்கிறது (தல்லாக்கு).

208. "யாரஸூலல்லா(ஹ்)! நாங்கள் எங்களுடைய வேலைக்காரர்களை எத்தனை முறை மன்னிக்க வேண்டும்?" என்று கேட்டார்கள். அதற்கு நபிபெருமானார் மௌனம் சாதித்திருந்தார்கள். மறுபடியும் கேட்ட போது, அப்பொழுதும் நபிகள் நாயகமவர்கள் மௌனம் சாதித்திருந்தார்கள். ஆனால், அந்த ஸஹாபாக்கள் மூன்றாம் முறை கேட்ட பொழுது நபிகள் பிரான், "உங்களுடைய ஊழியர்களைத் தினமொன்றுக்கு எழுபது முறைமன்னிப்பீர்களாக," என்று விடை பகர்ந்தார்கள்.

209. உங்களுக்குத் திருப்தியுண்டாகும்படி நடந்துகொள்ளும் உங்களுடைய ஊழியர்களுக்கு நீங்கள் புசிப்ப

தையே அவர்களுக்கும் புசிக்கக் கொடுங்கள்; நீங்கள் உடுத்துவதுபோலவே அவர்களேயும் உடுத்தச் செய்யுங்கள். ஆனால், உங்களுக்குத் திருப்தி யுண்டாகும்படி நடந்துகொள்ளாத வேலைக்காரர்க ளிருப்பார்களாயின், அவர்களை நீங்கள் உடனே விலக்கிவிடுங்கள்; ஆனால், ஆண்டவனுடைய அடியார்களை நீங்கள் தண்டிக்கவேண்டாம்.

210. வாய்பேசாத பிராணிகளின் நிமித்தம் நீங்கள் ஆண்டவனுக்குப் பயந்து கொள்ளுங்கள்! சவாரி செய்வதற்குத் தகுதியாயிருக்கும் போது, அவற்றின்மீது ஏறிச் செல்லுங்கள்; அவை களைத்து விடுமாயின், நீங்கள் கீழே யிறங்கி விடுங்கள்.

211, உங்களுக்குள் மிகத் தீயவர் யாரென்று நான் சொல்லட்டுமா? அவர்கள், அடிமைகளை அடிப்பவர்களும்

பிறருக்குக் கொடாமல் தாமே புசிப்ப வர்களுமா யிருப்பார்கள்.

212. "தன்னுடைய அடிமைகளைத் துன்புறுத்துகிற எவனும் பிர்தௌ ஸென்னும் சுவர்க்கம் புகுத மாட் டான்," என்று நபிகள் நாயகமவர் கள்ஸல் திருவாய் மலர்ந்தருளியவுடன் அவர்களின் தோழர்கள், "யாரஸூ லல்லா(ஹ்) தங்களுடைய சிஷ்யர்க ளுள் அதிகமான அடிமைகளும் அகதி களும் இருப்பார்களென்று தாங்கள் எங்களுக்குச் சொல்லியிருக்க வில்லை யா?" என்று கேட்டார்கள். அதற்கு நபிபெருமான், "ஆம், வாஸ்தவந்தான், அவ்வாறாயின், உங்களுடைய குழந் தைக ளிடத்திலிருப்பது போலவே அவர்களிடத்திலும் பக்ஷம்பாராட்டுங் கள்; நீங்கள் புசிப்பதையே அவர்க ளுக்கும் புசிக்கக் கொடுங்கள். உங்

களைப்போல் தங்களுடைய தொழுகை யையும் தொழுது வரும் அடிமைக ளனைவரும் உங்களுடைய சகோதரர் களா யிருக்கிறார்கள்,'' என்று விடை பகர்ந்தார்கள்.

213. பிறரால் புண்ணடைந்த ஒரு வன் அந்த எதிரியை மன்னிப்பானு யின், ஆண்டவன் அவனுடைய குற் றங்களையும், குறைப்பான்.

214. அல்லாஹுத் தஆலாவின் அடியார்களுள் முதன்மை யானவர் கல்விமானாகவும், நியாயவர் னாகவும் இருக்கக்கூடிய அரசரா யிருப்பார்; அறிவில்லாத தீய மன்னர்களே மகா பொல்லாதவர்களா யிருப்பார்கள்.

215. அல்லா(ஹ்)வின் மீதும் நியா யத்தீர்ப்பு நாளின்மீதும் நம்பிக்கை கொண்ட ஒருவன் (அஃதாவது, ஒரு முஸ்லிம்) தன்னுடைய விருந்தின

ருக்கு மரியாதை செய்வான்; ஆண்டவன் மீதும் அந்த இறுதி நாளின் மீதும் நம்பிக்கை வைத்தவன் தன்னுடைய அயல் வீட்டுக் காரர்களுக்கு உபத்திரவம் செய்ய மாட்டான்; மேலும் ஒரு மூமினானவன் பேசினால் நல்ல வசனங்களையே பேசவேண்டும்; இன்றேல், மௌனமா யிருக்கவேண்டும்.

216. வீட்டுக்காரருக்கு அசௌகரியம் உண்டாகும் வரையில் விருந்து வந்தவன் (வெறுமையாய்த்) தங்குவது சரியன்று.

217, "யாரஸூலல்லா(ஹ்)! நான் ஒரு மனிதன் வீட்டில் தங்கியிருந்து, அவன் எனக்கு விருந்துபசாரம் செய்யாதபோது, அப்படிப் பட்டவன் என்னுடைய வீட்டில் வந்து தங்குவானாயின், நான் அவனுக்கு உபசாரம்

செய்ய வேண்டுமா? அல்லது அவன் எனக்குச் செய்ததுபோல் நானும் செய்ய வேண்டுமா?'' என்று ஒருவர் கேட்டபோது, அதற்கு நபிகள் நாயகமவர்கள், ''அவனுக்கு நீர் மேதை மரியாதையான உபசாரம் புரிவீராக,'' என்று விடை பகர்ந்தார்கள்.

218. ரஸூல் நாயகமவர்கள் தங்களுடைய அறைக்குள்ளிருந்த போது, தொடையின்கீழ்க் கால்களை மடக்கிக் கொண்டு தரையில் மண்டியிட்டுக் குந்தி யிருந்தார்கள். அப்பொழுது அங்கே யிருந்த பாலைவனத்து அரபி ஒருவர், ''இவ்வாறு தாங்கள் உட்கார்ந்திருப்பதன் காரண மென்ன?'' என்று வினவினார். அதற்கு ரஸூலுல்லா(ஹ்) அவர்கள், ''நிச்சயமாகவே அல்லாஹுத் தஆலாவானவன் என்னை ஒரு பெருமையுள்ள அரசனு

கச் செய்யாமல், தாழ்மையான ஓர் அடிமையாகவே செய்திருக்கிறான்,'' என்று விடை பகர்ந்தார்கள்.

219. பந்தியிலிருக்கும் போது போஜன பதார்த்தங்கள் பரிமாறப்பட்ட இடத்திலிருந்து மிகுதியிருக்கும் சாமான்களை வீட்டுக் குடையவர் எடுத்துச் செல்லும் வரையில் சாப்பிட உட்கார்ந்தவர் ஒருவரும் எழுந்திருப்பது கூடாது; பந்தியிலுள்ள எல்லோரும் உண்டு முடிக்குமுன் ஒருவரும் முதலில் எழுந்திருக்கலாகாது; அவ்வாறின்றி, ஒருவன் தவறி எழுந்து விடுவானாயின், மற்றோரிடத்தில் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

220. ரஸூல் நாயகமவர்கள் பந்தி போஜனம் பண்ணும் போது இறுதி வரையில் பசியாறுவார்கள்; மற்றவர்களுக்குமுன் எழுந்திருக்கவு மாட்டார்

கள்," என்று இமாம் ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்,

221. ஒருவர் தம்முடைய விருந்தினரை வழிகூட்டி யனுப்பும்போது வாயிற்படி வரையில் உடன் வருவாராயின், அவர் என்னுடைய முறையைப் பின் பற்றியவரா யிருப்பார்.

222. எஜீதின் குமாரியாகிய அஸ்மா கூறுவதாவது: நபி பெருமானாரவர்கட்கு ஆகாராதிகளைக் கொண்டு வந்து வைத்தார்கள்; அப்பொழுது எங்களுள் சில பெண்டுகளை நோக்கிப் பசியாறும்படி நம் ரஸூலுல்லா(ஹ்) அவர்கள் வேண்டிக் கொண்டார்கள்: ஆனால், எங்களுக்குப் பசி அதிகமாயிருந்தும், ஆகாரம் வேண்டியதில்லையென்று கூறினோம். அதற்கு அவர்கள், "ஓ மாதர்காள்! உங்களுடைய பசியுடன் பொய்யையும் கலக்காதீர்

கள்," என்று சொன்னார்கள்.

223. உங்களுடைய நம்பிக்கை (ஈமான்) பூர்த்தியடையும் வரையில் பிர்தௌஸுக்குள் நுழைய மாட்டீர்கள்; ஆனால், நீங்கள் ஒருவரை யொருவர் உண்மையாகவே நேசிக்கும்வரையில் உங்களுடைய நம்பிக்கை (ஈமான்) பூர்த்தியடைய மாட்டாது.

224. பீபி ஆயிஷா[ரலி] அவர்கள் கூறுவதாவது: நம் ரஸூல் நாயகமவர்களிடம் போகவேண்டுமென்று ஒரு யூதக் கூட்டத்தார் விடை பெற்றுக் கொண்டு அவர்களிடம் நெருங்கிய போது.* "அஸ்ஸாமு அலைக்கும்" (உமக்குச் சாக்காடு வரக்கடவது) என்

---

* முஸ்லிம்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது "அஸ்ஸலாமு அலைக்கும்" (உமக்குச்சாந்தி உண்டாகுக) என்று சொல்வது வழக்கம்.

று பரிகாசமாகச் சொன்னார்கள். உடனே நான் ஆத்திரப்பட்டு, "உங்கள் மீது சாபமும் சாக்காடும் வரக்கடவன," என்று கோபித்துக் கொண்டேன். அதைக் கேட்டு ரஸூலுல்லா(ஹ்) அவர்கள், "ஏ ஆயிஷா! யாரிடத்தும் பக்ஷமாய் நடந்துகொள்ளக் கற்றுக்கொள்வாயாக. ஒருவரிடத்தும் நீ கடினமாய்ப் பேசவேண்டாம்." என்று எனக்கு அறிவுறுத்தினார்கள். அதற்கு நான், "அவர்கள் சொன்னது தங்கள் செவியில் படவில்லையா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "வாஸ்தவம்தான்; 'உங்களுக்கும் அப்படியே ஆகக்கடவது,' என்றுதானே நான் எப்பொழுதும் மறுமொழி சொல்வேன்," என்று கூறினார்கள்.

225. சில வாக்கு வன்மையானது மந்திர சக்திபோ லிருக்கிறது.

226. சில கவியானது அழகிலும் அறிவிலும் சிறந்ததாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

227. வித்வான்கள் பேசிய பேச்சுக்களுள் ளெல்லாம் லபீத் என்பவர், "அல்லாஹுத் தஆலா ஒருவனைத் தவிர மற்றையது ஒவ்வொன்றும் வீண்புகழ்தானென்று தெரிந்து கொள்ளுங்கள்," என்று கூறிய வசனங்கள் மட்டும்தாம் மகா உண்மையான வார்த்தைகளா யிருக்கின்றன.

228. சாந்தீகமும் தன்னடக்கமும் ஈமானின் இரண்டு சாகை (கிளை) களாயிருக்கின்றன; வீண்பேச்சும், வாய்ச் சாதுரியம் செய்வதும் முனபிக் (கள்ளத்) தனத்தின் இரண்டு சாகைகளாயிருக்கின்றன.

229. நிச்சயமாகவே என்னால் மிகப் பிரியத்துடன் விசுவசிக்கப் படுகிறவர்

களும் மறுவுலகில் என்னருகில் சமீ பித்திருக்கக் கூடியவர்களு மாகியவர் கள் நல்ல குணசாலிகளா யிருப்பவர் களே யாவார்கள்; மேலும் என்னி டத்தில் பரம விரோதிகளா யிருப்பவர் களும் என்னைவிட்டு நெடுந்தூரம் விலகி யிருப்பவர்களுமா யிருப்பவர் கள், வெஞ்சினத்தால் வெடுவெடுப் புள்ளவர்களா யிருப்பார்கள்.

230. சில வாக்குச் சாதுரியமானது மந்திர சக்திபோ லிருக்கிறது; ஆனல், சில அறிவானது அறியாமைக்கே கா ரணமா யிருக்கிறது; மேலும், சில செய்யுட்கள் தத்துவார்த்தத்தைப்போ திக்கின்றன; ஆனல், சில பேச்சுக்கள் கேட்போருக்குச் சுமையா யிருக்கின் றன.

231. ஒரு முஸ்லிமைத் திட்டுவதா னது ஆண்டவனுக்கு மாற்றம் செய்த

தாகும் ; மேலும் ஒரு முஸ்லிமுடன் சண்டைசெய்வது குபுரியத்தா யிருக்கும்.

232. ஒரு முஸ்லிமைப் பார்த்துக் காபிரென்று கூறும் ஒவ்வொரு மனிதன்மீதும் அதே குபுரியத்து (காபிராகக்கூடிய பாதகம்) வந்து சாரும்.

233. உண்மையைப் பேசுவோருக்கு ஒருவரைத் தூஷிப்பது பொருத்தமான காரியமா யிராது.

234. நீங்கள் உண்மை மயமாகவே ஆய்விடுங்கள். பொய்யைத் தள்ளி மெய்யையே தழுவுங்கள்.

235. மனிதர்களுடைய புகழுக்குப் பங்கம் விளைவிப்பது ஒரு மூமினுக்கு அழகன்று ; எவரையும் சபிப்பதும் அவருக்கு அழகன்று ; ஒருவரைத் தூஷிப்பதும் அவருக்குப் பொருத்தமன்று ; மேலும் வீண் பெருமையா

கப் பேசுவதும் ஒரு மூமினுக்குத் தகுதியன்று.

236. தீயவர்களுடன் சகவாசம் செய்வதைக் காட்டினும் தனியே குந்தியிருப்பது மெத்த நன்மையா யிருக்கிறது; மேலும், தனித்திருப் பதைக் காட்டினும் நல்லோரினத்தில் சேர்ந்திருப்பது அதனினும் அதிகம் நலமாகும்; இன்னும் வீண் வார்த்தை களைக் காட்டினும் மௌனமாயிருப் பது மெத்த நலமாகும்; ஆனால், மௌ னமா யிருப்பதைக் காட்டினும் ஞான த்தை நாடிவருகிறவ ரிடத்தில் நல்ல வார்த்தை சொல்வது அதனினும் மிக்க நலமாயிருக்கும்.

237. ஆண்டவனுடைய சன்மார்க் கத்தை எடுத்துக் காட்டும் விஷயத்தில் அதை இழிவு செய்து கூறும் ஒருவனு டைய கூற்றுக்கும் அஞ்சவேண்டாம்.

238. மனிதர்களுக்கு மனவருத்த மா யிருப்பினும் அஃது அவர்களுக் குக் 'கசப்பா'யிருப்பினும் உண்மை யையே பேசுங்கள்.

239. உங்களிடத்திலேயே சில கு றைகள் இருக்கும்போது அப்படிப் பட்ட குற்றங் குறைகள் மற்றவர்களி டத்தில் இருக்கின்றனவோ வென்று நோட்ட மிடாதீர்கள்; அவற்றைக் குறித்துப் பேசவும் வேண்டாம்.

240. மலர்ந்த முகத்துடன் அதிகம் மௌனம் சாதிப்பது நலம்; இவ்வி ரண்டு செய்கைகளைக் காட்டினும் சிரேஷ்டமானது வேறொன்று மில்லை.

241. ஆறு விஷயங்களி லிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங் கள்; பிறகு பிர்தௌஸென்னும் சுவர் க்கம் உங்களுக்குக் கிடைப்பதற்கு நான் உத்தரவாதியா யிருக்கிறேன்:

நீங்கள் பேசும்பொழுது உண்மையை யே பேசுங்கள் ; வாக்குறுதி செய்யும் பக்ஷத்தில் அதை நிறைவேற்றித் தீருங்கள் ; உங்களிடம் வைத்த அமானத்தை மோசஞ் செய்யாதீர்கள் ; உங்களுடைய எண்ணத்திலும் செய்கையிலும் பரிசுத்தமா யிருந்துகொள்ளுங்கள் ; மேலும், பிறரை அடிப்பதினின்றும், சட்ட விரோதமானதையும் கெட்ட வஸ்துவையும் எடுப்பதினின்றும் உங்களுடைய கரங்களை ஒடுக்கிக் கொள்ளுங்கள்.

242. புறம் பேசுவதானது ஒலு* வையும் நோன்பையும் முறித்துவிடும்.

243. மரியத்தின் மகனை இயேசுவை (ஈஸாவை)த் தேவனென்றும்

---

* "ஒலு"—தொழுகைக்காக முகம் கை கால்தலை முதலிய அவயவங்களைக் கழுவுதல்

தேவ குமாரனென்றும் கிறிஸ்வர்கள் ஸ்தோத்திரம் செய்வதேபோல் என்னைப் புகழும் விஷயத்தில் எல்லை கடந்து புகழவேண்டாம்; நான் இறைவனுடைய ஓர் அடிமையாகவே யிருக்கிறேன்; ஆதலின், என்னை ஆண்டவனுடைய அடிமையென்றும் அவனுடைய தூதரென்றும் கூப்பிடுங்கள்.

244. நிச்சயமாகவே பெருமையில்லாமல் பணிவுடன் தாழ்மையாகவே யிருக்கும்படி எனக்கு ஆண்டவன் கட்டளையிடுகிறான்; மேலும், ஒருவர் மற்றொருவரை ஹிம்ஸை செய்யக்கூடாதென்றும் அவன் எனக்கு அறிவிக்கிறான்.

245. ஒரு கூட்டத்தார் தங்களுடைய மூதாதைகளின் பெருமையைக் குறித்து வீண்பெருமை பாராட்டுவது கூடாது; அவர்கள் தங்களுடைய

வீண்பெருமையை விடாம விருப்பார்
களாயின், ஆண்டவன் முன்னிலையில்
அவர்கள், தன்னுடைய மூக்கினால்
மலத்தை உருட்டிச் செல்லும் ஒரு
கறுப்புவண்டைக் காட்டினும் மகா
துர்த்தர்களா யிருப்பார்கள் ; நிச்சய
மாகவே அல்லாஹுத் தஆலாவான
வன் உங்களிடத்திலிருந்து வீண்பெரு
மையையும் கர்வத்தையும் ஒழித்து
விட்டான். ஒருவன் இருந்தால் சன்
மார்க்கமுள்ள மூமினா யிருத்தல் முடி
யும்; இன்றேல், அவன் 'பாபியாக
இருத்தல் வேண்டும். ஏனெனின்,
மனிதவர்க்கமெல்லாம் ஆதத்தின் மக்
களாவர்; ஆதமோ மண்ணிலிருந்து
படைக்கப்பட்டார்.

246. பனீ ஆமிர் கூட்டத்தாரின்
தூதர்களுடன் நான் நபிபெருமான்
முஹம்மது முஸ்தபா ரஸூல்ஸல் அவர்

களிடம் சென்றேன்; "தாங்கள் தாம் எங்களுடைய எஜமான்" என்று அவர்களிடம் சொன்னோம்; அதற்கு ரஸூல் நாயகமவர்கள், "ஆண்டவனொருவனே உங்களுடைய எஜமான்" என்று விடை பகர்ந்தார்கள். "அவ்வாறாயின், மகாமேலான உன்னத ஸ்தானத்துக்காவது தாங்கள் உரியவர்களாயிருக்கிறீர்கள்," என்று கூறினோம்; அதற்கு, "இப்படிச் சொல்லுங்கள்; இன்றேல் இன்னும் சிறிது குறைவாகச் சொல்லுங்கள்; ஆனால், என்னைப் புகழ்வதற்காக நீங்கள் நியாயமான வரம்பைத் தாண்டிவிட வேண்டாம்," என்று நம் நபிகள் நாயகமவர்கள்ஸல் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

[இவ்வுலகிலுள்ள எல்லா மதத்தலைவர்களுள்ளும் நமது நபிகள் பெருமானார்ஸல்

மட்டுமே தெய்வமாகவோ அல்லது தெய்வத்தின் அவதாரமாகவோ பூஜிக்கப்படுவதில்லை. எல்லோரையும்போல் எம்பெருமானையும் ஒரு மனிதராகவே கொள்ளவேண்டுமென்பதுதான் எமது வேதக்கட்டளை.]

247. ஒருவன் தான் பிறருக்குச் செய்யும் ஹிம்ஸையில் தனக்கு உதவி புரியும்படி மற்றையோரைத் துணைக்கழைப்பானாயின், அப்படிப் பட்டவன் என்னைப் பின்பற்றியவனாயிருக்கமாட்டான்; மேலும், தன்னுடைய கூட்டத்தாருக்காக ஒருவன் அக்கிரமமாகச் சண்டை செய்வானாயின், அவனும் என் வர்க்கத்தில் சேரான்; இன்னும், தன்னுடைய கூட்டத்தார் செய்யும் அக்கிரமத்தில் ஈடுபட்டு ஒருவன் அவர்களுக்கு உதவி புரியும்போது மரணமடைந்து விடுவானாயின், அவனும் என்வர்க்கத்தில் சேரான்.

248. ஒரு வஸ்துவினிடத்தில் உமக்குப் பற்று அதிகப்பட்டு விடுமாயின், அதன் காரணமாக உம்முடைய காதுகள் செவிடாய்விடும்; கண்களும் குருடாய்விடும். (அஃதாவது, அவ்வஸ்துவின் மீதுண்டாகும் அதிகப் பிரியத்தினுல் கண்ணிருந்தும் குருடாய்விடுவார்; செவியிருந்தும் செவிடாய் விடுவார்.)

249. தன்னுடைய சுற்றத்தார்கள் தனக்கு உதவி புரியும்போது தானும் அவர்களுக்கு உதவி புரிவாணுயின், அவன் ஓர் உண்மையான சுற்றந்தழுவிய மனிதனுகான்; ஆனுல், தன்னுடைய சுற்றத்தார்கள் தனக்கொருவிதமான உதவியும் புரியாமலிருக்கும்போது அவர்களுக்கு உதவி புரிபவனே உண்மையான சுற்றந்தழுவியவனுவான்.

250. பிதாவுக்குப் பிரியமுண்டா கும்படி நடந்தால், ஆண்டவனும் அவன் மீது பிரியம் காட்டுகிறான்; பிதாவுக்கு அப்பிரீதியை உண்டுபண்ணினால், ஆண்டவனும் அவனிடம் அப்பிரீதியையே காட்டுகிறான்.

251. எவனொருவன் தன்னுடைய சுற்றத்தார்களை ஒதுக்கித் தள்ளிவிடுகிறானோ, அவனுடைய குடும்பத்தில் ஆண்டவனுடைய கிருபை ஜனிப்பதில்லை.

252. பிர்தௌஸென்னும் சுவர்க்கத்துக்குள் அதன் அதிசிரேஷ்டமான வாயில் வழியே ஒருவன் நுழைய விரும்புவானாயின், அவன் தன்னுடைய தாய் தந்தையருக்குத் திருப்தி செய்தல் வேண்டும்.

253. "யாரஸூலல்லா(ஹ்)! நிச்சயமாகவே யானொரு பெரும்பாபம் செய்

துவிட்டேன்; அதைப் போக்கிக்கொ
ள்ள யாதேனு மொரு மார்க்க முண்
டா?" என்று கேட்டேன். அதற்கு
அவர்கள் என்னுடைய மாதாஉயிருட
னிருக்கின்றாரா வென்று வினவினார்
கள்; இல்லையென்று மறுமொழி கூறி
னேன். என்னுடைய சிற்றன்னை யே
னும் உயிருடனிருக்கிறாரோ வென்று
நம் நபி பெருமான்ஸல் கேட்டார்கள்.
"ஆம்" என்று பதில் சொன்னேன்.
"அவ்வாறாயின் நன்று; உடனே செ
ன்று உன் சிற்றன்னைக்கு வேண்டிய
உதவி புரி; உன்னுடைய பாபமானது
மன்னிக்கப்படும்," என்று நபிகள் நா
யகமவர்கள்ஸல் கட்டளையிட்டனுப்பி
னார்கள்.

254. ஜிஃரானா என்னுமிடத்தில் நபி
கள் பெருமானார் இறைச்சி பங்கிட்டு
க்கொண் டிருந்தார்கள். அப்பொழுது

அவர்க ளருகில் ஒரு மாது வந்து நின்றார்; உடனே நபிபெருமான் தங்களுடைய ஆடையை விரித்து அதன்மீது அந்த மாதை உட்காரச்சொன்னார்கள். ரஸூலுல்லா(ஹ்) அவர்கள் அந்த அம்மாளுக்கு அத்துணை மரியாதை செய்வதைக் கண்ட நான் அவர் யாரென்று வினவினேன். அப்பொழுது அங்கிருந்தவர்கள், "இவர்தாம் நபிகள் பிரானின் போஷகத்தாய்," என்று எனக்கு விடை பகர்ந்தார்கள்.

255. ஒருவருடைய தாய்தந்தையர் தமது புத்திரனை வருத்தி யிருந்தபோதிலும், அவர் தமது மாதா பிதாக்களுக்கு அதிகமான நன்மையே செய்யக் கட்டுப் பட்டுள்ளார்.

256. தன்னுடைய தாய் தந்தையருக்கு மரியாதை செய்து அவர்கள் மீது பக்ஷமும் பிரியமும் பாராட்டிப்

பார்க்கக்கூடிய ஒவ்வொரு குழந்தைக்கும் அப்படிப்பட்ட ஒவ்வொரு பார்வைக்கும் ஆண்டவன் மறுவுலக யாத்திரைக்குரிய அதிகமான நன்மையே கொடுப்பான்.

257. சிறிய சகோதரன் தன்னுடைய பெரிய சகோதரனுக்குச் செய்யவேண்டிய கடமையானது ஒருகுழந்தை தன்னுடைய பிதாவுக்குச் செய்ய வேண்டிய கடமையையொத்திருக்கிறது.

258. மனித வர்க்கத்தாரிடத்தில் பக்ஷம் பாராட்டாதவரிடத்தில் ஆண்டவனும் பக்ஷம் பாராட்ட மாட்டான்.

259. ஒருவன் பெண் சிறுமிகளுக்கு உபகாரம் செய்வானாயின், அவனுக்கு அஃதொரு நாகத்தின் தீயைக் காக்கக்கூடிய திரையாயிருக்கிறது.

260. பருவமடையும் காலம் வரையில் இரண்டு சிறுமிகளை வைத்து ஆத

ரிக்கிறவன் எவனோ, அவன் மறுவுலக வாழ்க்கையில் என்னுடைய இரண்டு விரல்களைப்போல் என்னுடன் சேர்ந் திருப்பான்.

261. விதவைகளுக்கும் ஏழைக ளுக்கும் உண்டியளிப்போர், அல்லா (ஹ்) வின் பாதையில் அரிய தர்மம் செய்வோரையும், அல்லும் பகலும் அவனையே வணங்குவோரையும், அடி க்கடி அவனுக்காக நோன்பு நோற் போரையும் ஒத்திருக்கிறார்.

262. நானும் அகதிகளை ஆதரிப் போரும் (அந்த அகதி அவருடைய நெருங்கிய சுற்றத்தின ராயினும், தூர த்திய உறவினராயினும், அன்னியரா யினும் தோஷமில்லை) மறுவுலகில் என் னுடைய இரண்டு விரல்களும் ஒன் றோடொன்று நெருங்கி யிருப்பதே போல் ஒரே ஸ்தானத்தில் ஒருவரை

யொருவர் தொட்டுக் கொண்டு நெரு ங்கி யிருப்போம்.

263. முஸ்லிம்க ளனைவரும் ஒரே மனிதனைப்போ லிருக்கிறார்கள். அம் மனிதன் தன் தலையில் நோவிருக்கிற தென்று கூறுவானாயின், அவனுடைய உடம்பு முழுதும் நோவடையும்; மே லும் அவனுடைய கண்ணில் வலியுண் டானால் அங்க முழுதும் அவ்வலியால் வேதனையடையும்.

264. எல்லா முஸ்லிம்களும் ஒரே அஸ்திவாரம்போ லிருக்கிறார்கள். அ தில் ஒரு கல் மற்றொரு கல்லைத் தாங் கிக்கொண்டிருக்கிறது. அஃதேபோல் முஸ்லிம்களும் ஒருவரை யொருவர் தாங்குதல் வேண்டும்.

265. ஒரு முஸ்லிம் மற்றொருவரால் துன்புறுத்தப் பட்டபோதிலும் அல் லது இவரே மற்றொருவரைத் துன்

புறுத்தியபோதிலும், அப்படிப்பட்ட முஸ்லிம் சகோதாருக்கு உதவி புரியுங்கள். "ஆனுல், ஒரு முஸ்லிமே மற்ருெருவரைத் துன்புறுத்தும் போது அவருக்கு எவ்வாறு உதவிபுரிதல் கூடும்?" என்று கேட்டார்கள். அதற்கு நபிகள் நாயகமவர்கள், "துன்புறுத்துகிறவருக்கு உதவி புரிவதென்பது அவரை அத்தீய வழியினின்றும் விலக்கி அப்படிச் செய்யாமலிருக்கும்படி தூண்டுவதுதான்," என்று விடை பகர்ந்தார்கள்.

266. முஸ்லிம்களெல்லோரும் இஸ்லாத்தின் சகோதார்களா யிருக்கிருர்கள்; ஆதலின், அவர்கள் ஒருவருக்கொருவர் துன்பம்செய்யாமலும், ஒருவருக் கொருவர் உதவிபுரிவதை விட்டு விடாமலும், ஒருவரை யொருவர் வெறுப்புடன் நடத்தாமலும் இருந்து

கொள்வார்களாக. சன்மார்க்கத்தின் ஸ்தானமானது ஹிருதயமா யிருக்கிறது; ஆதலின், எவருடைய ஹிருதயத்தில் சன்மார்க்கமானது நிறைந்திருக்கிறதோ, அவருடைய ஹிருதயமானது மற்றொரு முஸ்லிமை வெறுப்புடன் நடத்தமாட்டாது. மேலும் ஒரு முஸ்லிமுடைய எல்லா உடைமைகளும் மற்றொருவருக்கும் ஹராமா யிருக்கின்றன; இவ்வாறே அவருடைய இரத்தத்தைச் சிந்துவதும், அவருடைய பொருளையேனும் புகழையேனும் சேதப்படுத்துவதும் ஹராமாயிருக்கும்— (அஃதாவது, சட்ட விரோதமான விலக்கலா யிருக்கும்.)

267. ஒருவர் தமக்கு வேண்டுமென்று விரும்புவதைத் தம்முடைய சகோதாருக்கும் வேண்டுமென்று விரும்பும் வரையில் அவர் உண்மையான

உறுதியையுடைய மூமினாக ஆதல் முடியாது.

268. மூன்று மனிதர்கள் ஒன்றாக இருப்பார்களாயின், அவர்களுள் ஒருவரைத் தனித்துவிட்டு மற்றிருவரும் காதோடுகாது வைத்து இரகசியம் பேசுவது கூடாது; மூவரும் கலந்துகொண்டாலொழிய ஒருவருக்கு மட்டும் மன வருத்தத்தை உண்டுபண்ணுதல் தகுதி யன்று.

269. சன்மார்க்க மென்பதே தானும் பரிசுத்தமா யிருந்துகொண்டு பிறருக்கும் நல்லறி வுறுத்துவ தாகும்.

270. இஸ்லாத்தில் நன்னம்பிக்கை வைத்திருப்பதன் அடையாளம் பக்ஷம் பாராட்டுவ தாகும். எவரிடத்தில் பக்ஷ மில்லையோ அவரிடத்தில் உறுதியான ஈமானு மிராது.

271. சிருஷ்டிப் பொருள்க ளிடத்

தில் பக்ஷம் பாராட்டுவோரிடத்தில் ஆண்டவனும் பக்ஷம் பாராட்டுகிறான்; ஆதலின், இவ்வுலகிலுள்ள மனிதர்களிடத்தில், அவர்கள் நல்லவராயினும் கெட்டவராயினும், பக்ஷமாய் நடந்து கொள்ளுங்கள்; கெட்டவரிடத்தில் பக்ஷம்பாராட்டுவதென்பது அவர்களைத்தீமையி னின்றும் திருப்புவதாகும்.

272. சிறுவர்களிடத்தில் பிரியமாயில்லாதவர்களும், பெரியோர்களின் கௌரவத்தைக் காப்பாற்றாதவர்களும் என்னுடைய வர்க்கத்தில் சேர்ந்தவாராகார்; மேலும் ஏவலைப் பற்றிப் பிடிக்கும் படியும் விலக்கலைக் கைவிடும்படியும் பிறரைத் தூண்டாதவரும் என் வர்க்கத்தில் சேர்ந்தவாராகார்.

273. ஒரு வயோதிகரைக் கண்ணியப்படுத்துவது நிச்சயமாகவே ஆண்டவனிடத்தில் காட்டக் கூடிய ஒரு

வகை மரியாதையா யிருக்கிறது.

274. எவருடைய வீடுதியில் அகதியொருவன் அதிகப் பிரியத்துடன் நடத்தப் படுகிருனே, அந்த முஸ்லிமின் வீடுதான் மகா சிரேஷ்டமான வீடாயிருக்கிறது; மேலும், எவருடைய வீட்டில் அகதியொருவனை அவமரியாதை செய்கிருரோ, அவருடைய வீடுதான் மிகக் கெட்ட முஸ்லிமின் வீடாயிருக்கும்.

275. மூன்று சகோதரிகளை யாவது அல்லது மூன்று புத்திரிகளையாவது, எவரொருவர் விசுவசித்து, அவர்களுக்கு வேண்டிய நன்னடக்கைகளையும் கற்றுக் கொடுத்து, அவர்கள் பருவமடையுமட்டும் பக்ஷம் பாராட்டுகிருரோ, அவருக்கு ஆண்டவன் சுவர்க்கானந்தத்தைச் சுகானுபவமாகச் செய்து வைப்பாளுக.

276. நிச்சயமாகவே ஒருவன் தன்னுடைய குழந்தைக்குச் சற்குணத்தைப் போதிப்பானாயின், அவனுக்கு அக்காரியம் ஒரு மூட்டை தானியத்தைச் சன்மானம் கொடுப்பதைக் காட்டினும் அதிகமான நன்மையைத் தரும்.

277. ஒரு தந்தையானவன் தன்னுடைய குழந்தைக்குச் சற்குணத்தைக் கற்றுக் கொடுப்பதைக் காட்டினும் சிலாக்கியமானதை அவன் அக்குழந்தைக்குக் கொடுப்பது முடியாது.

278. நானும் தன்னுடைய நிறமும் முகமும் கருநிறமடைந்திருக்கும் ஒரு மாதும் மறுவுலகில் என்னுடைய இரண்டுவிரல்களைப் போல் அதிசமீபத்தில் நெருங்கியிருப்போம் ; அந்த மாது யாரெனின். தன்னுடைய குடும்பத்தை விருத்திசெய்யும் விஷயத்தில் பட்

டகஷ்டத்தினால் தன்னுடைய முகத்தையும் நிறத்தையும் கரு நிறமாக்கிக் கொண்ட ஒரு விதவையாயிருப்பாள்.

279. எவரொருவருக்கு ஒரு பெண் குழந்தை யிருந்து, அதை அவர் உயிருடன் புதைக்காமலும், திட்டாமலும் மற்றக் குழந்தைகளுடன் பக்ஷபாதம் பாராட்டாமலும் நடத்துகின்றாரோ, அவரை ஆண்டவன் பிர்தௌஸென்னும் சுவர்க்கத்துக்குள் புகுத்தி வைப்பானாக.

280. நிச்சயமாகவே உங்களுள் ஒவ்வொருவரும் அவரவருடைய சகோதரருக்கும் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி போலிருக்கின்றார்; இவ்வா றிருக்கும்போது, ஒருவர் தம்முடைய சகோதாரிடத்தில் ஒரு குற்றத்தைக் காணும்போது அதை அவரிடம் எடுத்துக்காட்டி அக் குற்றத்தை ஒழித்து

விடும்படி சொல்லவேண்டும்.

281. தம்முடைய நண்பர்க ளிடத்தில் நல்ல விதமாய் நடந்து கொள்ளுகிறவரே ஆண்டவனிடத்திலும் நல்லவரா யிருப்பார்; தம்முடைய அண்டை அயல் வீட்டார்களிடம் நல்ல விதமாய் நடந்து கொள்ளுகிறவர் ஆண்டவனுடைய சமீபத்திலும் நல்லவராய்க் கருதப்படுவார்.

282. மனிதர்களிடத்தில் அவரவருடைய மேன்மைக்குத் தக்கவாறு மரியாதையுடன் நடந்துகொள்ளுங்கள்.

283. தான் மட்டும் வயிறு நிறையப் புசித்துக்கொண்டு, தன்னுடைய அக்கம் பக்கத்தி லுள்ளவர்களைப் பசியுடன் விட்டுவிடுகிறவன் ஓர் உண்மையான முஸ்லிமா யிருக்கமாட்டான்.

284. நாவினால் கிட்டிய வசைமொழிகளுக்கெல்லாம் மத சம்பந்தமான

வணக்கத்துக்குரிய அனுஷ்டானங்களும் பிராயச்சித்தம் தாமாட்டா.

[அஃதாவது, மார்க்க சம்பந்தமான வணக்கங்களால் கிடைக்கக்கூடிய நன்மையைக் காட்டினும் வாயினால் திட்டக் கூடிய வசை மொழிகளின் பாபமானது அதிகமாயிருக்கு மென்பது கருத்து.]

285. ஒருவருடைய ஹிருதயமும் நாவும் முஸ்லிமாகும் வரை அவர் மட்டும் முஸ்லிமாயிருப்பது முடியாது.

[ஹிருதயம் முஸ்லிமாவ தென்பது அதன் பரிசுத்த எண்ணமாகும்; நா முஸ்லிமாவதென்பது வீண் சொற்களினின்றும் அதைக் காத்துக்கொள்வதாகும்.]

286. சிருஷ்டிப் பொருள்களெல்லாம் கடவுளுடைய குடும்பமே யாகும்; ஏனெனின், அவற்றையெல்லாம் காப்பது அவன் பொறுப்பா யிருக்கிறது. ஆதலின், ஆண்டவனுடைய

குடும்பத்துக்கு நன்மை செய்கிறவரே அவனிடத்தில் அதிக மேம்பா டுற்றவ ரா யிருப்பார்.

287. சற்குணங்களுக் குள்ளெல் லாம் மேலான நற்குண மொன்றை நான் உங்களுக்குச் சொல்லவேண்டா மா? உம்முடைய மகளை அவளுடைய புருஷன் (தல்லாக்) விவாக விலக்குச் சொல்லி உம்முடைய வீட்டிற்குத் திருப்பி யனுப்பி விடும்போது, அந்தக் குமாரிக்கு நீங்கள் நன்மை செய்து உதவி புரிவதுதான்.

288. மனிதர்களுடைய ஆவிகளெ ல்லாம் இந்தச் சரீரத்துக்குள் புகு முன் ஒன்று சேர்க்கப்பட்ட சைன் யங்களைப் போல் திரளாயிருந்தன; அதன் பின் அவை பிரிக்கப்பட்டு வெ வ்வேறு சரீரத்துக்குள் அனுப்பப்பட் டன. ஆதலின், உடம்புக்குள் புகு

முன் எந்த எந்த ஆவி முகப்பழக்க மடைந்திருந்தனவோ, அவையெல்லாம் இவ்வுலகில் ஒன்றோடொன்று பிரியமா யிருக்கின்றன. ஆனால், அவ்வேளையில் அறிமுகம் செய்துகொள்ளாத ஆவிகள் இவ்வுலகில் ஒன்றையொன்று அதிகம் வெறுக்கின்றன.

289. நோன்பு நோற்பதைக்காட்டினும், தானதர்மம் புரிவதைக் காட்டினும், தொழுதுகொள்வதைக் காட்டினும் ஒரு மேலான காரியத்தை நான் உங்களுக்குத் தெரிவிக்கவேண்டாமா? ஒருவருக்கொருவர் சமாதானம் செய்துவைப்பதே இப்படிப்பட்ட மேலான காரியமாகும். அசூயையும் விரோதமும் நன்மையின் வேரை அடியோடு கல்லிவிடுகின்றன.

290. பொறாமையினின்றும் நெடுந்தூரம் விலகிக் கொள்ளுங்கள். ஏனெ

னின், தீயானது விறகைத் தின்பது போல் பொறுமையானது நற்காரியங்களின் நன்மைகளை யெல்லாம் தின்று விடுகின்றது.

291. ஏ, நாவினால் மட்டும் இஸ்லாத்தைத்தழுவி மனத்தினால் உண்மை கொள்ளாத மனிதர்காள்! முஸ்லிம்களைத் துன்பம் செய்யாதீர்; அவர்களைப்பற்றிப் புறம்பேசாதீர் ; அவர்களுடைய குற்றங்குறை இன்னதென்றும் உசாவிக்கொண்டிராதீர்.

292. தாரித்திரியமானது இஸ்லாத்தில் உங்களுக்குள்ள உறுதியை அசைக்கக்கூடிய காலம் சமீபத்திலிருக்கிறது.

293. நிச்சயமாகவே நீர்* அல்லா

---

* அப்துல் கைஸ் என்பவரிடத்தி லிருந்து நபிபெருமானிடம் வந்த தூதின் தலைவரான அஷ்பஹ் என்பவரை நோக்கி இது கூறியது.

(ஹ்)வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் பொருத்தமான இரண்டு குணவிசேஷத்தை உடையவரா யிருக்கிறீர்: அவை எதையும் சகிக்கக்கூடிய மனோதிடமும் சாந்தகுணமு மாகும்.

294. நாம் எடுத்துக் கொள்ளும் காரியங்களின் பலாபலனைச் சீர்தூக்கிப் பார்த்து அதன்பின் அக்காரியங்களில் உறுதியுடன் இறங்குவது ஆண்டவனுக்கு அதிகப் பிரியமுள்ள காரியமா யிருக்கிறது.

295, துரதிருஷ்டத்தில் வீழ்ந்திராத மனிதன் பூரணதைரியமும் பொறுமையுமுள்ளவனா யிருப்பது முடியாது. ஏனெனின், போதுமான அனுபவமுதிர்ச்சிக்குப் பிறகுதான் ஒருவன் பூரண வைத்திய னாகிறான்.

296. எப்பொழுதும் முகமலர்ச்சியுட னிருப்பதும், செய்யவேண்டிய

காரியங்களைச் செம்மையாய் யோசிப்பதும், ஒவ்வொரு காரியத்திலும் ஒரு மத்தியஸ்தத்தைக் கோருவதும் நுபுவ்வத்தின் இருபத்து நான்கு பங்கில் ஒரு பங்கா யிருக்கின்றன; அஃதாவது, அவையெல்லாம் நபிமார்களின் குணங்களா யிருக்கின்றன.

297. பகுத்தறிவைக் காட்டினும் மேலானதை யாவது, அல்லது அதைக் காட்டினும் முழுப் பரிபூரணமானதை யாவது, அல்லது அப் பகுத்தறிவைக் காட்டினும் மிக அழகானதை யாவது ஆண்டவன் இவ்வுலகில் யாதொன்றையும் படைக்கவில்லை. இந்தப் பகுத்தறிவின் பயனாகத்தான் ஆண்டவன் நமக்கு நன்மையை அளிக்கிறான்; காரியாகாரியங்களின் நன்மை தீமையும் இந்தப் பகுத்தறிவினால் தான் உண்டாகின்றன. மேலும் ஆண்டவ

னுடைய கோபமும் நாம் நம்முடைய பகுத்தறிவைச் செவ்வனே உபயோகிக்கா ததனுல்தான் உண்டாகின்றது. இன்னும் இதன் காரணமாகத்தான் நமக்குச் சன்மானமும் தண்டனையும் கிடைக்கின்றன.

298. நிச்சயமாகவே ஒரு மனிதன் ஐந்து வேளையும் தொழுதுகொண்டும், வருஷமொன்றுக்கு முப்பது நோன்பையும் நோற்றுக் கொண்டும், எல்லா விதமான தானதர்மங்களைச் செய்து கொண்டும், (தன் ஆயுளில் ஒரு முறை) மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜு செய்தும், இன்னும் இப்படிப்பட்ட ஏனை நற்செய்கைகளை யெல்லாம் செய்து கொண்டும் இருக்கலாம்; ஆனல், அவன் தன்னுடைய காரியங்களில் எத்துணைப் பகுத்தறிவைச் செலுத்துகிருனே அதற்குத் தக்கவாறுதான்

சன்மானத்தையும் பெற்றுக் கொள்ளுவான்.

299. நிச்சயமாகவே அல்லாஹுத் தஆலாவானவன் சாந்தமா யிருக்கிறான்; இதனால் அவன் சாந்தகுணமுள்ளவரையே அதிகம் விரும்புகிறான்; ஆதலின், சாத்மீகர்களுக்குக் கொடுக்கும் சன்மானத்தைப் போன்ற அத்துணை அதிகமான நன்மையைக் கொடூர முள்ளவர் கட்குக் கொடுப்பதில்லை.

300. எல்லாவிதமான அடக்க ஒடுக்கமும் மகா நல்ல காரியங்களாகவே யிருக்கின்றன.

301. நிச்சயமாகவே உங்களுள் மகா நேர்த்தியான குணசாலிகளே எனக்கு மிகப் பிரியமுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

302. எவரொருவர் சாந்தகுணம் வாய்ந்தவரா யிருக்கிறாரோ, அவரே

இவ்வுலகிலும் இனிவரப் போன்கிற அவ்வுலகிலும் அதிகமான நன்மையைப் பெற்ற வராயிருப்பார்.

303. தற்பெருமை யுள்ளவர்கள் சுவர்க்க லோகத்துக்குள் புகமாட்டார்கள்; கொடூரமாகப் பேசுகிறவர்களும் இவ்வாறே நஷ்டத்தி லாவார்கள்.

304. மனிதர்களுடன் சாதாரணமாகக் கலந்துகொண்டு அவர்களுடைய சுகதுக்கங்களை யெல்லாம் பாகித்துக்கொள்ளும் ஒரு முஸ்லிமானவர், அவ்வாறு பொதுமக்களுடன் கலந்து அவர்களுடைய இன்பதுன்பங்களை ஏற்றுக்கொள்ளாதவரைக் காட்டினும் மிக நல்லவரென்றே சொல்லலாம்.

305. ஒருவர், தம்முடைய கோபத்தை வெளிக்காட்டக்கூடிய சக்தி தமக்கு வாய்ந்திருக்கும்போது அதை

வெளியில் விடாமல் அடக்கிக் கொள் வாராயின், அல்லாஹுத் தஆலாவா னவன் அவருக்கு அதிகமான நன்மை யைக் கொடுத்தருள்வான்.

["செல்லிடத்துக் காப்பான் சினங்காப் பான் அல்லிடத்துக் காக்கிலென் காவாக்கா லென்?" என்னும் குறள் ஈண்டு எமக்கு ஞா பகம் வருகின்றது.]

306. தன்னுடைய கோபத்தை அடக்கிக் கொள்ளக்கூடிய அந்த மனி தனுடைய ஹிருதயத்தை அல்லாஹுத் தஆலாவானவன் பத்திரமாகவும் உறுதி (ஈமான்) நிறைந்ததாகவும் வை த்து ரக்ஷித் தருள்வானாக.

307. மஆது[ரலி] அவர்கள் சொல் லியிருக்கிறார்கள்: "எமன் தேசத்து க்கு என்னை நியாயாதிபதியாக நியமித் தனுப்பியபோது நபீ கரீம்[ஸல்] அவர் கள் என்னிடத்தில் இறுதியில் கூறிய

விஷயம் 'ஓமஆது! ஜனங்களிடத்தில் நீர் முகமலர்ச்சியுடன் நடந்துகொள்வீராக!'' என்பது தான்.''

308. நற்குணங்களையே முழுதும் எடுத்தோதுவதற்காகத் தான் நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

309. ஏ இறைவனே! என்னுடைய தோற்றத்தை நீ நல்ல விதமாக அமைத்திருப்பதே போல் என்னுடைய குணத்தையும் நல்லவிதமாகவே செய்துவைப்பாய்.

310. தன்னுடைய ஐசுவரியத்தைப் பெருக்கிக்கொள்ளும்பொருட்டு யாசகம் செய்யும் ஒவ்வொரு மனிதனையும் ஆண்டவன் தாரித்திரியத்திலேயே இறக்கிவைப்பான்.

311. "எனக்குப் புத்தி புகட்ட வேண்டும்,'' என்றொருவர் கேட்டபோது, நபிகள் நாயகமவர்கள் "கோ

பங்கொள்ளாதே!'' என்று அறிவுறுத்தினார்கள்.

312. மனிதர்களைக் கீழே தள்ளுவதில் ஒன்றும் ஆண்மையாவது வலிமையாவது இல்லை; ஆனால், தன்னுடைய கோபத்தை அடக்கிக் கொள்ளுகிறவனே அதிக பலசாலியா யிருக்கிறான்.

313. ஒரு கடுகத்தனையாவது தன்னுடைய ஹிருதயத்தில் நன்னம்பிக்கையுடைய ஒருவனும் நாகத்துக்குள் புகமாட்டான்; மேலும், ஒரு கடுகத்தனையாவது தன்னுடைய ஹிருதயத்தில் கர்வமுள்ள ஒருவனும் சுவர்க்கத்துக்குள் புகமாட்டான்.

314. நபிகள் நாயகமவர்கள்ஸல் "தன்னுடைய ஹிருதயத்தில் ஓர் அணுவளவு கர்வத்தையுடைய மனிதன் ஒருவனும் சுவர்க்கத்துக்குள் புகமாட்

டான்,'' என்று கூறியபோது, அருகி லிருந்த ஒருவர், "வாஸ்த வந்தான்; ஒருவன் நல்ல ஆடைகளையும் நல்ல பாதரக்ஷைகளையும் அணிந்துகொள்ள வேண்டுமென்று ஆசிக்கிறான்; அவ னுடைய கதி என்னகும்?'' என்று வினவினர். அதற்கு ரஸூலுல்லா (ஸல்) அவர்கள் விடை பகர்ந்தார் கள்: "ஆண்டவனும் அழகின் மய மாகவே இருக்கிறான்; ஆதலின், அவ ன் அழகில் அதிகம் பிரியம் காட்டு கிறான்; ஆனால், கர்வமென்பதோ தன் னைத் தவிர வேறு ஒவ்வொருவரையும் வெறுப்புடன் மதிக்கும்படி செய்கி றது.''

315. நெடுநாளாய் வியபிசாரம் செ ய்வோனும், பொய்யையே பூஷணமா கக் கொண்ட மன்னனும், தற்பெரு மையால் தலைமயக் கேறிய தர்வே

ஷமும் சபிக்கப்பட்டவர்களா யிருக்கிறார்கள்.

316. ஆண்டவன் நிமித்தம் கோபத்தைப் பருகியவனைக் காட்டினும் மேலான பானகத்தை ஒருவரும் பருகுவது முடியாது.

317. ஆண்டவன் நிமித்தம் மனிதர்களிடத்தில் மகா பணிவுடன் நடந்து கொள்ளுவோரை ஆண்டவன் மகா மேலான கீர்த்திக்குக் கொண்டு வருவான்.

318. தனக்கு ஒருவன் தீங்கிழைத்திருக்கும்போது, அப்படிப்பட்ட எதிரியானவன் தன்னுடைய ஆதிக்கத்துக்குள் வந்து சிக்கிக்கொள்ளும்போது, அவனை மன்னிப்பவன்தான் ஆண்டவனுடைய பார்வையில் மகா மரியாதையுள்ளவனு யிருக்கிறான்.

319. நமக்கொருவர் நன்மை செய்

தால் நாமும் நன்மை செய்வோம்; நமக்கொருவர் தீமை செய்தால் நாமும் தீமை செய்வோம் என்று சொல்லாதீர்கள்: ஆனால், உங்களுக்கு ஒருவர் நன்மை செய்தால் அவருக்கு நன்மை செய்வதாகவும், அவர் உங்களுக்குத் தீமை செய்தால் நீங்கள் அவருக்குத் தீமை செய்வதில்லையென்றும் தீர்மானம் செய்து கொள்ளுங்கள்.

320. பொதுஜனங்கள் இரண்டுவிதமான இலாபங்களைப் பெரும்பாலும் இழந்து விடுகிறார்கள்; அவற்றின் மதிப்பும் அவர்களுக்குத் தெரிவதில்லை: ஒன்று சரீராரோக்கியம்; மற்றொன்று சாவகாசம்.

321. இவ்வுலகைவிட்டு யான்சென்ற பின்னர் உங்கள் விஷயத்தில் நிகழக்கூடிய ஒரு காரியம் நிச்சயமாக இதுவா யிருக்குமென்று அஞ்சுகி

றேன்: இவ்வுலக சம்பந்தமான பொருள்களும் அணிகலங்களும் உங்கள் உள்ளத்துக்கு உவப்பாய் விடும். இதைக் கேட்டவுடன் ஒருவர், "யாரஸூலல்லா(ஹ்)! நல்ல காரியமும் தீமையைப் பயக்குமோ?" என்று ஆவலுடன் வினவினார். அதற்கு நபிகள் நாயகம்ஸல் பின்வருமாறு விடையளித்தார்கள்: "நிச்சயமாகவே நன்மையிலிருந்து தீமை விளைவதில்லை; ஒருவருக்கு அதிக ஐசுவரிய மிருப்பின், அவர் அதிகமான நன்மையைச் செய்தல் சாலும், என்பது எனக்குத் தெரியும்: உலோபத்தினாலாவது அல்லது அளவுக்கு மீறிய வீண்செலவினாலாவது அவர் அந்த ஐசுவரியத்தைப் பாழாக்காதிருப்பின், அதனாலொன்றும் தீமையில்லை; நல்ல வஸ்துக்களையல்லாது வேறொன்றையும் முளைக்கச் செய்யாத

வஸந்த காலத்தைப் போலிருக்கும் அந்த ஐசுவரியம்; ஆனால், அந்த வஸ்துக்களை அளவுக்கு மீறிப் புசிப்பதனால் மட்டுமே தீமையும் அழிவும் உண்டாகின்றன."

322. "ஏ என்னிறைவனே! முஹம்மதின் வம்சத்தவருக்கு உயிர் வாழ்க்கைக்கு அத்தியாவசிய மானதைத் தந்தருள்."

323. ஐசுவரிய மென்பது அளவு கடந்த உலகப் பொருள்களை ஈட்டுவதால் ஒன்றும் உண்டாவதில்லை; ஆனால், போதுமென்று திருப்தியடைந்த பூரண மனந்தான் அந்த ஐசுவரிய மாகும்.

324. ஆண்டவனும் மனிதரும் என்னை நேசிக்கும் படியான விதத்தில் எனக்கொரு கௌரவமான வேலையைக் கற்றுத் தாவேண்டும், என்று

ஒருவர் கேட்டபோது நபிகள் பெருமானார் விடைபகர்ந்தார்கள்: "இவ்வுலகத்தை நேசியாமலிரு; உடனே ஆண்டவன் உன்னை நேசிப்பான்; மனிதர்களிடத்தி லிருப்பதை நோக்கி ஆசை கொள்ளாதிரு; அப்போது அவர்கள் உன்னை நேசிப்பார்கள்."

325. நபிகரீம்ஸல் அவர்கள் ஒரு நாள் ஒரு பாயின்மீது படுத்து உறங்கி விட்டு, உடம்பெல்லாம் தடிப்புடன் எழுந்திருந்தார்கள்; அப்பொழுது நான், "யாரஸூலல்லா(ஹ்)! தாங்கள் எனக்குக் கட்டளையிட்டிருந்தால், தங்களுக்காக நான் மிருதுவான படுக்கையொன்றை விரித்திருப்பேன்," என்று சொன்னேன். உடனே நபிகள் நாயகமவர்கள், "இவ்வுலகத்துடன் எனக்கென்ன சம்பந்த மிருக்கிறது? இதற்கும் எனக்குமுள்ள தொடர்பானது

ஒரு மரத்தின் நிழலின் கீழ், குதிரைமீ தேறிச் சவாரி செய்பவன் சிறிது போழ்து தரித்திருந்து பிறகு அப் பால் செல்வதற்கு ஒப்பாயிருக்கும்,'' என்று விடை பகர்ந்தார்கள்.

326. என் மனத்துக்குப் பிரிய மான மகா உத்தம நண்பர் இவ்வுல கில் அதிகமான தொல்லைகளைப் பெ ருத ஒரு முஸ்லிமா யிருக்கிறார்; சிறிய குடும்பத்துடனும் சிறிதளவு பணத் துடனும் இருக்கும் மனிதரே அப் படிப்பட்டவர்; அவர் எப்பொழுதும் இறைவனையே தொழுவார்; இரகசி யத்தில் ஆண்டவனைத் தொழுவதே அவருக்கு எப்பொழுதும் பிரியமா யிருக்கும். அவர் இவ்வுலகில் அதிக மான பகிரங்கத்தை யடையாமல் அந் தரங்கத்திலேயே வாழ்ந்து, தனக்கு அவசியமான செலவுக்குமட்டும் வே

ண்டிய பொருள்களைப் பெற்றிருந்து, தனக்குப் பின்னே அதிகமான ஐசுவரியத்தை விட்டுப் போகாமல், தமக்காக மிகச் சில பெண்டிரே வருந்பதும்படியான நிலைமையில் மரித்துப் போவார்.

327. பேரானந்த நிலைமைக்குச் செல்லவிரும்பிய மனிதன் பெருந்திரளான ஐசுவரியத்தைப் பெற்றிருப்பானாயின், அவனால் அந்த உச்ச நிலைக்குச் செல்ல வேண்டிய செங்குத்தான வழியில் மேல் நோக்கி ஏறுவது முடியாது.

328. "எவனேனும் ஜலத்தில் நடக்கும்போது தன்னுடைய பாதத்தை நனைத்துக் கொள்ளாமல் நடப்பது முடியுமோ?" இதைக் கேட்ட தோழர்கள் இவ்வாறு செய்வது இயலாதென்று கூறினார்கள். உடனே நபிகள்பெ

ருமான்ஸல், "இவ்வுலகத்தி லிருப்பவர் களின் கதியும் இப்படித்தான்; இதி லிருக்குமட்டும் அவர்கள் இங்குள்ள பாபங்களில் சிக்கிக்கொள்ளாம லிருப் பது முடியாது," என்று கூறினார்கள்.

329. யாசகம் புரிவதினின்றும் த ன்னைக் காத்துக்கொள்ளும் பொருட் டும், தன்னுடைய குடும்பத்தினருக் குப் போஷணை செய்யும் பொருட்டும், அண்டை வீட்டுக் காரர்களிடம் அபி மானம் பாராட்டும் பொருட்டும் சட்ட முறைப்படி இவ்வுலகையும் இதிலுள்ள ஐசுவரியங்களையும் ஒருவன் நேசிப்பா னாயின், அவன் சுக்கிலபக்ஷத்தின் பதி னான்காம் இரவில் ஜ்வலிக்கும் பூரணச் சந்திரனைப் போன்ற பிரகாசமுள்ள முகத்துடன் ஆண்டவன் முன் ஆஜ ராவான்.

330. தொழுகையின்போது அல்லா

ஹூத் தஆலாவின் ஞாபகத்தை யல்லாமல் மற்றெல்லா ஞாபகத்தையும் அப்பால் ஒதுக்கி வைத்து விடுதல் வேண்டும்; சம்பாஷணையின் போது பின்னால் வருந்தக்கூடிய யாதொரு வார்த்தையையும் உபயோகிப்பது கூடாது; மேலும் பிறருடைய பொருளுக்கு ஆசைப்படாதீர்; அல்லது அவரிடத்திலிருந்து யாதொரு விதமான நம்பிக்கையையும் எதிர்பார்க்காதீர்.

361. நியாயாதிபதி முறையில் என்னை எமன் தேசத்துக்கு நபிகள் நாயகமவர்கள் அனுப்பியபோது, என்னை வழி யனுப்பி எனக்கு வேண்டிய புத்திமதியைக் கூறும் பொருட்டு என்னுடன் சிறிது தூரம் வந்தார்கள்; நான் ஒட்டகத்தின் மீது சவாரி செய்து கொண்டு போனேன்; நபிகள் பெருமானார்ஸல் என்னுடைய ஒட்டகத்தின்

பக்கமாய் நடந்து வந்தார்கள். எனக்குச் சொல்லவேண்டிய புத்திமதியைச் சொல்லி முடித்த பின்னர் நபிகள் திலகமவர்கள் என்னை நோக்கி, "ஓ மஆது! நிச்சயமாகவே இவ் வருஷத்துக்குப்பின் நீர் என்னைக் காணமாட்டீர்," என்று கூறினார்கள். அதைக் கேட்ட நான் அவர்களை விட்டு நீங்க வேண்டி யிருக்கிறதே யென்று கண்ணீர் வடித்து நின்றேன். இதைக் கண்டு அவர்களும் பின்புறம் திரும்பிக் கண்ணீர்விட்டார்கள். பிறகு மதீனா நகரை நோக்கி நின்று கொண்டு, "யாராயிருந்தபோதிலும், அவர் எங்கே யிருந்த போதிலும், எவரொருவர் தீமையினின்றும் விலகிக் கொள்ளுகிறாரோ, அவரே என்னருகில் மிக நெருக்கமாயிருப்பார்," என்று கூறினார்கள்.

332. "நபிகள் நாயகமவர்கள்ஸல்

உயிரோடிருந்த மட்டும் ஒருபோதும் தொடர்ச்சியாக இரண்டுநாள் வரை வயிறு நிரம்ப வாற்கோதுமை ரொட்டியையும் அவர்களுடைய குடும்பத்தினர் புசித்ததேயில்லை," என்று அவர்களுடைய பத்மனியாகிய பீபி ஆயிஷா ரலி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

333. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்திற்கு நான் ஒருநாள் சிறிது வாற்கோதுமை ரொட்டியும் இறைச்சியும் கொண்டு சென்றேன்; அதற்குமுன் அவர்கள் தங்களுடைய யுத்தக் கவசத்தை ஓர் எஹூதியினிடத்தில் அடகு வைத்துத் தங்களுடைய குடும்பத்திற்காகக் கொஞ்சம் கோதுமையை வாங்கியிருந்தார்கள். அவர்களுடைய குடும்பத்தில் ஒன்பது மனிதர்களிருந்தும், ஒரு நாளேனும் அவர்களுடைய வீடு

தியில் அஸ்தமன காலத்தில் ஒருபடி கோதுமையேனும் அல்லது யாதொரு தானியமேனும் போஜனத்துக் குத் தையாரா யிருந்ததில்லை,'' என்று அனஸ்ரலி அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

334. உம்மைப் பார்க்கினும் அதிக மான அழகையும் அதிகமானதிரவியத் தையும் பெற்றிருக்கும் ஒருவரை நீர் காணும்போது, உம்மைக் காட்டினும் குறைவான ஐசுவரியத்தையும் குறை வான அழகையும் பெற்றிருப்பவரை உற்றுநோக்குவீராக.

335. உம்மைக்காட்டினும் கீழான மக்களைக் கண்ணுறுக; ஆண்டவனு டைய அருட்கொடையை வெறுப்பு டன் பாவிக்காம லிருப்பதற்கு இஃ தொரு சிறந்த வழியாகும்.

336. "ஏ என் இறைவனே! என் னையோர் ஏழையாகவே வைத்திருப்

பாய்; ஏழையாகவே மாணிக்கச் செய்வாய்; ஏழைகளுடனே என்னை எழுப்புவாய்.''

337. ஓ ஆயிஷா! ஒரு பேரீச்சம் பழத்தின் பாதியையேனும் கொடுக்காமல் ஏழையை விரட்டியடிக்காதே.

338. ஏழைகளுக்கும் வருந்தினோருக்கும் திருப்திசெய்வதே எனக்குத் திருப்தியாயிருக்குமென்று நினைத்துக் கொள்க.

339. முஸ்லிம்களுக்கு இவ்வுலகமானது ஒரு சிறைக் கூடமாகவும் பஞ்சம் மிகுந்த இடமாகவும் இருக்கிறது; ஆதலின், அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கும்போது தங்களுடைய பஞ்சத்தையும் சிறைவாசத்தையும் விட்டு நீங்குகிறார்களென்று சொல்லலாம்.

340. ஆதத்தின் மக்களால் விரும்பத்தகாத காரியங்கள் இவ்வுலகில்

இரண்டுண்டு: ஒன்று மரணமாகும்; ஆனல், முஸ்லிம்களுக்கு மரணமானது பாபம் செய்வதைக் காட்டினும் மேன்மை பெற்றதா யிருக்கிறது. மற்றென்று தாரித்திரிய மாகும்; இனி வரும் மறுவுலக வாழ்க்கையில் தாரித்திரியத்தின் கேள்வி கணக்கானது மிகக் கொஞ்சமாயிருக்கும்.

341. ஒருநாள் ஒருமனிதன் வந்து நபிகள் நாயகமவர்களிடத்தில், "நிச்சயமாகவே நான் தங்களை நேசிக்கிறேன்," என்று சொன்னர். அதற்கு ரஸூல் நாயகமவர்கள், "நீர் சொல்வதை நன்ருகச் சிந்தித்துப் பாரும்," என்று சொன்னர்கள். அதற்கவர், "ஆண்டவன்மீது ஆணையாக! நான் தங்களை நேசிக்கிறேன்," என்று மூன்றுமுறை திருப்பித்திருப்பிச் சொன்னர். அதைக் கேட்டு நபிகள் பெருமா

னவர்கள்ஸல் பின் வருமாறு கூறினார்கள்: "நீர் சொல்வது வாஸ்தவமாயின் உடனே ஏழ்மைத்தனத்துக்கு வேண்டிய கவசத்தைத் தையார் செய்து கொள்ளும்; ஏனெனின், கொடிய நீரோட்டமானது கடலுடன் கலப்பதைக் காட்டினும் அதிவேகமாகவே ஏழ்மைத்தனமானது என்னை நேசிப்பவரைத் தாவிக்கொள்ளும்."

342. உங்களுடைய உலகத்தில் எனக்குப் பிரியமாயிருப்பன மூன்று வஸ்துக்களாயிருக்கின்றன: வாசனைத் திரவியங்களும், ஸ்திரீ ரத்னங்களும் அவற்றுள் இரண்டாயிருக்கும்; ஆனால், என்னுடைய மனத்துக்கு மகிழ்ச்சியையளிக்கக் கூடியது தொழுகையாயிருக்கிறது.

343. ஒரு குடும்பத்தை வைத்துக் கொண்டும் ஏழையாயிருந்துகொண்

டும் முஸ்லிமாயிருப்பவர் ஒருவர், சட்டவிரோதமான காரியம் செய்யாமலும் யாசகம்புரியாமலும் இருப்பாராயின், அவரை ஆண்டவன் நேசிக்கிறான்.

344. இவ்வுலகில் நீங்கள் பிரயாணிகளைப் போலவாவது அல்லது வழிப்போக்கரைப் போலவாவது இருந்து கொள்ளுங்கள்; மேலும் மரணமடைந்தவருள் உங்களைச்சேர்த்து எண்ணுங்கள்.

345. மனிதருள் மகா நல்லவர் யாரென்று கேட்டபோது, நபிகள் திலகமவர்கள் மறுமொழி கூறினார்கள்: "எவனுடைய ஆயுளானது நீள் முள்ளதாகவும் அவனுடைய செய்கையானது நல்ல செய்கையாகவும் இருக்கின்றனவோ, அவனே மகா நல்லவனாயிருக்கிறான்." ஆனால், மகா கெட்ட

வன் யாரென்று கேட்டபோது, "எவனுடைய ஆயுளானது நீளமாயிருந்து, அவனுடைய செய்கையானது தீய செய்கையாயிருக்கின்றதோ, அவனே மகா கெட்டவனு யிருக்கிறான்," என்று மறுமொழி கூறினார்கள்.

346. எவனொருவன் யாசகத்தின் வாயிலைத் தன்பக்கம் திறந்து கொள்ளுகிறானோ, அவன் பக்கம் ஆண்டவன் தாரித்திரியத்தின் வாயிலையே திறந்து வைக்கிறான்.

347. தன்னுடைய ஐம்புல ஆசைகளையும் அடக்கிக்கொண்டு, ஆண்டவனிடத்தில் சன்மானத்தை எதிர்பார்ப்பவனே புத்திமானாகவும் பகுத்தறிவுள்ள வனாகவு மிருக்கிறான்; ஆனால், தன்னுடைய மனம் போன வழியெல்லாம் ஆசையையும் திருப்பிவிட்டு, அதன் பின்னும் ஆண்டவனிடம் மன்

னிப்பைக் கேட்பவனே மகா அறிவீனனு யிருக்கிறான்.

348. ஐசுவரியமானது சரியான வழியில் உபயோகிக்கப் படுமாயின், அஃதொரு அனுக்ரகமாகக் கருதப்படும்; ஆதலின், ஒருவன் அதைக் கௌரவமான வழியில் நியாயமாக விருத்தி செய்துகொள்ள முயற்சி யெடுத்துக் கொள்ளலாம்.

349. ரஸூலுல்லா (ஸ்ல்) அவர்கள் தெய்வ வணக்கத்துக்குரிய ஓரிடத்துக்குள் எப்பொழுதேனும் புகுதுவார்களாயின், அப்பொழுது, "ஓ ஆண்டவனே! என்னுடைய பாபங்களை மன்னிப்பாயாக! உன்னுடைய தயாளத்தின் வாயிலை எனக்காகத் திறந்துவைப்பாயாக!" என்று சொல்லி நுழைவார்கள். அவ்விடத்தை விட்டுத் திரும்பி வரும்போதும் இப்படியே சொல்

வித் திரும்புவார்கள்.

350. உங்களுடைய தொழுகையை நின்றுகொண்டு தொழுங்கள்; ஆனால், உங்களால் இப்படிச் செய்ய முடியாவிடின், உட்கார்ந்துகொண்டு தொழுங்கள்; இப்படியும் முடியாவிடின், படுத்துக்கொண்டு தொழுங்கள்.

351. ஆண்டவனது அருளில்லாமல் ஒருவரும் சுவர்க்கம் புகுதல் முடியாதோ வென்று கேட்டபொழுது, நபிகள் நாயகமவர்கள்ஸல், "முடியாது; ஆண்டவனுடைய அருளின்றி ஒருவராலும் அது முடியாது," என்று விடை பகர்ந்தார்கள். "யாரஸூலல்லா(ஹ்)! ஆண்டவனுடைய அனுக்ரக மில்லாமல் தங்களாலும் அங்கே நுழைவது முடியாதோ?" என்று கேட்டார். அப்பொழுது நபிகள் திலகமவர்கள்ஸல் தங்களுடைய கையைத் தங்கள் தலை

மீதுவைத்து, "ஆண்டவன் தன்னுடைய தயையில் என்னை மூழ்கச் செய்தா லல்லாமல், நானும் அங்கே புகுவது முடியாது," என்று மூன்று முறை வற்புறுத்திக் கூறினார்கள்.

352. நான் ஞானத்தின் நகரமாயிருக்கிறேன்; மேலும் அலீ ரலி அதன் பாபாக (வாயிலாக) இருக்கின்றார்.

353. நிச்சயமாக அல்லாஹு த்த ஆலாவானவன் சொல்வான்: "ஓ ஆதத்தின்மக்களே! நான் சீக்காயிருந்தேன்; நீங்கள் ஏன் என்னை வந்து பார்க்கவில்லை?" அப்பொழுது ஆதத்தின் மக்கள் சொல்வார்கள்: "ஓ எங்கள் பாதுகாவலனே! நாங்கள் எவ்வாறு உன்னை வந்து பார்ப்பது முடியும்? நீயே சர்வலோகங்களுக்கும் நாயகனா யிருக்கிறாய்; மேலும் யாதொரு வியாதியுமில்லாமலு மிருக்கிறாய்." அப்பொ

ழுது ஆண்டவன் கூறுவான்: "ஓ மனி தர்களே! இன்ன மனிதன் சீக்கா யிருந்தான்; நீங்கள் அவனைப் போய்ப் பார்க்கவில்லை," என்று சொல்லி மீண் டும் வினவுவான்: "ஓ ஆதத்தின் மக் களே! நான் உங்களை ஆகாரம் கேட் டேன்; அதை நீங்கள் கொடுக்க வில்லை." அப்பொழுது அவர்கள் சொ ல்வார்கள்: "ஏ எங்கள் போஷகனே! உனக்கு நாங்கள் எவ்வாறு ஆகார மளித்தல்கூடும்? நீயோ சர்வ லோகங் களையும் சம்ரக்ஷிப்பவனா யிருக்கின்றாய் ஆதலின், உனக்கு எவ்வாறுபசிப்பிணி யும் ஆகாரத் தேவையும் இருத்தல் முடியும்?" அதற்கு ஆண்டவன் செல் வான்: "இன்னான் உங்களிடம் ஆகா ரம் கேட்டான். நீங்கள் அதற்கு இல் லையென்று மறுத்து விட்டீர்கள்."

354. எங்களுள் எவரேனு மொரு

வர் சீக்கா யிருந்தால், அப்பொழுது நபிகள் நாயகமவர்கள், "ஏ மானிட வர்க்கத்து நாயகனே! இவருடைய இந்த நோயை யெடுத்துவிட்டுச் சரீரா ரோக்கியத்தைக் கொடுத் தருள்வா யாக; ஏனெனின், நீதான் தேகாரோ க்கியத்தை யளிக்கக் கூடியவனு யிருக் கின்றாய்; உன்னையல்லாமல் தேகா ரோக்கியமென்பது வேறெங்குமில்லை; வியாதி யென்பதை வேருடன் கல்லக் கூடிய தேகாரோக்கிய மென்பது உன் னிடத்தில்தா னிருக்கிறது" என்று சொல்லித் தங்களுடைய திருக்கரத்தி னால் அந்த வியாதியஸ்தரின் மீது தடவுவார்கள்.

355. யாரேனு மொருவர் நபிகள் திலகத்திடம் வந்து தமக்கு உடம்புச் சுகமில்லை யென்றோ, அல்லது உடம் பில் புண்ணேனும் காயமேனும் இருக்

கிறதென்ரே குறைகூறுவா ராயின், ரஸூல் நாயகமவர்கள்ஸல் தங்களுடைய விரல்களை ஈரமாக்கித் தரையில் வைத்துப் பிறகு அவ்விரல்களை யெடுத்து நோவுள்ள இடத்தில் வைத்துத் தேய்த்து, "ஆண்டவனுடைய திருநாமத்தால்; நம்முடைய நாயனது அனுக்ரஹத்தால் வியாதியஸ்தருக்குச் சரீராரோக்யத்தை யளிக்கும் பொருட்டு இவ்வாறு செய்கிரும்," என்று சொல்வார்கள்.

356. உங்களுக்கு எந்தவிதமான இடையூறு நேரிட்டபோதிலும், அஃதெல்லாம் உங்களுடைய கைகளினுலிழைத்துவிட்ட ஏதேனு மொன்றன் பயனுகத்தான் இருத்தல் வேண்டும்.

357. ஸ்திரீகளை நல்லவிதமாய் நடத்துமாறு ஆண்டவன் உங்களுக்கு ஆணை யிட்டிருக்கிருன்; ஏனெனின்

அவர்கள் உங்களுடைய தாய்மார்களா கவும் குமாரிகளாகவும் சிற்றன்னைமார் களாகவும் இருக்கின்றார்கள்.

358. ஆண்டவனுடைய திருத்தூர் மாணத் தவறுவாயிலிருந்த போது நான் நேரில் கண்டேன்; அவர்களுக் கருகில் ஒரு கிண்ணத்தில் ஜலம் வைக் கப்பட் டிருந்தது; நபி பெருமான்ஸல் அந்த ஜலத்தில் கையை நினைத்துத் தங்களுடைய திருவதனத்தில் தடவிக் கொண்டார்கள்; அப்பொழுது அவர் களுக் குண்டான உஷ்ணத்தினால் இப் படிச் செய்துகொண்டார்கள். பிறகு, "ஏ என்நாயனே! என்னுடைய கொடிய நிலைமையில் (அஃதாவது, மாண காலத்தில்) எனக்கு உதவி புரிவாயாக," என்று வேண்டிக் கொண்டார் கள்.

359. எவரொருவர் ஆண்டவனைச்

சந்திக்க ஆசிக்கிருரோ, அப்படிப்பட்டவரை ஆண்டவனும் சந்திக்க ஆசை கொள்ளுகிருன்.

360. பெண்களின் பாத்தியதையானது மகாபரிசுத்த முடையதாயிருக்கிறது; ஆதலின், அவர்களுக் குரிய பாத்தியதை யானது பாதிக்கப்படாமலிருக்கும்படியான வழியில் நடந்து கொள்ளுங்கள்.

361. மரணமானது முஸ்லிமுக் கோர் அனுக்கிரகமா யிருக்கிறது.

362. ஆண்டவனுடைய திருத்தூதரான நபிகள்பிரானின்ஸல் குடும்பத்திலுள்ள ஒருவர் இறந்து விட்டபோது, ஸ்திரீகள் கூடிக்கொண்டு அந்த மையித்தின் (இறந்தோரின்) மீது பிரலாபித்துக்கொண் டிருந்தார்கள். அவர்களை அழவிடாமல் உமர்ரலி அப்புறப் படுத்திக் கொண் டிருந்தார். ஆனல்,

அதைக்கண்ட நபிகள் நாயகம், "ஓ உமர்! அவர்களைச் சும்மா விட்டுவிடுக; ஏனெனின், மனிதருடைய கண்கள் கண்ணீர் வடிக்கக்கூடியவையா யிருக்கின்றன; மனத்திலும் துக்கமானது மேலிட்டிருக்கிறது; இதனால் துயரமும் அதிகரிக்கின்றது; மேலும் இந்தத் துக்க காலமானது புதிதாகவும் சமீபத்தில் நிகழ்ந்ததாகவும் இருக்கின்றது. ஆதலின், அவர்கள் ஒப்பாரி வைத்துப் பிரலாபிக்க வேண்டாம்," என்று உத்தரவிட்டார்கள்.

[ஆனால், இதற்கு நேர்மாறாக இக்காலத்தில் பல முஸ்லிம் வீடுகளில் மாதர்கள் எவ்வாறு ஹிந்துக்களைப்போல் ஒப்பாரி வைத்து ராகம்பாடுகிறார்களென்பது அவர்களுடைய மையித்தின் வேளைகளில் சென்று பார்த்தால், செவ்வனே புலனாகும். தீயென்றவுடன் நா வெந்து விட்டதென்று

கூக்குரலிடும் கூட்டத்தார் இவ்விஷயத்தில் என்ன விதமான சீர்திருத்தத்தைச் செய்து வருகின்றனரென்பது ஒன்றும் புலப்படவில்லை.]

363. ரஸூலுல்லா(ஹ்) அவர்களிடத்திற்கு ஒரு மனிதன் தன்னுடைய மகனை அடிக்கடி அழைத்துக் கொண்டு வருவது வழக்கம். ஒருநாள் அவரைப் பார்த்து நபிகள் நாயகமவர்கள், "நீர் இந்தப் பையனை நேசிக்கின்றீரோ?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "யா ரஸூலல்லா(ஹ்)! நான் என் மகனை நேசிப்பதேபோல் ஆண்டவனும் தங்களை நேசிப்பானாக!" என்று விடை பகர்ந்தார். அதன்பின் சிலகாலம் வரையில் அந்தத் தகப்பனுடன் அவருடைய குமாரன் வாராமலிருப்பதைக் கண்ட ரஸூல் நாயகமவர்கள், "அந்த மனிதனுடைய குழந்

தைக்கு என்ன நேரிட்டது?" என்று கேட்டார்கள். அதற்கு அருகிலிருந்தவர்கள், "யா ரஸூலல்லா(ஹ்)! அந்தச் சிறுவன் இறந்து விட்டான்," என்று விடை பகர்ந்தார்கள். உடனே ரஸூலுல்லா(ஹ்) அவர்கள் அந்தமனிதனைப் பார்த்து, "உம்மைச் சுவர்க்கத்துக்குள் நடத்திக்கொண்டு போகும் பொருட்டு உமக்காக உம்முடைய மகன் காத்துக்கொண் டிருக்கக் கூடிய வாயில் வழியே யல்லாமல் வேறொரு கதவின் வழியேயும் நீர் அதற்குள் அழைத்துக் கொண்டு செல்லப்பட மாட்டீர் என்னும் சுபசெய்தியானது உமக்குத் திருப்தியைத் தரவில்லையா?" என்று வினவினார்கள். அதற்கு அங்கிருந்த மற்றொருவர், "யா ரஸூலல்லா(ஹ்)! இந்தச் சந்தோஷ சமாசாரமானது இவருக்கு மட்டும்தானா? அல்

லது எங்க ளெல்லோருக்கும் உரிய தா?'' என்று வினவினூர். அதற்கு நபி கள்பெருமானூர்ஸல் "உங்க ளெல்லோ ருக்குந்தாம்,'' என்று விடை பகர்ந் தார்கள்.

364. ஒரு நாள் ரஸூல் நாயகமவர் கள் தங்களுடைய தாயார் அடக்கமா யிருந்த சமாதியருகிற்சென்று அங்கே நின்று அழுதார்கள். அப் பொழுது அவர்கள் தங்களுடனிருந்த மற்றை யோரையும் அழும்படி செய்துவிட் டார்கள். அஃதாவது, அவர்கள் அழுத அழுகையினூல் சுற்றி யிருந்தவர்களுக் கெல்லாம் மனங்கசிந்து நெகிழ ஆரம் பித்துவிட்டது.

365. ரஸூலுல்லா(ஹ்) அவர்கள் மதீனூவிலுள்ள இறந்தவர்களின் சமா திகளின் வழியே செல்லும்போது, அவற்றின் பக்கம் திரும்பி, "எ புதை

குழியி லிருப்பவர்களே! உங்களுக்குச் சாந்தி யுண்டாகுக! ஆண்டவன் எங்களேயும் உங்களேயும் மன்னித் தருள்வாரூக! நீங்கள் எங்களுக்கு முன்சென்று விட்டீர்கள்; ஆனுல், நாங்களோ உங்களேப்பின்பற்றி வந்துகொண் டிருக்கிறோம்,'' என்று சொல்லுவார்கள்.

366. ஒரு மனிதனுடைய புதையல்களுக்குள் ளெல்லாம் மகா சிரேஷ்டமானது ஒரு சன்மார்க்க ஒழுக்கமுள்ள மனேவிதான்.

367. மனிதர்கள் தானம் கொடுத்தபோதிலும், கொடாமல் மறுத்தபோதிலும், அவர்கள்பால் சென்று யாசகம் புரிவதைக் காட்டினும் நிச்சயமாகவே உங்களுள் எவரேனும் தம்முடைய கயிற்றை எடுத்துக்கொண்டு போய் ஒரு சுமை விறகைத் தம்முதுகின்மீது சுமந்து வந்து விற்பதானது மகா

மேலான தொழிலா யிருக்கிறது. இப்படிச் செய்வதால் ஆண்டவன் அவருடைய கண்ணியத்தைக் காப்பாற்றுகிறான். இன்றி யாசகம் புரிவீரேல், அவர்கள் இல்லை யென்று மறுத்து விட்டால், உங்களுடைய கீர்த்தியானது தொலைந்து போவதுடன், நீங்களும் ஏமாற்ற மடைந்தவராய்த் திரும்புகிறீர்கள்; அவர்கள் ஏதேனு மொன்றைக் கொடுப்பார்களாயின், அஃது இல்லை யென்பதைக் காட்டினும் கீழ்மையானதா யிருக்கிறது; ஏனெனின், அந்த யாசகமானது உங்களை அவர்களுக்குக் கடமைப் பட்டவர்களாய்ச் செய்துவிடுகின்றது.

[நபி பெருமானின் வெளிப் படையான கட்டளையானது இவ்வளவு ஸ்பஷ்டமாய்க் காணப்படும்போதும், இவ்வுலக முஸ்லிம்களுக்குள் எத்தனைவிதமான யாசகர்கள்—

மதயாசகர், மத்ரஸா யாசகர், வேதாந்த யாசகர், வேஷதாரயாசகர், அதிகார யாசகர், அகம்பாவ யாசகர், கள்ள யாசகர், கபட யாசகர், கௌரவ யாசகர், துஷ்ட யாசகர், தொழிலான யாசகர் முதலிய பல யாசகர்கள்- இக்காலத்தில் காணப்படுகின்றன வென்று கருதுகின்றீர்கள்?]

368. இஸ்லாத்தில் (ஒருவரே ஒரு வர்த்தகத்தைச் செய்யலா மென்னும்) ஏகவியாபார சுதந்தரமென்பது சட்ட விரோதமென்று கண்டிக்கப்பட் டிருக்கிறது.

369. ஆண்டவன் சாந்தகுண சீலனா யிருக்கிறான்; ஆதலின், அவன் சாந்த குணத்தையே விரும்புகிறான்.

370. ரஸூல் நாயகமவர்கள் ஒரு நாள் தங்களுடைய பிரசங்க மேடைமீதிருந்து தானத்தின் பெருமையைப் பற்றியும், யாசகத்தின் இழிவைப் பற்

றியும் பிரசங்கமாரி பொழிந்து வரும் போது, "கீழே யிருக்கும் கையைக் காட்டினும் மேலே யிருக்குங் கையே சிறந்ததா யிருக்கிறது; மேலே யிருக்குங் கையானது தானம் கொடுப்பதாக வும், கீழேயிருக்குங் கையானது அதை ஏற்கும் யாசகனாகவும் காணப் படுகின்றன," என்று கூறினார்கள்.

[ஆயினும், யாசகத்தையே தம்முடைய ஜன்மத் தொழிலாகக்கொண்டு திரியும் பிச்சைக்காரர்கள் நம் தீனுல் இஸ்லாத்திலிருக்கும் இம்மாதிரியான நாயக வசனத்தை ஏனோ பாராமல்பராமுகமாயிருக்கின்றனர்?]

371. ஒரு பகற் பொழுதுக்கும் இராப் பொழுதுக்கும் ஆகாரத்தை யுடைய ஒருவனுக்கு யாசகமானது தடுக்கப்பட் டிருக்கிறது.

372. பணக்காரர்களும், பலமுடை யவர்களும், கொழுமையான சரீர

முடையவர்களும் யாசகம் புரிவது நிச்சயமாகவே ஓர் ஆகாத செய்கை யாகும்; ஆனால், மிகக் கொடுமையான வறுமையினால் க்ஷீணதசையை யடைந் திருப்பவருக்கே யாசகம் புரிதல் ஆகக் கூடிய காரியமா யிருக்கும்.

[தானங் கொடுப்பது மட்டுமே நம்மு டைய கடமை யென்றும், தானபாத்திரங் களின் யோக்கியதையை அறியவேண்டியது நம்முடைய பொறுப்பன் றென்றும் கண் மூடித்தனமாய்க் கழறும் கண்ணியவான் கள் இதனைக் கூர்ந்து நோக்குவாராக.]

373. ரஸூலுல்லா(ஹ்)வைப் பார் த்து, "யாரஸூலல்லா(ஹ்)! அத்தியா வசியமானபோது நான் ஜனங்களிடத் தில் யாசகம் கேட்கட்டுமா?" என்று கேட்டேன். அதற்கு நபிகள் பெரு மான், "வேண்டாம்; நீர்யாசகம் புரிய வேண்டாம்; ஆனால், மகா அத்தியா

வசியமான சந்தர்ப்பம் நேரும்போது, சன்மார்க்கர்களிடத்தி லிருந்துமட்டும் யாதேனு மொன்றைக் கேட்பீராக," என்று அனுமதி யளித்தார்கள்.

374. தானங் கொடுத்த பின்னர் அதைப் பெற்றுக் கொண்டவர் தமக்குக் கடமைப்பட் டிருக்கிறு ரென்று நினைத்து, அவர்களை ஏசுவோர் ஒரு போதும் சுவர்க்கம் புகுதமாட்டார்.

375. எந்த முஸ்லி மிடத்திலும் இந்த இரண்டு விதமான குணங்கள் இருப்பது தகாது: ஒன்று பேராசை; மற்றொன்று கடுகடுத்த குணமாகும்.

376. ஆண்டவனுடைய சன்னிதானத்துக்குக் கொண்டு செல்லக்கூடிய ஒவ்வொரு நற்செய்கையும் தருமமென்றே கருதப்படுகின்றது.

[இஸ்லாத்தில் தருமமென்பது உலக சம்பந்தமான ஆஸ்திகளைக் கொடுப்பது மட்டு

மன்று; ஆனல், ஒரு பக்ஷமான வார்த்தை, ஓர் அன்பான நடத்தை, ஒரு முகமலர்ச்சி, ஒரு புன்சிரிப்பு ஆதிய எவற்ருலேனும் பிறருடைய சுகத்தை அதிகப்படுத்துவோமாயின், அப்படிப்பட்ட செய்கைகளும் தர்மமாகவே பாவிக்கப்பட்டு வருகின்றன.]

377. என்னுடைய சிஷ்யர்களுக்கு நான் சிறிது துன்பந்தாநாடு வேணுயின், அவர்கள் ஒவ்வொரு தொழுகையின் போதும் தங்களுடைய பற்களைச் சுத்தஞ் செய்துகொள்ளுமாறு நிச்சயமாகவே நான் அவர்களுக்குக் கட்டளையிடுவேன்.

[ஒவ்வொரு முஸ்லிமும் ஒவ்வொரு நாளும் ஐந்து வேளையும் தொழுதுவர வேண்டும். இப்படித் தொழும் ஒவ்வொரு தொழுகைக்கு முன்னும் அவர்கள் தங்களுடைய கைகால் முகம் வாய் மூக்குக் கழுத்துப் பிடரி காது தலை முதலிய இடங்களைக் கழுவியும்

துடைத்தும் அர்த்த ஸ்னனம் செய்து கொள்ளுதல் வேண்டும். அப்பொழுது ஒவ்வொரு வேளையிலும் தந்தக்குச்சி அல்லது பல்பிரவ்ஷ் கொண்டு வாயைச் சுத்திசெய்து கொள்ளுதல் நல்லதாம்.]

378. "ஒவ்வொரு முஸ்லிமும் தர்மஞ் செய்ய வேண்டுவது அத்தியாவசியமா யிருக்கின்றது," என்று நபிகள் பெருமான்ஸல் நவின் றருளிய போது, அவர்களுடைய தோழர்கள், "ஆனல், தர்மம் கொடுக்கக் கூடியது ஒன்றும் • அவரிடத்தில் இல்லையேல், பிறகு என் செய்வது?" என்று வினவினர்கள். அதற்கு நபிகள் திலகம், "அவரிடத்தில் ஒன்று மில்லையேல், அவர் தம்முடைய காத்தினல் ஒருவேலையைச் செய்து அதனல் சிறிது பொருளையீட்டித் தமக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்துகொள்ளுதல் வேண்

டும்; பின் தம்மிடம் மிகுந்திருப்பதைக் கொண்டு தர்மஞ்செய்தல் வேண்டும்,'' என்று அத் தோழர்களுக்கு விடை பகர்ந்தார்கள். அதற்கு அவர்கள், "தமக்கு வேண்டியதைச் சம்பாதித்துப் பிறருக்கும் தர்மம் செய்யும்படியான வேலையைச் செய்யக்கூடாத நிலைமையில் அவர் இருப்பாராயின், பிறகு என்செய்வது?'' என்று கேட்டார்கள். அதற்கு ரஸூல் நாயகமவர்கள், "அவ்வாறாயின், தேவையுள்ளோருக்கும், ஹிம்ஸிக்கப் பட்டோருக்கும் உதவி புரியட்டும்,'' என்று பதில் சொன்னார்கள். அதற்கு, "இப்படியும் ஹிம்சை யடைந்தோருக்கு உதவிபுரிய முடியாவிடின், பின் என் செய்யலாம்?'' என்று கேட்டார்கள். அதற்கு நபிகள் நாயகம், "அவ்வாறாயின், நன்மையைச்செய்யும்படி மனிதர்

களை ஏவுங்கள்,'' என்று விடை பகர்ந்தார்கள். "அப்படியும் அவரால் செய்ய முடியாவிடின், வேறு என் செய்யலாம்?'' என்று அத் தோழர்கள் வினவினார்கள். அதற்கு நம் பெருமானார்கள், "அவ்வாறாயின், அவர் பொது ஜனங்களுக்குத் தீமை செய்வதினின்றும் தம்மைக் காத்துக் கொள்ளட்டும்; ஏனெனின், நிச்சயமாகவே அவருக்கு அதுதான் தானமும் தர்மமுமாகக் காணப்படுகின்றது,'' என்று மறுமொழி கூறினார்கள்.

379. இரண்டு மனிதர்களுக்கிடையில் நியாயம் செய்வதும் ஒருவிதமான தர்மந்தான். இன்னமும், ஒரு மனிதனை அவனுடைய வாகனத்தின்மீது ஏற்றிவைப்பதும் அவனுடைய மூட்டையைத் தூக்கிக்கொடுப்பதும் ஒருவிதமான தர்மந்தான். நன்மை பயக்

கத்தக்க பரிசுத்தமான வார்த்தைகளை வசனிப்பதும், ஒருவர் கேட்ட வினாவுக்குச் சாந்தமாக விடை யிறுப்பதும் ஒருவகைத் தர்மந்தான்; இன்னமும், மனிதர்களுக்கு இடையூறு செய்யக் கூடிய முள் கல் முதலியவற்றை அப்புறப் படுத்துவதும் ஒருவகைத் தர்மந்தான்.

380. தாம் ஒரு மரத்தை நட்டேனும் அல்லது ஒரு வயலை உழுதேனும், அதினின்றும் மனிதன், மிருகம், பறவை முதலியவை உண்டு திருப்தியடைவதால், தர்மம் செய்த புண்ணியத்தைப் பெறாத யாதொரு முஸ்லிமும் இருப்பது முடியாது.

381. ஒரு கிணற்றங் கரையின் அருகில் நின்ற ஒரு நாயின் ஓரமாகச் சென்ற ஒரு வியபிசாரியும் மன்னிக்கப்பட்டாள். எவ்வாறெனின், அந்த

நாயானது தாக வறட்சியினுல் பிராணன் போகுந் தறுவாயில் அந்தக் கிணற்ருேரமாய்த் தன்னுடைய நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு அதிக கஷ்டத்துடன் நின்றது. அதைக் கண்ட அப்பெண் தன்னுடைய பாதகவசத்தைக் கழற்றி, அதைத் தன்னுடைய ஆடையின் நுனியில் கட்டி அக்கிணற்றுக்குள் விட்டு, அதனுல் ஜலம் இறைத்து அந்த நாய்க்குக் குடிக்கக் கொடுத்தாள். இதனுல் அவளுடைய வியபிசாரக் குற்றமானது மன்னிக்கப் பட்டுவிட்டது.

382. "ஒரு பெண் பிள்ளையானவள் ஒரு பூனையின் நிமித்தம் தண்டிக்கப் பட்டாள். எவ்வாறெனின், அதை அவள் பசியுடன் கட்டிப் போட்டுவிட்டாள்; தானும் அதற்கு ஒன்றும் தின்னக்கொடுத்தனளில்லை; அல்லது அது

வெளியில் சென்று தாணியிலுள்ள வேறு ஊர்வன வற்றையும் தின்றுய்யும்படி அவிழ்த்து விட்டவளுமில்லை; இதனல் அப் பூனையானது பசி நோயால் வேதனைப்பட்டு இறந்தது. இதற்காக அவள் தண்டிக்கப் பட்டாள்," என்று ரஸூல் நாயகமவர்கள்ஸல் திருவாய்மலர்ந் தருளினர்கள்.

383. "நாம் நாற்கால் பிராணிகளுக்கு நன்மை செய்வதற்காகவும் அவற்றிற்குக்குடி தண்ணீர் கொடுப்பதற்காகவும் நிச்சயமாகவே நமக்குச் சன்மானமுண்டு," என்றும், "ஈரமான ஈரலையுடைய (அஃதாவது, உயிர்ப்பிராணியாயிருக்கின்ற) ஒவ்வொரு பிராணிக்கும் உபகாரம் செய்வதால் அதற்காகச் சன்மான முண்டு," என்றும் நபிகள் திலகம்ஸல் அவர்கள் கூறிப்போந்தார்கள்.

[இஸ்லா மார்க்கத்தில் மனிதர்களின் ஜீவ

னைப் போலவே மற்றைப் பிராணிகளின் ஜீவனும் ஒரே சமமாகக் கருதப்படுகின்றது. ஆண்டவனுடைய முன்னிலையில் மனிதர்களும் மற்றைப் பிராணிகளும் சமம்தாம். ஏனெனின், "உங்களைப் போல், தாங்களும் ஒரு கோஷ்டியாயில்லாத, பூமியிலுள்ள யாதொரு பிராணியும் தன்னுடைய இரு சிறகுகளைக்கொண்டு பறக்கும் யாதொரு பறவையும் இல்லை......பிறகு அவை தம்முடைய நாயனிடத்திற்கே மீண்டு செல்லும்," என்று குர்ஆன் ஷரீபும் கூறுகின்றது.(6:38)]

384. ஒவ்வொரு நற்செய்கையும் தர்மமாகவே கருதப்படுகிறது. மலர்ந்த முகத்துடன் உம்முடைய சகோதரரை எதிர்கொள்வதும் உம்முடைய தண்ணீர்ப் பையினின்றும் அவருடைய பாத்திரத்துக்குள் ஜலம் வார்ப்பதும் இப்படிப்பட்ட நற்செய்கைகளுள் வைத்துக் கணிக்கப்படும்.

385. உம்முடைய சகோதாரது முகத்தைப் பார்த்துப் புன்சிரிப்புக் கொள்வதும் ஒருவகைத் தர்மமே. மனித வர்க்கத்தை நன்மையான காரியங்களைச் செய்யும்படி உற்சாகத்துடன் தூண்டுவதும் ஒருவகைத் தர்மமே. இன்னும், செய்யத்தகாத வற்றினின்றும் அவர்களை விலக்கி வைப்பதும் தர்மந்தான். மேலும் வழிதப்பிப் போன மாந்தருக்கு அவர்களுக்குரிய வழியைக் காண்பிப்பதும் உமக்கொரு தர்மமான காரியமே யாகும். மேலும் குருடர்களுக்குத் துணைபுரிவதும் இப்படிப்பட்ட தர்மந்தான்.

386. விளையாமற் கிடக்கும் பொட்டல் நிலத்தை வியவசாயத்தின் கீழ்க் கொண்டுவருபவருக்கு அதில் மெத்த நன்மை யிருக்கின்றது.

387. நான் மதீனாவுக்கு வந்தபோது

அங்கொரு மனிதனைக் கண்டேன். அங்குள்ளோர் அவருடைய புத்திமதிகளைக் கேட்டுக் கீழ்ப்படிந்து வந்தார்கள். அவருடைய வாயினின்றும் பிறக்கும் எப்படிப்பட்ட சொல்லுக்கும் அவர்கள் ஒருபோதும் கீழ்ப்படியாமலிருந்ததில்லை. அதைக் கண்ட நான், "இந்த மனிதர் யார்?" என்று கேட்டேன். இதற்கு அவர்கள், "இவர்தாம் ஆண்டவனுடைய திருத்தூதர்," என்று சொன்னார்கள். உடனே நான் அவரிடம் சென்று எனக்கொரு நற்புத்தி போதிக்கும்படி கேட்டுக்கொண்டேன். அதற்கு அந்த ரஸூல் நாயகம் முஹம்மத்[ஸல்] அவர்கள், "ஒருவரையும் நிந்திக்காமலிருப்பீராக," என்று எனக்கு அறிவுறுத்தினார்கள். அன்றுமுதல் பிறகு ஒருவரையும், சுயேச்சையான மனிதனையேனும் அ

ல்லது அடிமையையேனும், அல்லது ஓர் ஒட்டகத்தையேனும், அல்லது ஓர் ஆட்டுக் குட்டியையேனும் நான் ஒரு போதும் நிந்தித்ததே யில்லை. இன்னும், எனக்கு அவர்கள் உபதேசித்த தாவது: "மேலும் ஒரு மனிதன் உம்மை நிந்தித்து உம்பால் காணப்படும் ஒரு குற்றத்தை வெளியிலெடுத்து விடுவானாயின், அவன்பால் காணப்படும் வேறொரு விதமான குறையை நீர் வெளியிலிழுத்து விடா திருப்பீராக."

388. ரஸூலுல்லா(ஹ்)வின் வீட்டிலுள்ள ஜனங்கள் ஓர் ஆட்டை அறுத்திருந்தார்கள். அப்பொழுது ரஸூலுல் நாயகமவர்கள், "அதில் என்ன எஞ்சியிருக்கிறது?" என்று கேட்டார்கள். அதற்கு ஆயிஷா[ரலி] அவர்கள், "அதன் சப்பை ஒன்று தவிர வேறொன்றும் மிகுதியில்லை; ஏனெனின், எஞ்சியிருக்

கும் இச் சப்பையைத் தவிர மிச்ச த்தை யெல்லாம் ஏழைகளுக்கும் அண்டை அயலார்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள்,'' என்று விடை பகர்ந்தார்கள். அதற்கு ரஸூலுல்லா(ஹ்) அவர்கள் சொன்னார்கள்: இந்தச் சப்பையைத் தவிர மிகுதிப் பாகந்தான் இப்பொழுது எஞ்சி யிருக்கிறது. ஏனெனின், அவர்கள் கொடுத்துவிட்ட பாகமே என்றும் நிலைத்திருக்கக் கூடிய பாகமா யிருக்கிறது. ஆனல், வீட்டில் மிகுதியிருக்கும் பாகமானது அவ்வளவு சிரேஷ்டமுள்ளதாய்க் காணப்படவில்லை.''

[அஃதாவது, தர்மம் செய்யப்பட்டதே என்றும் நிலைத்திருக்கும் என்றும், தான் உண்பதானது அத்துணைச் சிரேஷ்டமல்லவென்றும் குறிப்பிட்டுக் கூறினர்கள்.]

389. ''ஏ ஆண்டவனே ! உன்னு

டைய சிருஷ்டியில் மலைகளைக் காட்டி
னும் கடினமானது ஏதேனு முண்
டோ?'' என்று வானவர் கேட்டனர்.
அதற்கு ஆண்டவன், "ஆம்; இரும்
பானது மலைகளைக் காட்டினும் கடின
மா யிருக்கின்றது. ஏனெனின், இந்த
இரும்பானது அந்த மலையைத் தகர்க்
கின்றது,'' என்று விடை பகர்ந்தான்.
மீண்டும் அவ்வானவர், "ஏ நாயனே!
உன்னுடைய சிருஷ்டியில் இரும்பைக்
காட்டினும் கடினமானது வேறேதே
னு முண்டோ?'' என்று வினவினார்.
அதற்கு ஆண்டவன், "ஆம்; நெருப்
பானது இரும்பைக் காட்டினும் கடி
னமா யிருக்கிறது; ஏனெனின், இஃது
அதை உருகச் செய்கின்றது,'' என்று
விடை பகர்ந்தான். மறுபடியும் வான
வர், "ஏ பாதுகாவலனே! உன்னுடைய
சிருஷ்டியில் நெருப்பைக் காட்டினும்

கடினமானது வேறேதேனு முண்டோ?'' என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவன், "ஆம்; தண்ணீரானது நெருப்பின்மீது வெற்றி பெறுகின்றது. அஃது அதை அவித்துக் குளிரச் செய்கின்றது,'' என்று விடை பகர்ந்தான். பின்னும் வானவர்கள், "ஏ நாயனே! உன்னுடைய சிருஷ்டியில் ஜலத்தைக் காட்டிலும் கடினமானது வேறேதேனு முண்டோ?'' என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவன், "ஆம்; காற்றானது ஜலத்தின் மீது வெற்றி பெறுகின்றது. இஃது அதை அசையச் செய்து இயக்கத்தில் வைக்கின்றது,'' என்று விடை கொடுத்தான். மீண்டும் அவர்கள், "ஏ எங்களுடைய ரக்ஷகா! உன்னுடைய சிருஷ்டியில் காற்றைக் காட்டிலும் கடினமானது வேறேதேனு முண்

டோ?'' என்று வினவினார்கள். அதற்கு ஆண்டவன், "ஆம்; தான தர்மம் செய்கின்ற ஆதத்தின் மக்களாவார். அஃதாவது, தங்களுடைய இடக்கரத்துக்குத் தெரியாமல் வலக்கரத்தால் ஈவோர் எல்லாவற்றின்மீதும் வெற்றி பெறுகிறார்கள்,'' என்று விடைகொடுத்தருளினான்.

390. தானங்களுக்குள் மகா மேலானது யாதெனின், ஒருவர் தம்முடைய சொந்த உழைப்பால் சம்பாதித்திருக்கும் சிறிய தனத்தினின்றும் தம்மாற் கூடியமட்டும் அள்ளிக் கொடுப்பதே யாகும்.

391. ஏழைகளுக்குத் தானமளிப்பதில் ஒரேவிதமான நன்மைதா னிருக்கிறது. ஆனால், சுற்றத்தார்க் கீவதில் இரண்டு விதமான நன்மை யுண்டு: ஒன்று, தானத்தின் பலன்; மற்றொ

ன்று, உற்றூர்க்கு உதவிய பலன்.

392. நோன்புநோற்கும்போது ஒரு மனிதன் எல்லாவிதமான தீய வசனங்களினின்றும் தன்னுடைய நாவை அடக்கிக்கொள்ளக் கடவன்; மேலும், தனக்குப் பிறர் செய்யும் தீமைக்காகவும் கோபியான்.

393. பொய் சொல்வதையும் புறம் பேசுவதையும் விட்டுவிடாத மனிதனொருவன் நோன்பை மட்டும் வைக்கத் துணிவானாயின், அவன் உண்பதையும் பருகுவதையும் விட்டுப் பட்டினி கிடப்பதை ஆண்டவன் பொருட்படுத்தமாட்டான். (அஃதாவது, ஆண்டவன் அவனுடைய) நோன்பை ஏற்றுக் கொள்வதில்லை.)

394. ஒரு மனிதனுடைய தான தருமமானது, ஏழைகளாயிருப்பின், தன்னுடைய குடும்பத்தினருக்கே

கொடுக்கப்படுதல் வேண்டும்.

395. "எவனொருவன் என்மீது நன்னம்பிக்கை வைக்கிறானோ, அந்த நன்னம்பிக்கைக் கருகில் நான் இருக்கின்றேன்; மேலும், அவன் என்னைத் தியானிக்கும்போது, நான் அவனுடனும் அவனுக்குச் சமீபத்திலும் இருக்கிறேன்," என்று ஆண்டவன் சொல்லுகிறான்.

396. ஆண்டவன் இவ்வாறும் கூறுகிறான்: "எவனொருவன் ஒரு நற்காரியத்தைச் செய்கிறானோ, அவனுக்குப் பத்து நன்மைகள் உண்டு; மேலும் நான் நாடியவருக்கு அதிகமாகவும் கொடுக்கிறேன்; ஆனால், எவனொருவன் தீக்கருமமொன்றைச் செய்கிறானோ, அவனுக்குக் கொடுக்கப்படும் தண்டனையானது அக் கருமத்துக்குத் தக்க அளவுடைய தாகவே யிருக்கி

றது. அல்லது நான் அவனை மன்னித்து விடுவதுமுண்டு; மேலும், எவனொருவன் என்னை நாடி ஒரு சாண்வருகிறானோ, அவனை நோக்கி நான் ஒரு முழம் செல்கிறேன்; மேலும், எவனொருவன் என்னை நோக்கி ஒருமுழம் வருகிறானோ, அவனை நோக்கி நான் இரண்டுபாகம் செல்லுகிறேன்; மேலும், எவனொருவன் என்னை நோக்கி நடக்கிறானோ, அவனை நோக்கி நான் ஓடுகிறேன்; மேலும், எவனொருவன்-அவன் உலகத்தனை பாவங்கள் நிறைந்தவனா யிருப்பினும்—என்னிடத்திலேயே நன்னம்பிக்கை வைக்கிறானோ, அவன் எதிரில் அத்துணைப் பரும னுள்ள மன்னிப்புடன் நான் முன்வருகிறேன்.''

397. இன்னமும் ஆண்டவன் கூறுகிறான்: ''எவனொருவனை நல்லடியா

னென்று நான் கண்டுகொண்டேனே, அவனுடைய கேட்பதற்குதவும் செவியாக நான் இருக்கிறேன்; மேலும், அவனுக்குப் பார்ப்பதற்குதவும் அவனுடைய பார்வையாகவும் நான் இருக்கிறேன்; இன்னும் அவனுக்குப் பிடிப்பதற் குதவும் அவனுடைய காங்களாகவும் நான் இருக்கிறேன்; இன்னும் அவனுக்கு நடப்பதற் குதவும் பாதங்களாகவும் நான் இருக்கிறேன்."

398. "ஓ மனிதனே! நீ என்னுடைய சட்டங்களையே பின்பற்றி நடப்பாய்; மேலும் நீ என்னைப்போல் ஆய்விடுவாய். அதன் பின் 'ஆகு' என்று சொன்னவுடன் அஃது அப்படியே ஆய்விடுவதைக் காண்பாய்," என்றும் ஆண்டவன் சொல்லுகிறான்.

[அஃதாவது, ஒருவன் இப் பிரபஞ்சத்திலுள்ள இறைவனது இயற்கைச் சட்டங்களி

ன்படி நடந்து அவற்றுடன் லயித்துப் போய் விடுவானாயின், அவனுடைய எண்ணமானது ஆண்டவனுடைய நாட்டத்தைப் போல் அவ்வழியில் ஐக்கியமாய் நிற்கின்றது. அதன் பின் அவனுடைய நாட்டமானது ஆண்டவனுடைய நாட்டம்போல் முழுதும் நிறைவேறி விடும்.]

399. "ஒவ்வொன்றுக்கும் அதனதன் துருவைப் போக்குவதற்கு ஒரு விதமான மெருகுண்டு; இவ்வாறு ஹிருதயத்துக்குரிய மெருகானது அல்லா(ஹ்)வின் ஞாபகமாயிருக்கிறது," என்று நபிகள் பெருமான்^ஸல் கூறிய போது, "நம்பிக்கை யற்றவர்களுடன் (காபிர்களுடன்) யுத்தம் செய்வதும் அதைப்போல் இல்லையா?" என்று தோழர்கள் கேட்டார்கள். அதற்கு நபிகள் பெருமான், "இல்லை; அவர் தம்முடைய வாளாயுதம் முறியுமட்டும்

சண்டை செய்தபோதிலும் இல்லை,'' என்று விடை யளித்தார்கள்.

400. ஆண்டவன் ஒருவனே; ஆதலின், அவன் ஒருமைத் தன்மையையே விரும்புகிருன்.

401. ஒருமுறை பிரயாணஞ் செய்தபோது நாங்கள் ரஸுலுல்லா(ஹ்)வுடன் இருந்தோம். அப்பொழுது சில மனிதர்கள், "ஆண்டவனேமகாபெரியவன்,'' என்று உரக்கக் கூவிக்கொண்டு எழுந்து நின்ருர்கள். அதைக் கேட்ட ரஸுலுல்லா(ஹ்) அவர்கள் பின்வருமாறு கூறினுர்கள்: "ஓ மனிதர்களே! நீங்கள் உங்களை இலேசாகச் செய்து கொள்ளுங்கள்; உங்களுடைய தொனியை உயர்த்துவதால் நீங்கள் உங்களையே துன்பப்படுத்திக் கொள்ள வேண்டாம்; நிச்சயமாகவே செவிடாயிருக்கிற அல்லது காணுமலிருக்கிற

ஒருவனை நீங்கள் கூப்பிடவில்லை; நிச்சயமாகவே கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டும் இருக்கிற ஒருவனையே அழைக்கிறீர்கள்; மேலும், அவன் உங்களுடன் இருக்கிறான்; இன்னும் நீங்கள் யாரைக் குறித்து வணக்கம் புரிகிறீர்களோ, அவன் உங்களுடைய ஒட்டகத்தின் கழுத்தைக் காட்டினும் உங்களுக்கு அதிசமீபத்தில் இருக்கிறான்.

[மனிதனுடைய உயிர் நரம்பைக்காட்டினும் அதிசமீபத்தில் ஆண்டவன் இருப்பதாக நமது வேதமும் அறைகின்றது— 50: 16.]

402. நிச்சயமாகவே என்னைப் பின்பற்றியொழுகுவோரின் நிமித்தமாகத்தான் என்னுடைய மனமானது சோகத்திலும் துக்கத்திலும் மூழ்கியிருக்கிறது. மேலும் நான் அவர்களின்

பொருட்டு ஆண்டவன்பால் அன்றன்றைக்கும் ஒரு நூறு முறை மன்னிப்புக்கு விண்ணப்பம் செய்து வருகிறேன்.

403. " 'தங்களுடைய ஆத்மாக்களுக்கு மாருய் அளவுகடந்த தீமையைச் செய்துவிட்ட என்னுடைய அடியார்களே! அல்லா(ஹ்) வின் கிருபையில் நம்பிக்கை யற்றவராய் ஏங்கிப் போகாதீர்கள் என்று சொல்வீராக' என்னும் ஆயத்துக்கு (39: 53) ஈடாக இவ்வுலகத்திலுள்ள எல்லாத்திரவியத்தையும் பெற்றபோதிலும், நான் அத்திரவியத்தை மதியேன்," என்று நபிகள் திலகமவர்கள் திருவாய் மலர்ந்தருளினுர்கள். அப்பொழுது, "ஆண்டவனுக்கு இணையாக வேறு தெய்வங்களைப் பண்ணிக் கொண்டவனுடைய கதியானது என்னவாகும்?" என்று

ஒருவர் வினவினர். அதற்கு ரஸூல் நாயகமவர்கள் சற்றுநேரம் மௌனமாய் இருந்துவிட்டுப் பின்னர், "அவனையும் ஆண்டவன் மன்னிக்கிறுனென்று அறிந்து கொள்வீராக; ஆனல், தௌபா என்னும் பச்சாதாபத்தின் மேல் மன்னிக்கிறுன்," என்று விடை பகர்ந்தார்கள்.

404. தான் செய்த குற்றங்களுக்காக மனமார வருந்திப் பச்சாதாபப் படுகிற ஒருவர் ஒருவிதமான பாபத்தையும் செய்யாதவரே போல் ஆய் விடுகிறுர்.

405. "நிச்சயமாகவே என்னுடைய தயையானது என்னுடைய கோபத்தை வென்று விடுகின்றது," என்று ஆண்டவன் கூறுகிறுன்.

406. நிச்சயமாகவே ஆண்டவனுக்கு ஒரு நூறு பக்ஷமுள்ள அபிமா

ணங்களுண்டு; அவற்றுள் ஒன்றன் காரணமாகவே மனிதர்களின் மத்தியில் நாற்கால் பிராணிகளையும் பூமியின் மீதுள்ள எல்லா நகரும் பிராணிகளையும் படைத்திருக்கிறான். பிறகு அப்படிப்பட்ட பக்ஷத்தினுல்தான் இப்படிப்பட்ட பிராணிகளெல்லாம் ஒன்றோடொன்று பக்ஷமாகவும் ஒன்றையொன்று பொறுத்துக்கொண்டுமிருக்கின்றன; இக் காரணத்தினுல்தான் காட்டிலுள்ள துஷ்ட மிருகங்களும் தங்களுடைய குட்டிகளிடத்தில் பக்ஷமாயிருக்கின்றன; ஆனால், மிகுந்திருக்கும் தொண்ணூற்றென்பது பங்கான பக்ஷத்தையும் ஆண்டவன் தன்னிடத்திலேயே வைத்திருக்கிறான்; இப்பெரும் பகுதியான கருணையுடன்தான் ஆண்டவன் இறுதித் தீர்ப்பு நாளன்று தன்னுடைய சிருஷ்டிகளிடத்து அபி

மானங் காட்டுவான்.

407. சுவர்க்க வனமானது உங்களுடைய பாதரக்ஷையின் வார்களைக் காட்டினும் அதிசமீபத்தி லிருக்கிறது; மேலும், நரகத்தீயும் இத்துணைச் சமீபத்தில்தான் இருக்கிறது.

408. "இந்தப் பெண் தன்னுடைய சொந்தக் குழந்தையை நெருப்பில் போடச் சம்மதிப்பா ளென்று நினைக்கிறீர்களோ?" என்று ரஸூலுல்லா (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு இல்லை யென்று நாங்கள் பதில் சொன்னோம். அப்பொழுது ரஸூல் நாயகமவர்கள், நிச்சயமாகவே இப் பெண்ணுக்குத் தன்னுடைய சொந்தக் குழந்தையின் மீதுள்ள அன்பைக் காட்டினும் அதிகமான தயாளத்தையே ஆண்டவன் தன்னுடைய சிருஷ்டிப் பொருள்களின் மீது காண்பிக்கி

ருன்" என்று கூறினார்கள்.

409. ஒரு மனிதன் ரஸூலுல்லா(ஹ்)விடம் ஒரு கம்பளத்துடன் வந்து பின் வருமாறு சொல்லத் தொடங்கினார்: "யாரஸூலல்லா(ஹ்)! நான் ஒரு காட்டின் வழியே வந்துகொண்டிருக்கும்போது பறவைக் குஞ்சுகளின் கூச்சலைக் கேட்டேன்; உடனே நான் அவற்றைப் பிடித்து என் கம்பளிக்குள் வைத்துக் கொண்டேன்; பிறகு அவற்றின் தாய்ப் பறவையானது வந்து என்னைச் சுற்றிச் சுற்றிச் சிறகை யடித்துக் கொண்டு பறந்தது. உடனே என் கம்பளத்தைத் திறந்து காட்டினேன்; அப்பொழுது அந்தத் தாய்ப் பறவையும் குஞ்சுகளுடன் சேர்ந்து இணைந்துகொண்டது. பிறகு அவை யெல்லாவற்றையும் நான் என் கம்பளியில் சுருட்டி இதோ கொண்டு

வந்திருக்கிறேன்." இதைக் கேட்ட வுடன் அவரிடமுள்ள குஞ்சுகளைக் கீழே வைக்கும்படி நபிகள்பிரான் கட் டளையிட்டார்கள். அம் மனிதன் அப் படிச் செய்தவுடன் தாயும் குஞ்சுக ளும் நன்றாகக் கலந்து உறவாடிக் கொண்டன. அதைக் கண்ட ரஸூல் நாயகமவர்கள், "இந்தத் தாய்ப் பற வையானது தன்னுடைய குஞ்சுகளி டத்தில் காட்டும் அன்பைக் கண்டு நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்களோ? இந்தத் தாய்ப்பறவை தன் குஞ்சுகளி டத்தில் காட்டும் அபிமானத்தைக் காட்டிலும் அதிகமான அபிமானத் தையே ஆண்டவன் நிச்சயமாகவே தன்னுடைய சிருஷ்டிப் பொருள்களி டத்தில் காண்பிக்கிறானென்று நான் என்னை அனுப்பினவன்மீது ஆணையா கச் சொல்லுகிறேன். எங்கிருந்து இக்

குஞ்சுகளைக் கொண்டுவந்தீரோ, அங்கே கொண்டுபோய் விட்டுவிடுவீராக; அங்கே தாயும் குஞ்சுகளும் கலந்து சுகமே வாழட்டும்,'' என்று அறிவுறுத்தினார்கள்.

410. ''நீ யொரு கருங்கல்தானென்று நான் நிச்சயமாகவே அறிந்திருக்கிறேன்; நீ இவ்வுலகத்தில் நல்லதும் செய்வதில்லை, கெட்டதும் செய்வதில்லை; மேலும் முஹம்மத் (ஸல்அம்) அவர்கள் உன்னை முத்தியிட்டதை நான் கண்டிராவிடின், உன்னை நான் முத்தி இடமாட்டேன்,'' என்று சொல்லிக்கொண்டு உமர்ரலி அந்தக் கறுப்பு (ஹஜருல் அஸ்வத்) கல்லை முத்தியிட்டதை நான் கண்டேன்.

(இவ்வாறு உமர்ரலி அவர்கள் சொன்னதன் தாத்பர்யம், ஜனங்கள் அந்தக் கறுப்புக்

கல்லை வணங்காமலிருக்க வேண்டு மென் பதுதான்.)

411. "நபிகள் பெருமான் எப்படி யிருக்கிறார்க ளென்று எனக்குச் சொல்," என்று நான் என் தாயாரைக் கேட்டேன். அதற்கு என் தாய், "என்னுடைய சிறிய குழந்தாய்! நீ அந்த நபியைக் கண்டிருப்பை யாயின், நீ யொரு உதய சூரியனைக் கண்டதாகவே கூறுவாய்," என்று எனக்குச் சொன்னார்.

412. முஹம்மத் நபி (ஸல்அம்) அவர்களைக் காட்டினும் அதிகம் அழகான வேறொன்றையும் நாம் ஒருபோதும் கண்டதில்லை; உண்மையில் அவர்களுடைய முகார விந்தத்தில் சூரியனே தவழ்ந்து செல்வது போல் அத்தோற்றம் உமக்குப் புலப்படும்.

413. நான் முஹம்மத் நபி அவர்

களிடம் (ஸல்அம்) பத்து வருடகாலம் ஊழியம் புரிந்தேன். அவர்கள் என்னைப் பார்த்து ஒருபோதும் உப்ப்* என்றுகூடச் சொன்னதில்லை; இன்னமும், "ஏன் அப்படிச் செய்தாய்?" என்றேனும், "ஏன் அப்படிச் செய்யவில்லை?" என்றேனும் அவர்கள் என்னைப் பார்த்துச் சொன்னதில்லை.

[ஒரு நாள் ரஸூலுல்லா(ஹ்) விடம் சில மனிதர்கள் வந்து விருந்தினராத இரவில் தங்கினார்கள்; அவர்களுள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு தோழரின் வீட்டுக்கு அவரவரின் அனுமதியின் மீது அனுப்பிவிட்டார்கள். இறுதியில் எஞ்சிய ஒருவரை மட்டும் ஒருவரும் அழைத்துக் கொண்டு போகத்

---

* உப்ப் என்பது அதிருப்தியைக் குறிக்கக்கூடிய ஒரு சிறு கோபத்தைக் காட்டும். தமிழில் சீ! என்பதை இதற்கு ஒருவாறு இணையாகச் சொல்லலாம்.

துணியவில்லை. ஏனெனின், அவர் மகா துஷ்ட எஹூதி யென்று பெயர் பெற்றிருந்தார். உடனே நபிகள் திலகம்ஸல் அவரைத் தங்களுடைய சொந்த விருந்தாக ஏற்றுக்கொண்டார்கள். அன்றிரவு அந்த எஹூதி ரஸூலுல்லா(ஹ்)வின் வீட்டில் விருந்துண்டு விட்டு அவர்களுடைய பள்ளியறையிலுள்ள நபிபெருமானின் சொந்தப் படுக்கையின் மீதே நித்திரை யாக்கப் பட்டார். அந்த எஹூதி நடு நிசியில் வேண்டுமென்றே துஷ்டத்தனமாக நபிகள் திலகத்தின்ஸல் பரிசுத்தமான படுக்கையின் மீது மலவிஜஸர்னம் செய்து அசுத்தமாக்கி விட்டார்; அவர் தாம் செய்த கொடிய செய்கையினால் அச்சங்கொண்டு விடியுமுன் எழுந்தோடி விட்டார். ஆனால், அவருடைய விலையேறப் பெற்ற வாளாயுதமானது நபிபெருமானின் விடுதியில் தங்கிவிட்டபடியால், மீண்டும் அதையெடுத்துக் கொண்டு போகலாமென்று திரும்பினார். அவர் அங்கு

வந்தபோது என்ன கண்டார்! ஆஹ்! அவர் வரும்போது ரஸூலுல்லா(ஹ்) அவர்கள் தங்களுடைய திருக் கரங்களினல் அந்த அசுத்தமான மலப்படுக்கையை அலம்பிக் கொண்டிருந்தார்கள். என்னே இவர்களின் பெருந்தன்மை!]

414. ரஸூல் நாயகம் அவர்களே மனிதர்களுக் குள்ளெல்லாம் மகா சௌந்தர்யம் நிறைந்தவர்க ளாகவும், மகா தாராள முள்ளவர்க ளாகவும், மகா தைரியமுள்ளவர்க ளாகவும் இருந்து வந்தார்கள்.

415. நபிகள் பெருமான் திரைக் குப் பின்னுலிருக்கும் ஒரு கன்னிப் பெண்ணைக் காட்டினும் அதிக அடக்க முள்ளவர்களா யிருந்தார்கள்.

416 ஆண்டவனுடைய மற்றைத் தூதர்களெல்லாம் தங்கள் தங்களுக் குரிய அற்புதங்களைப் பெற்றிருந்தார்

கள். ஆனால், என்னுடைய அற்புத மோ குர்ஆன யிருக்கிறது; மேலும், இந்த அற்புதம் என்றென்றும் நிலைத்திருக்கும்.

417. மதீனாவில் நபிகள் நாயகத்தைக் காத்தைப் பிடித்துத் தான் நாடிய இடங்களுக்கெல்லாம் அவர்களை அழைத்துச் சென்று, தன்னுடைய நிலைமையை யெல்லாம் அவர்களிடம் சொல்லக்கூடிய ஓர் அடிமைப் பெண் இருந்தாள்.

418. நபிகள் பெருமான் தங்களுடைய வீட்டுக்குள் ளிருக்கும்போது என்ன செய்துகொண் டிருந்தார்களென்று நினைக்கின்றீர்கள்? "ஆடுகளைப் பால் கறப்பதாலும், பாதரக்ஷைகளைப் பழுது பார்ப்பதாலும், தையல்வேலை செய்வதாலும் தங்களுடைய குடும்பத்தினருக்கு அவர்கள் உதவி புரிவது

வழக்கம். மேலும், தொழுகையின் வேளை வரும்போது அவர்கள் எழுந்து சென்று அதை முடிக்கப் போவார்கள்."

419. நபிகள் நாயகமவர்கள் ஏதேனுமோர் மனிதனையேனும், வேறேதேனுமோர் வஸ்துவையேனும், ஒரு போதும் தங்களுடைய சொந்தக் கரத்தினால் அடித்ததில்லை; மேலும் தங்களுடைய சொந்த நிமித்தமாகப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்றும் ஒரு போதும் எண்ணினதில்லை; ஆனால், மனிதர்கள் சட்ட விரோதமான காரியங்களைச் செய்யும்போது மட்டும் அவர்களைத் தண்டிப்பார்கள்.

420. "நான் மறைவான பொக்கிஷம்போல் இருந்தேன். என்னை அறிவித்துக்கொள்ள நாடினேன்; அதனால் நான் மனிதனைப் படைத்தேன்,"

என்று ஆண்டவன் சொல்லுகிறான்.

421. நபிகள் பெருமான்ஸல் தங்கள் கடமைகளைக் கழிக்கத் தாங்களே காத்திருப்பது வழக்கம்.

422. "எங்களுடைய நாயகன் எனக்கு ஒன்பது காரியங்களை நியமித்திருக்கின்றான்: (1) அகத்திலும் புறத்திலும் அவனுக்கு மரியாதை செய்தல்; (2) செல்வ நிலையின் போதும் ஏழ்மையின் போதும் மெய்யாகவும் தகுந்தவண்ணமாகவும் பேசுதல்; (3) தனத்திலும் தாரித்திரியத்திலும் மிதமாயிருத்தல்; (4) எனக் குதவி புரியாத அப்படிப்பட்ட உற்றாருக்கும் உறவினருக்கும் நான் உதவிபுரிதல்; (5) எனக்கு இல்லை யென்பவனுக்கு யான் தானங் கொடுத்தல்; (6) எனக்குத் துன்பம் செய்கிறவனை நான் மன்னித்தல்; (7) ஆண்டவன் சார்பான

ஞானத்தைப் பெறும் பொருட்டு மௌனமாயிருத்தல்; (8) நான் பேசும்போது அவனையும் குறித்துப் பேச வேண்டும்; (9) ஆண்டவனுடைய சிருஷ்டிகளைக் காணும்போது அவற்றிற்கு என்னுடைய பார்வையானது மற்றையோருக்கோர் உதாஹரணமாயிருக்க வேண்டும்; மேலும் சட்டத்துக் கொத்த காரியத்திலேயே நான் பிரவர்த்திக்க வேண்டுமென்று ஆண்டவன் கட்டளை யிடுகிறான்.

423. வட்டி வாங்குவோனும், வட்டி கொடுப்போனும், அதன் சம்பந்தமான காகிதங்களை எழுதுவோனும், அற்குச் சாக்ஷியாயிருப்போனும் ஆகிய எல்லோரும் ஒரேவிதமான குற்றத்தைத்தான் செய்கிறார்கள்.

424. ஒரு வியாபாரத்தை ஒருவரே செய்வதென்னும் ஏகசுதந்தரம் பெறு

வோன் ஒரு பாபியாகவும் குற்றவாளி யாகவு மிருக்கிறுன்.

425. சகாயமான விலைக்கு விற்கும் பொருட்டுத் தான்யங்களை நகரங்களுக்குக் கொண்டுவருவோர் அதனுல் அதிகலாபத்தை யடைகிறுர்கள். ஆனல், தான்யத்தை ஏறிய விலைக்கு விற்கும் பொருட்டுக் கட்டுக்கடை செய்பவன் சபிக்கப் பட்டவனு யிருக்கிறுன்.

426. இறுதிநாளின் துன்பத்தினிறும் துயரத்தினின்றும் ஒழிதலைப் பெற விரும்புவோர் தங்களுக்குக் கொடுக்க வேண்டிய சிறு கடன்காரர்களைத் தொந்தரை செய்யாமல் அவர்களுக்கு அவகாசம் கொடுக்கவேண்டும்; அல்லது அந்தக் கடனின் ஏகதேசத்தையோ அல்லது முழுதையுமோ மன்னித்து விடுதல் வேண்டும்.

427. மதத்துக்காக இரத்தசாக்ஷி

மாணமடைவோ னுடைய எல்லாக் குற்றமும் மன்னிக்கப்படும்; ஆனால், அவன் கொடுக்க வேண்டிய கடன் மட்டும் மன்னிக்கப்பட மாட்டாது.

428. ஒருவன் தன்னுடைய கடனைக் கொடுப்பதற்கு வேறொரு வஸ்துவை வைத்துக்கொண்டு, அக்கடனைத் தீர்க்க மறுதளிப்பானாயின், அவனுடைய நாணயத்தைக் கெடுத்து அவனுக்கும் தண்டனை கொடுப்பது நியாயமே யாகும்.

429. கூலிக்காரனுடைய வியர்வை நீரானது உலர்ந்து போகுமுன் அவனுக்குச் சேரவேண்டிய கூலியைக் கொடுத்து விடுக.

430. உங்களுடைய ஸ்திரீகள் பள்ளி வாயிலுக்கு வருவதைத் தடை செய்யாதீர்கள்; ஆனால், அவர்களுடைய இல்லங்களே அவர்களுக்குச்

சிலாக்கியமா யிருக்கும்.

431. "ஆதியில் என்ன இருந்தது?" என்று கேட்டபோது, நபிகள் பெருமான்^ஸல் விடை பகர்ந்தார்கள்: "ஆதியில் ஆண்டவன் மட்டுமே இருந்தான்; அவனுடன் ஒன்றுமில்லை; மேலும், அவன் தன்னுடைய மாட்சிமைக்குரிய சிம்மாசனத்தை நீரின்மேல் நிறுவினான். மற்றைய வெல்லாம் அவனுடைய ஞாபகமென்னும் ஸ்தானத்தில் இருந்தன."

432 "தாங்கள் எப்பொழுது ரஸூலாக நியமனம் பெற்றீர்கள்?" என்று கேட்டபோது, பின் வருமாறு நபி பெருமான்^ஸல் பதில்மொழி கூறினார்கள்: "ஆதம் தம்முடைய உயிருக்கும் உடலுக்கும் இடையிலிருந்த போது நான் ஆண்டவனுடைய தூதனாக நியமனம் பெற்றேன்."

432.உ "நான் ஆண்டவ னருகில் இருந்தபோது, ஆதம் தம்முடைய களிமண் நிலைமையிலேயேயிருந்தார்."

433. மனிதர்களுடன் மிருதுவாக நடந்துகொள்ளுங்கள். அவர்களுடன் கடினமாய் நடவாதீர்கள்; அவர்களுக்கு உற்சாக மூட்டுங்கள்; ஆனால், கண்டனஞ் செய்யவேண்டாம். மேலும், சுவர்க்கத்துக்கு வேண்டிய திறவுகோலானது எங்கேயிருக்கிற தென்று உம்மைக் கேட்கக் கூடிய வேதத்தையுடைய மக்கள் பலரை நீர் காண்பீர். சுவர்க்கத்தின் திறவுகோலானது, ஆண்டவனின் உண்மையைப்பற்றி உறுதி கொள்வதும் நற்காரியம்செய்வதும் தாம் என்று மறுமொழி கூறுவீராக.

(இதன் பின்னரேனும் இஸ்லாத்தின் உண்மையான சாராம்சம் இன்னதென்பதை எல்லோரும் உணர்ந்து கொள்வார்களா?)

434. நீர் உம்முடைய சிருஷ்டிகர்த்தாவை நேசிக்கிறீரோ? இது. வாஸ்தவமாயின், உம்மைப்போன்ற உனைச் சகோதர மனிதர்களை முதன் முதலில் நேசிப்பீராக.

(இஸ்லாத்தின் துரதிருஷ்ட வேளைக்குத் தக்கவாருகவே முஸ்லிம்களும் ஒருவரையொருவர் ஜன்ம விரோதிபோல் வெறுத்து வருகின்றனர்.)

435. கற்றோரின் வசனங்களுக்குச் செவிசாய்ப்பதும் அறிவு நூலின் உண்மைகளைப் பிறருக்குப் போதிப்பதும் மதானுஷ்டானங்களைக் காட்டிலும் சிரேஷ்டமானதாய்க் காணப்படுகின்றன.

436. மதவிஷயத்தில் இரத்தசாக்ஷி மரணத்தினுல் மரிப்பவனது உதிரத்தைக் காட்டினும் கற்றறிந்தோனது (எழுதுகோலின்) மையானது அதிக

பரிசுத்தமுள்ளதா யிருக்கிறது.

437. ஞானம் பெறும்பொருட்டுத் தன் வீட்டைவிட்டு வெளிப் படுவோன் அல்லா(ஹ்)வின் பாதையில் யாத்திரை செய்கிறான்.

438. சிருஷ்டி கர்த்தாவின் சிருஷ்டியின் பெருமையைப்பற்றி ஒரு மணிநேரம் தியானிப்பதானது எழுபது ஆண்டுகள் மட்டும் வணக்கம் புரிவதைக் காட்டினும் சிறப்புற்றதா யிருக்கின்றது.

439. சன்மார்க்கத்தைப் போதிக்கும் ஒவ்வொருவரும் தத்தம்முடைய சொந்தக் குணநிசயத்தைப் பரிசோதித்துப் பார்ப்பாராக.

440. ஆண்டவன் பரிசுத்தமானவன்; அவன் தூய்மையையும் பரிசுத்தத்தையுமே விரும்புகிறான்.

441. ஆண்டவன் தன்னுடைய சிம்

மாசனத்தின்கீழ்ப் புதையல்களை வைத்திருக்கிறான்; இவற்றிற்குரிய திறவுகோல்கள் வித்வான்களின் நாக்களாயிருக்கின்றன.

442. அறிவை அடைய வேண்டுவது ஆணேயாயினும் பெண்ணேயாயினும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையா யிருக்கின்றது.

443. அறிவைத் தேடிக்கொள்க. அறிவுள்ளவனை அவ்வறிவானது நன்மை தீமை இன்னதென உணர்ந்து கொள்ளும்படி செய்கின்றது; அது சுவர்க்கம் புகுதற்கு வேண்டிய வழியைத் துலக்குகின்றது; தனித்த பாலைவனத்தில் அவ்வறிவு நமக்கு நண்பனும், ஏகாங்கியா யிருக்கும்போது நமக்குத் துணைவனும், நேயர்களில்லாத போது நமக்குக் கூட்டாளியாயு மிருக்கின்றது. பேரானந்த மடைவதற்குப்

பேருதவி புரிகின்றது; துன்பம் நேருங்கால் நம் துயரத்தை மாற்றுகின்றது; நண்பர்களுக்குள் ஓர் ஆபரணமாயும் எதிரிகளின் முன்னே ஒரு கவசமாயும் அவ்வறிவு அமைந்திருக்கிறது.

(உம்மீ யாயிருந்த எழுதப் படிக்கத் தெரியாத ஒரு நபியால் அந்த அரப் தேசப் பாலைவனத்தில் உபதேசிக்கப்பட்ட இவ்வுண்மையை இற்றைநாள் முஸ்லிம்கள் நன்கு நிதானித்துப் பார்ப்பார்களாக.)

444. அறிவைக்கொண்டு மனிதன் நன்மையின் உச்சஸ்தானத்தையும் அந்தஸ்தின் உயர் பதவியையும் அடைகிருன்; இவ்வுலகில் அரசர்களுடன் அன்னியோன்னியமாகிருன்; மறுவுலகில் பேரின்பத்தின் பரிபூர்ணத்தையடைகிருன்.

445. ஏ ஆண்டவனே! எனக்கு உன்மாட்டு விருப்ப முண்டாகும்படி

செய்; உன்னை நேசிப்பவரை நான் நேசிக்கும்படி செய்; உன்னுடைய நேசத்தைப் பெறும்படியான செய்கைகளையே நான் செய்யும்படி செய்; என்னுடைய உயிரைக் காட்டினும் குடும்பத்தைக் காட்டினும் ஐசுவரியத்தைக் காட்டினும் உன்மீது என் விசுவாசத்தைத் தழைத் தோங்கும்படி செய்.

446. ஏ என்னுடைய நாயகனே! என்னுடைய பலஹீனத்தின் காரணத்தினாலும், என்னுடைய எண்ணங்களின் பயனின்மையின் காரணத்தினாலும் என்னுடைய குறையை உன்பால் தெரிவித்துக் கொள்கிறேன். ஏ காருண்ய மூர்த்தியே! மனிதர்களுடைய பார்வையில் நான் ஓர் அற்பனாய்க் காணப்படுகிறேன். ஏழைகளுக்கு இறைவனே! என்னுடைய தலை

வனே! என்னைக் கைவிட்டு விடாதே. அன்னியர்களுக்கேனும் என்னுடைய எதிரிகளுக்கேனும் என்னை ஓர் இரையாகக் கொடுத்துவிடாதே. உனக்கு மனவருத்தம் உண்டாகாமலிருக்கும் பக்ஷத்தில் நான் பத்திரமாயிருப்பேன். எல்லா அஞ்ஞானமும் ஒழிவதற்கும் இகத்திலும் பரத்திலும் ஆத்மசாந்தி ஜனிப்பதற்கும் காரணபூதமாயிருக்கின்ற உன்னுடைய கிருபாகடாக்ஷ ஒளியிலேயே நான் புகலிடந் தேடுகிறேன். உன்னுடைய நாட்டம் போல் என்னுடைய கஷ்டங்களுக்குப் பரிஹாரம் செய்வாயாக. உன்னையன்றி வேறு யாதொரு விதமான அதிகாரமும் ஆண்மையுமில்லை.

(இந்தப் பிரார்த்தனையானது நபிகள் நாயகமவர்களால்ஸல் தங்களுடைய ஓர் ஆழமான மனத்துயரத்தின் வேளையில் செய்

யப்பட்டது. தாயிப் என்னுமிடத்திற்கு நபி
கள் பிரான் உபதேசஞ் செய்யச் சென்ற
போது, அங்கிருந்த விக்கிரக வணக்கக்காரர்
கள் தங்களுரைவிட்டு ரஸூல் நாயகத்தைத்
துரத்தி யடித்தார்கள். கீழ்த்தர மக்களும்
அடிமைகளும் அன்னாரைக் கல்லா லடித்துக்
கொண்டும் கைகொட்டிக் கேலிசெய்து கொ
ண்டும் அதிகதூரம் வரையில் பின் தொடர்
ந்து வந்தார்கள். கல்லெறியால் காயமுண்
டும், பாதமிரண்டும் உதிரம்சொரியவும் நெடுந்
தூரம் நடந்து சென்று அங்கோரிடத்தில்
தனித்திருந்து மேற்கூறியவாறு உள்ளங்
கசிந்து உருகி நின்றார்கள்.)

447. நோன்பு வையுங்கள்; ஆனால்,
ஆகாரமும் புசியுங்கள்; இரவில் விழித்
திருங்கள்; ஆனால், தூங்கவும் செல்
லுங்கள். நீங்கள் நோய்வாய்ப் படா
மலும் உங்களையே நாசமாக்கிக் கொள்
ளாமலும் இருக்கும்பொருட்டு அளவு

கடந்த வேலையைச் செய்யாது, உங்க ளுடைய உடம்பின்மீது நீங்கள் செலு த்தக்கூடிய ஒருவகைக் கடமையும் இருக்கிறது. உங்கள் கண்களின் மீதும் நீங்கள் காட்ட வேண்டிய கடமை யொன்றுண்டு: நீங்கள் சில சமயங்க ளில் தூங்கி அவற்றிற்கு ஓய்வு கொடு க்க வேண்டும். மேலும், உங்களைப் பார்க்க வருகின்ற மனைவி முதலிய மற்றை விருந்தினருக்கும், வேறு உங் களைப் பார்க்கவரும் நண்பர்களுக்கும் நீங்கள் செய்ய வேண்டிய கடமை யொன்றுண்டு: நீங்கள் அவர்களுடன் இனிய வசனம் பேசுதல் வேண்டும். ஒருவரும் இவ்வுலகில் எக்காலத்திலும் விடாமல் நோன்பு வைப்பதானது காலமுழுதும் நோன்பிருத்தற்கொப்பா கும். எனவே, ஒவ்வொரு மாதத்திலும் மும் மூன்று தினம் நோன்பிருங்கள்.

448. "ஏ அல்லா(ஹ்)வின் திருத்தூதரே! காபிர்களைச் சபிப்பீர்களாக," என்று ரஸூல் நாயகமவர்களிடம்ஸல் சிலர் கூறியபோது, முஹம்மத் முஸ்தபா (ஸல்அம்) அவர்கள், "இதற்காக நான் அனுப்பப்பட வில்லை; இன்னமும், மனித கோடிகளுக்கு ஒரு தயாளமாகவே யல்லாமலும் நான் அனுப்பப்பட வில்லை," என்று மறுமொழி கூறினார்கள்.

449. "அதன்பின் என்னுடைய அடியார்களுள்ளிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு நான் ஒரு சட்ட சம்பந்தமான வேதத்தைக் கொடுத்தேன்; பின்னர் அவர்களுள் சிலர் தங்களுடைய ஆத்மாக்களையே பாதகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். வேறு சிலர் தங்களுடைய செய்கைகளில் நடு நிலையான வழியைப் பின்பற்றுகிறார்கள்.

மற்றுஞ் சிலர் நன்மை செய்வதில் விரைவுள்ளவர்களா யிருக்கிறார்கள்,'' என்னும் வேதவாக்கியத்துக்கு வியாக்கியானம் செய்யும் போது நபிகள் பெருமானார், "அவர்க ளெல்லோரும் சுவர்க்கத்தி லிருக்கிறார்கள்; தத்தம்முடைய மேன்மைக்கும் அந்தஸ்துக்கும் தக்கவாறாக அங்கே அமைந்திருக்கிறார்கள்,'' என்று கூறினார்கள், என்று உஸாமா பின் ஜய்த்[ரலி] என்பவர் கூறியிருக்கிறார்.

450. சுவர்க்கமென்பது என்ன ?'' என்று வினவியபோது, நபிகள் (ஸல்அம்) அவர்கள் இவ்வாறு விடை பகர்ந்தார்கள்: "அதுதான் மனிதனுடைய கண் கண்டிராதது; அவனுடைய காதும் கேட்டிராதது; அல்லது மனிதனுடைய மனத்தினூடே அஃது எப்படியிருக்கு மென்னும் எண்ணமும்

ஒருபோதும் நுழைந்திராதது."

[ரஸூலுல்லா(ஹ்)வின் சுவர்க்க லக்ஷணம் இவ்வாறு இருக்கும் போதுதான் நரகமும் சுவர்க்கமும் இன்ன இன்ன விதமான ஜட பதார்த்தங்களால் இன்ன இன்ன இடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன வென்று ஒரு சிலர் வாதிக்கின்றனர். அவர்களுடைய வாதத்தையெல்லாம் இந்தத் திருவாக்கியத்துடன் எவ்வாறு பொருத்திக் காட்டுதல் சாலும்?]

451. "ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இந்த ஜனங்களுக்கு இவர்களுடைய மதத்தைச் சீர்திருத்தம் செய்து காட்டக்கூடிய ஒவ்வொருவரை ஆண்டவன் நிச்சயமாக அனுப்புவான்."

[ஹிஜ்ரி 14-வது நூற்றாண்டு ஆரம்பமாகிச் சற்றேறக் குறைய அரை நூற்றாண்டாகியும் இதுகாறும் இந் நூற்றாண்டுக்கு வேண்

டிய மத சீர்திருத்தக்காரர் எங்கே அவதரித்திருக்கின்றூரென்று இந்த நாயகவாக்கியத்தை உண்மையென்று ஒத்துக் கொள்வோரை யாம் மிகப்பணிவுடன் அதிவிநயமாய் வினவுகின்ரும்.

மிஷ்காத் முற்றுப்பெற்றது.

## நபிகள் நாயக வாக்கியம் 451 முற்றிற்று.

# விஷய சூசிகை

அகதிகளை ஆதரித்தல் 262, 274

அசூயை கொள்ளாமை 65

அடிக்கடி கவனிப்பதன் பெருமை 170

அடிமைமீது அன்பு 212

அடிமையின் விடுதலை 32-ஆம் பக்கம்

அடியானின் பெருமை 397, 398

அண்டை அயலாரிடம் நடந்து கொள்ளல் 112, 215

அபிப்பிராய பேதம் 49

அல்லா(ஹ்)வின் உவந்த அடியார் 32

அல்லா(ஹ்)வின் தியானம் 399, 438

அல்லா(ஹ்)வின் பரிசுத்த வசன் 227, 400, 440

அல்லா(ஹ்)வின் மீது உறுதி 33-ஆம் பக். 10

அவனவனே தன் தன் செய்கைக்குக் காரணம் 140

அவ்வுலகுக்கு வேண்டியதை இவ்வுலகில் செய்தல் 148

அளவுகடந்த பக்ஷம் 248

அறிவிழந்த பின் 88

அறிவீனன் 347

அறிவு தேடல் 102, 103

அறிவைப் பெறும் அவசியம் 167

ஆசை கொள்ளல் 324, 330, 375

ஆண்டவ னடிமைதான் நபி 243, 246

ஆண்டவனருள் 258, 351, 359, 395, 396, 397, 403, 405, 406, 408, 409, 449

ஆண்டவனருள் விசாலம் 110, 125, 137, 139, 150, 180

ஆண்டவனின் கொடிய பகைவர் 74

ஆண்டவனின் தூரம் 395, 396, 397, 401

ஆண்டவனுக்கு இணைவைக்கவேண்டாம் 76
ஆண்டவனை யறிதல் 43, 175
ஆண்டவனையே பின்பற்றல் 5
ஆண்டவனொருவனை ஒத்துக்கொள்வதுமட்டும் போதாது 87
ஆதியில் இருந்தது 431, 432
ஆயிஷாவுக்கு அறிவுறுத்தல் 224, 337, 388
இஸ்லாத்தில் எங்ஙனம் நடப்பது 40, 47
இஸ்லாத்தின் இலக்ஷணம் 82, 83, 131
இஸ்லாத்தில் 73 கூட்டம் 66
இஸ்லாத்தின் எளிமை-பக்கம் 3
இஸ்லாத்தில் சன்னியாசமில்லை 185
இஸ்லாத்தின் க்ஷீணம் 69, 162
இஸ்லாத்தின் பழைமை பக்கம் 19
இஸ்லாமும் சோஷலிஸமும் 72
இஸ்லாம் உயர்ந்தோங்கல்-பக்கம் 23
இஸ்லாம் எங்கும் பரவுதல் ஷை 18
இடையூறுகளின் காரணம் 356

இந்திரியத் தூய்மை 130
இரகசியம் பேசுவது கூடாது 268
இரண்டு வழிகாட்டிகள் 39
இருவகைக் குணம் 117
இருவகை ஞானம் 155
இல்லற பக்தி 152
இறந்தோருக் கிரங்கல் 362, 364, 365
இறந்தோருக்கு மரியாதை 58, 134, 143
இறந்தோரைப் பழிக்கவேண்டாம் 59, 98, 196a
ஈமானின் சாகைகள் 228
ஈமானின் பூர்த்தியடைதல் 223
ஈமானின் மூலவேர் 78
உண்மைக் குழைத்தல் 36
உண்மை பேசுவோர் 233, 234, 238, 241
உண்மை மனிதன் 26, 27
உண்மையான அடக்கம் 19, 20
உண்மையான வசனம் 227, 435

உபகாரத்தின் மேன்மை 33
உயிருடன் புதைத்தல் 279
உலகப் பற்று 248, 321, 328, 344, 350
உலக மாயை 97, 108, 114, 122, 123, 124, 130, 192
உற்சாக மூட்டல் 28
ஊழியர்களை மன்னித்தல் 208, 209
எண்ணத்துக்குத் தக்கபடியே பலன் 1, 104
எதனினும் எது சிறந்தது 236, 389
எதிரிகளின் இடுக்கண் 224
எதிரியை மன்னிப்பதன் பயன் 213
எல்லாக் குழந்தைகளும் இஸ்லாத்தில் பிறக்கின்றன 99
எழுவகைச் சற்குணங்கள் 109
எளிய வாழ்க்கை 32-ஆம் பக்கம்
ஏக வியாபார சுதந்தரம் 368, 424, 425
ஏவல் விலக்கல் 42, 47, 52
ஒப்பாரி வைத்தல் 362

ஒரு முஸ்லிமுடன் மற்றொரு முஸ்லிம் நடக்கவேண்டிய விதம் 266, 267, 268, 280, 281, 283, 289, 291, 304, 387

கடன் தீர்த்தல் 426, 428

கடன்பட்டோரை நபிபிரான் ஆதரித்தல் 184, 187

கண்ணிய ஜீவனோபாயம் 11

கதீஜாவிடம் அமர்தல் 11-ஆம் பக்கம்

கர்வங் கொள்ளல் 235, 245, 303, 313, 314

கல்வியறிவு 435, 436, 437, 438, 442, 443, 444

கவித் திறம் 226, 227, 230, 441

கள்ளத்தனத்தின் சாகைகள் 228

கற்றறிந்தோன் பெருமை 6, 7, 161, 163, 164, 165, 167, 168

ஹஜருல் அஸ்வத் 41

காரணமில்லாமல் தல்லாக்குக் கேட்டல் 206, 207
காலத்தின் அபிவிருத்தி 62
ஹிருதயத்தின் பெருமை 182
ஹிஜ்ராத்துப் போதல் 22-ஆம் பக்கம்
குடும்பத்தில் நல்லவராயிருத்தல் 196, 202, 203
குணசாலிப் பதிவிரதை 190, 191, 197
குணவிசேஷம் 115, 128
குபிரியத் சொன்னவன்மீதே மீள்வது 232
குர்ஆனின் அற்புதம் 416
குர்ஆனின் ஐந்து விஷயங்கள் 60
குர்ஆனுடன் நபியையும் பின்பற்றல் 67, 85
குர்ஆன் வெளியான பிராகிர்தம் ஏழு 166
குலப் பெருமை 245
குழந்தையைப் பயிற்றல் 276, 277, 278
குற்றத்தையே காணுதல் 239, 291
கூலிக்காரன் கூலி 429

கொடு மொழி 303, 375, 392

கொடையின் சிறப்பு 13, 14, 50, 52, 94, 95, 158

கொள்ளை நோயின்போது நடந்துகொள்ளல் 76

கோபத்தை யடக்கல் 305, 306, 311, 312, 316, 318, 319, 405, 413

சகோதரத்துவம் 143

சகோதர வாஞ்சை 257, 258, 265, 266, 270, 280, 289, 353, 434

சமாதானஞ் செய்தல் 289

சரியான மார்க்கம் 63

சரீராரோக்கியம் 320, 354, 355

சன்மார்க்க உபதேசம் 234, 237, 238, 244, 255, 257, 258, 268, 269, 271, 287, 289, 294, 308, 311, 319, 330, 331, 334, 433, 435

சாந்த குணம் 293, 299, 300, 301, 302, 305, 309, 369

சிறந்த தருமம் 21

சிறந்த ஜிஹாத் 91

சீர்திருத்தம் செய்வோர் 451

ஜீவகாருண்யம் 23, 30, 35, 210, 244, 247, 258, 270, 271, 286, 381, 382, 383, 409, 434

சுத்தம் 377

சுயமே துன்புறுத்திக் கொள்ளல் 61

சுவர்க்க நரகம் 407, 450

சுவர்க்கம் புகுதற்குரிய அம்சங்கள் 241, 313, 374

சுற்றந் தழுவல் 249, 251, 253, 262, 329, 343, 391, 394

செய்கைக்குத் தக்க கூலி 116, 120

ஞானப் பேரொளி 44

ஞானம் 352

தத்துவ சாஸ்திரப் பெருமை 100

தயாளச் சிந்தை 22

தலைவர்களுக்கு அடங்கி நடத்தல் 67

தற்பெருமை 235, 303, 315

தாய் தந்தை யற்றவர்கள் 10-ஆம் பக்கம்

தாராளச் சிந்தை 414, 448

தான தர்மம் 261, 337, 338, 353, 370, 374, 376, 378, 379, 380, 381, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 394

தீயடியார் 109

தீயவர் யார் 211, 214

தீயோர் 345

தீர்க்காலோசனை 294, 296, 330

துராதிருஷ்டம் 147

தேவஞானம் ஒழிதல் 154

தேவதியானம் 89, 93

தைரியம் 237, 414

தொழிலின் பெருமை 9, 10

தொழுகை 330, 342, 350, 377, 418

தொழுகையின் தூய்மை 52, 106, 107, 160

தொழுகையுடன் தொழிலையும் மறக்கவேண்டாம் 8

தௌபாவின் பெருமை 403, 404

நட்பு 280, 281

நபிகளுக்குப் பகைமை 70

நபிகள் நாயகம் 224, 243, 244, 246, 254, 262, 322, 325, 331, 332, 333, 341, 349, 351, 352, 354, 354, 364, 365, 387, 402, 403, 411, 412, 413, 414, 415, 417, 418, 419, 421, 422, 432, 445, 446, 448

நபித்தனத்தின் வெற்றி 25-ஆம் பக்கம்

நபிபிரானின் உறுதிப்பாடு 17-ஆம் பக்கம்

நபிபிரானின் காருண்யம் 24 ஷை ஷை

நபிபிரான் 5, 39, 41, 44, 45, 53, 65, 66, 73, 85, 89, 129, 131, 135, 150, 159, 176, 177, 187, 196, 204, 218, 220, 221, 222

நபிப்பட்டம் பெறுதல் 13-ஆம் பக்கம்

நபிமாரின் குணம் 296, 308, 309, 325

நபியின் அவசியம் 8-ஆம் பக்கம்

நபியின் குணாதிசயம் 30 ஷை

நபியின் தோற்றம் 29 ஷை

நபியும் மனிதரே 29-பக்கம், 73, 204, 205

நபியே நமூனா 45

நபுஞ்சகத்தனம் 152

நம்பிக்கையும் முயற்சியும் வேண்டும் 181

நல்லடியார் 109

நல்லவர் 281, 301, 304, 345

நல்வினை ஏவல் 25

நன்மை தீமையை அறிதல் 183

நன்மையால் தீமையை ஒழித்தல் 174

நன்மையில் உறுதி கொள்ளல் 29
நாயக சரித்திர அவசியம் 1-ஆம் பக்கம்
நாயகத்தின் மரணம் 12 ௸ ௸
நாயகத்தின் மரண வேளை 358
நாயகத்தையே பின்பற்றல் 67, 85
நாயக வாக்கியத்தினும் குர்ஆன் மேம்பட்டது 41, 177
நிச்சயமான நாயக வாக்கியம் 176, 177
நுபுவ்வத்தின் ஆரம்பகாலம் 16-ஆம் பக்கம்
நோன்பு 261, 392, 393, 447
பகுத்தறிவின் பெருமை 118, 119, 297, 298, 347
பகைவரின் எதிர்ப்பு 19-ஆம் பக்கம், 156
பக்குவமறிந்து பேசவேண்டும் 113
பசித்திருத்தல் 92
பக்ஷம் பாராட்டல் 37, 142, 194, 195
பஞ்சமகா பாதகங்கள் 79, 80
பணிவும் உபசாரமும் 18

பணிவுள்ளவர் 244, 300, 317, 415, 433
பண்டை நிலைமை 5-ஆம் பக்கம்
பந்தியில் ஒழுகும் மரியாதை 219, 220
பரிபூரணத்தின் தூரம் 86
பாபம் என்பது என்ன 84, 151
பாப மன்னிப்பு 353, 349, 404
பாரமார்த்திக வழிபாடு 12-ஆம் பக்கம்
பிதாவுக்கு முன் புத்திரன் இறத்தல் 363
பிரசாரத்தின் கஷ்டம் 56
பிரியமான மூன்று வஸ்துக்கள் 343
பிரயோஜனமற்ற அறிவு 153
பிற்காலத்தின் நிலைமை 71
புதை குழியே முதற்படி 75
புராதன இஸ்லாம் புதுப்பிக்கப்படுதல் 14-ஆம் பக்கம்
புருஷ சிரேஷ்டர் 5-ஆம் பக்கம், 34
புறங் கூறல் 242, 291, 393
பெண்களின் அந்தஸ்து 157, 200

பெண்களின் கௌரவம் 259, 260, 261, 275, 279, 287, 342, 357, 360, 366, 430
பெரியாரிடம் மரியாதை 257, 273, 282
பெரியாரைப் பெருமை படுத்தல் 24, 25
பெற்றோரைப் பேணல் 76, 105
பொய் பேசல் 234, 315, 393
பொறுமை கொள்ளல் 290
பொறுமைக் குரியவர் 48
பொறுமையின் பெருமை 17, 56, 139
போதுமென்ற மனம் 323, 326, 334, 335
மகா நல்லவனும் மகா கெட்டவனும் 51, 109
மக்கமா நகர் பிடிபட்டது 24-ஆம் பக்கம்
மதீனாவுடன் சம்பந்தம் 21 ஷை
மரணத்தில் அழுகை 53, 54, 135
மரணத்தின் தன்மை 121, 127, 132
மரணத்தைக் கோரவேண்டாம் 55, 133

மரணம் 247, 331, 336, 339, 340, 344, 358, 361, 362

மறுவுலக உண்மை உணர்ந்தோரின் தன்மை 169, 172

மனிதன் படைக்கப்பட்டதேன் 420

மனைவியரிடம் பக்ஷம் பாராட்டல் 193, 194, 195, 198, 199, 201, 203

மனைவியின் பெருமை 366

மனோதிடம் 293, 295

மன்னிப்பு 305, 318, 319, 396, 403, 426, 427

மன்னிப்புக்கு விண்ணப்பம் 402

மாதா பிதாக்களுக்கு மரியாதை 250, 252, 253, 254, 255, 256

மார்க்க விரோதி யார் 15

மானிட முன்னேற்றம் 26-ஆம் பக்கம்

மிதமா யிருத்தல் 447

மிதமிஞ்சிய ஆகாரம் 90

மிதமிஞ்சிய செல்வம் 321, 323, 327, 348
முகப்பழக்கம் 288
முகமலர்ச்சி 240, 296, 307, 384, 385, 392
முஹாஜிரீன் இலக்ஷணம் 46
முஸ்லிமின் இலக்ஷணம் 2, 16, 46, 111, 179, 270, 274, 283, 285, 291, 304, 326, 333, 343, 375
முஸ்லிமைத் திட்டுவதும் அவருடன் சண்டை செய்வதும் 231, 232, 233, 284, 387
முஸ்லிம்களனைவரும் ஒரே கூட்டத்தினர் 263, 264, 266, 267, 268, 271, 291, 304.
மூடச் செய்கைகள் 178
மூமினின் இலக்ஷணம் 3, 57, 70, 79, 81, 84, 173, 235, 245, 267, 270
மூமினின் மிஃராஜ் 103

மூவகை மார்க்கக் கட்டளை 4, 171
மெய்யான சரித்திரம் 4-ஆம் பக்கம்
மேலான ஹிஜ்ரத் 82
மேன்மையான காரியம் 31
மௌனத்தின் மேன்மை 236, 240
யாசகம் 310, 329, 343, 346, 367, 370, 371, 372, 373
யாசியாமையின் பெருமை 12
வட்டி வாங்குதல் 423
வணக்கத்தின் சூக்ஷமம் 126, 130
வறுமை 292, 295, 310, 322, 332, 333, 336, 339, 340, 341, 346
வாக்குவன்மை 225, 230,
விசுவசிக்கத் தக்கவர் 229, 272, 331, 341
விதவைகளை ஆதரித்தல் 261
வியபிசாரம் 77, 136, 138, 149, 315, 381
வியாதியஸ்தரை விசாரித்தல் 141, 142, 144, 145

வியாதியால் எற்படும் படிப்பினை 146
விருந்தோம்பல் 96, 215, 216, 217, 221, 222
விலகியிருக்கத் தக்கவர் 229
விவாகக்கடமை 186, 188, 189
வீணாசை 108
வீணான நோன்பு 393
வைதிகமார்க்க அம்சங்கள் 1, 2, 3, 4

The Guardian Press Ltd., 5-1929 Madras.

# தாருல் இஸ்லாம்

## புஸ்தகசாலைப் பிரசுரங்கள்

முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்தை அறிய
விரும்பும் இதர மதஸ்தர்களுக்கும்
அவசியமான நூல்கள்

## குர்ஆன் ஷரீபின் தமிழ் மொழி பெயர்ப்பு

### ஜவாஹிருல் புர்கான்

முதலிரண்டு வெளியீடுகளில் 159 ஆயத்துக்களின் தமிழ் மொழிபெயர்ப்பும் அதன் விரிவான வியாக்யானமும் ஒருங்கே கூடியன. மிக அழகிய அச்சு. தலைப்பில் குர்ஆன் ஆயத்தை அரபியிலேயே எழுதி அதன் மொழிபெயர்ப்புத் தமிழில் எழுதப்பட்டுள்

ளது. எல்லோருக்கும் அவசியமானது. கண்ணைக் கவரும் அழகிய காலிகோ பைண்டு கட்டியது. விலை ரூபா 3 தான்.

## அம்மயத் ஜுஜு

குர்ஆன் ஷரீபின் 30-ம் பாகமாகிய அம்மயத் ஜுஜுவை மொழிபெயர்ப்புடனும் விரிவான வியாக்யானத்துடனும் அழகாக அச்சிட்டுள்ளோம். தொழுகையில் அதிகமாக உபயோகமாகக் கூடிய ஸூறாக்கள் இதிலடங்கியிருப்பதால் இது பல்லோருக்கும் பயன்படக்கூடியதாகும். மிக நேர்த்தியான பைண்டு. விலை ரூபா 2 தான்.

## நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும்

(துரைத்தனத்தார் அங்கீகாரம் பெற்றது)

இந்நூலில் நபிகள் நாயகத்தின் சரித்திரமும் நான்கு தோழர்களின் சரித்திரங்களும் அதன்பின் தொடர்ந்து வந்த கலீபாக்களுடையவும், ஹஸன் ஹுஸைன் ரலி சரித்

## தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை

திரமும், இஸ்லாத்தின் பண்டைச் சரித்திரமும் மிக அழகாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அக்கால தேசப்படமொன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் சென்னை துரைத்தனத்தார் அங்கீகாரம் பெற்றுள்ளதாகையால் ஸ்கூல்களில் பாடப் புத்தகமாக வைக்கலாம். விலை ரூபா 1-4-0 தான்.

## ஈமான் மூலக்கொள்கை
### (2-ம் பதிப்பு)

இஸ்லாத்தின் மூலக்கொள்கையாகிய ஈமானைப்பற்றி நவீன விதத்தில் விளக்கிக் காட்டி எழுதப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் மூலக் கொள்கைகள் எவ்வாறு உலகத்தில் நித்திருக்கின்றனவென்று அழகாக எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன. விலை அணா 6 தான்.

## இஸ்லாம் சித்திரப்படங்களுடன் (4-ம் பதிப்பு)

இந்நூலில் முஸ்லிம்கள் அநுஷ்டிக்க வேண்டிய மஸ் அலாக்களும் ஐந்து கட்மை

களின் தத்துவார்த்தங்களும் அவற்றின் நடைமுறைகளும், தொழுகையில் ஓதும் எல்லா அரபு உச்சரிப்புக்களும் அவற்றின் அர்த்தமும், தொழும் விதங்களை விளக்கிக் காட்டும் சித்திரப்படங்களும், இறுதியில் தொழுகையில் ஓதக்கூடிய சிறு ஸூராக்கள் கால் ஜுஜ்ஊ வரையில் அதன் அர்த்தம் வியாக்யானம் முதலியவைகளுடன் மிக விளக்கமாக எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அவசியமானது. இந்நூல் ஒன்று கையிலிருந்துவிட்டால் வேறு பெரிய கிரந்தங்களின் அவசியமிராது. உடனே எழுதுங்கள் விலை ரூபா 1 தான்.

## முஹம்மது நபி ஸல் (2-ம் பதிப்பு)

(துரைத்தனத்தார் அங்கீகாரம் பெற்றது)

தமிழ் நாட்டின்கண் பள்ளிக்குச் செல்லும் முஸ்லிம் சிறுவர்களுக்கு இஸ்லாத்தைப்பற்றியேனும் இதன் திரு நபியைப் பற்றியேனும் உள்ளபடி தெரிந்துகொள்ளு

தற்கு ஒன்றும் தமிழில் உபாயமில்லாமலே இருந்து வருகிறது. ஆகையாலவர்களின் உபயோகத்துக்கென்று இந்நூல் தையாரிக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்கள் சிறுமிகளுக்காக எளிய நடையிலும் பெரிய எழுத்திலும் மிக விளக்கயாக அச்சிடப்பட்டுள்ளது. ஆகையால் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் மத்ரஸாக்களுக்கும் வாங்கிக் கொடுத்துச் சிறுவர்களைப் படிக்கச் செய்வது பெற்றோர் கடமையாகும். உங்கள் பிள்ளைகள் ஹிந்துக்களால் எழுதப்படும் நூல்களை வாங்கிப்படித்துக் கெட்டுப் போகாமல் தடுப்பது உங்கள் முதற்கடமை யல்லவா? இதன் விலையோ அதி சொற்பம். அணு 4 தான். வேண்டுவோர் 5 அணு ஸ்டாம்பு அனுப்ப.

## இஸ்லாம் எப்படிச் சிறந்தது?

இது புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய ஸிராஜுல் இஸ்லாம் என்னும் நவ் முஸ்லிமால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட புத்த

# 73, தம்புசெட்டித் தெரு, சென்னை

கத்தை முதற்பாகமாக மொழி பெயர்த்தும், 2-ம் பாகமாக "இஸ்லாமும்" ஏனை மதங்களும், 3-ம் பாகமாக இஸ்லாத்தின் நோக்கமென்ன? வென்று சேர்த்தும் ஆக மூன்று பாகங்களாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதைப் படிப்பதால் ஏனை மதங்களைவிட இஸ்லாம் எப்படிச் சிறந்ததென்பதை மிக விளக்கமாகத் தெரிந்துகொள்ளலாம். இதர மதஸ்தர்களுடன் அடிக்கடி பேச நேரும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இந்நூல் அத்தியாவசியமாகும். விலை அணு 14 தான்.

## ஆரியக்கொரு வெடிகுண்டு

(2-ம் பதிப்பு)

"சத்தியார்த்தப் பிரகாச"த்தைத் தமிழில் வெளியிட்டு நம் முஸ்லிம்களின் மனத்தை அவர்கள் புண்படுத்தி விட்டார்கள். இதற்கு வேண்டிய மறுப்பு நூலானது நமது "ஆரியருக்கொரு வெடி குண்டே" யாகும். இதில் 236 பக்கங்களும், முன்

னுரை, இஸ்லாமும் கத்தியும், வேதங்க ளின் அக்கிரமம், தயானந்தரின் சொல்லும் செய்கையும், அல் முஹ்றமல் (வீணைது), வியபிசார மன்று ஆனல் நியோகம், வேத ங்களின் துர்ப்போதனை, வேதங்களைப்பற் றிய குருபால் சிங்கின் அபிப்பிராயம். அனுபந்தம் - 1 வாமமார்க்கம், அனுபந் தம்-2 மத தாராளம் (குர்ஆனும் வேதங் களும்) அனுபந்தம்-3 இஸ்லாத்தின் மீது படுதூறு என்னும் விஷயங்களும், தயானந் தரின் ஞானுசிரியரான சுவாமி விரஜானந் தின் படமும் காணப்படுகின்றன. இதைக் கையிலெடுத்தால் நிச்சயமாக ஆரிய சமாஜி கள் ஓட்டம் பிடிப்பார்களென்பது திண் ணம். இதைக் கண்ட ஆரியர்களும் பதில் சொல்ல முடியாமல் விழித்துக்கொண்டிரு க்கின்றனர். ஒவ்வொரு முஸ்லிமுக்கும் தன் னைத் தற்காத்துக் கொள்ளுதற்கு இந்நூல் அவசியமாகும். விலை அணு 12.

73, தம்புசெட்டித் தெரு, சென்னை

## ஆரியசமாஜிக் கர்ப்பணம்

"ஆரியருக்கொரு வெடிகுண்டு" என்னும் பாம் புஸ்தகத்தைப்போல் இதுவும் ஆரிய சமாஜிகளின் வாயை அடக்குவதற்குப் போதிய நூலாகவே அமைந்திருக்கிறது: இஸ்லாத்தில் பிறந்து, பீ. ஏ. பட்டம் பெற்றுப், பிறகு சிரத்தானந்த சூழ்ச்சியால் ஆரிய சமாஜத்தைத் தழுவி, அதிலும் பெரியதோர் தலைவராய் விளங்கி, அம்மார்க்கத்தின் அந்தரங்க ஊழல்களை யெல்லாம் அதிகமாகத் தெரிந்துகொண்ட பிறகு தீனுல் இஸ்லாத்தைத் தழுவியிருக்கும் காஜீ மஹ்மூத் தாம்பால் என்பவரால் உர்து பாஷையில் எழுதப்பட்டிருக்கும் குப்ர்தோடென்னும் அழகிய நூலின் தமிழ்மொழி பெயர்ப்பாகும் இது. இதன் முன் ஆரிய சமாஜிகளெல்லாம் இடியோசை கேட்ட சர்ப்பத்தே போல் அடங்கி ஒடுங்கி விடுவார்க ளென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. இதில், அந்தகாரக் காரிருள், ஜீவ

விடை, உயிரற்ற ஆதாரம், உடையற்ற உருவம், முக்தியடைதல், கண்ணியமிக்க எஜமாட்டி, ஏசல்மாலே, திருச்சபை கூட்டல், நெய்யின்கணக்கு, உண்மையின் உரைகல், யோனிச் சக்கரம், ஈடேற்றம் பெறுதல், இறுதித் தீர்மானம் ஆகிய விஷயங்களெல்லாம் விளக்கப்பட் டிருக்கின்றன. ஆரிய சமாஜத்தின் அக்கிரமத்தை யெல்லாம் அடியோடு அறிந்துகொள்ள விருப்பமுள்ள அனைவரும் இதனை வாங்கிப் படித்தல் வேண்டும். இதைக் கையிலெடுத்த பிறகே இதன் அருமையையும் பெருமையையும் அறிந்துகொள்ளப் போகிறீர்கள். இதன் விலே ரூபா 1.

## இயேசுவின் இரகசியம்

இஸ்லாத்தைத் தாக்கி எழுதிய கிறிஸ்தவப் பாதிரிமார்களின் 14 வினாக்களுக்குத் தக்கவிடை இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. குர்ஆனிலிருந்தும் பைபிளிலிருந்தும் போதுமான ஆதார ஆதேயங்கள் காட்

டப்பட்டிருக்கின்றன. கிறிஸ்தவர்களின் வாய் அடங்கும்படியான சரியான கடாவுதல் இதில் கூறப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவருடன் மல்லாடும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஏனையோருக்கும் இது அத்தியாவசியமானது. கிறிஸ்தவர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறத் தெரிந்துகொள்வதுடன் முஸ்லிம்கள் அறிந்துகொள்ளவேண்டிய பல நுண்ணிய விஷயங்களும் இதில் பொதிந்து கிடக்கின்றன. குர்ஆன் ஆயத்துக்களை அரபியிலேயே எழுதி அதற்கு அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலின் இது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமானதென்றே உறுதியாய்க் கூறுவோம். எம்மிடம் விற்பனைக்குத் தையாராயிருக்கிறது. விலை ரூபா 1—8—0.

## முஹம்மதியலா

இது நெல்லிக்குப்பம் காலஞ்சென்ற மௌலவீ அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களால் ஹிந்தி பாஷையிலிருந்து தமிழில்

மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதில முஸ்லிம்களின் பாக விவரங்கள் முழுதும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதுடன் ஆங்காங்கு வாரிஸ்களுக்கும் பாகம் பிரித் துக் காட்டும் மாதிரி ரூபங்களாக நமூனைக் களும் அவற்றின் வியாக்கியானங்களும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. ஸிவில் கோர்ட்டில் பாக வியாஜ்ஜியம் செய் பவர்கள் தங்களுக்கு இன்ன இன்ன வகையில் பாக பாத்தியம் உண்டென்ப தைத் தெரிந்துகொள்வதற்கும், தாவா சொ த்தில் தங்களுக்கு இவ்வளவு பூாகம் சேர வேண்டு மென்பதைத் தெரிந்து பிராதில் அதைச் செப்புவதற்கும், அதற்கு ஒற்றுமை யான வம்ச வழியை வரைந்து பிராதில் சேர்ப்பதற்கும் உற்ற வழிகளை யெல்லாம் இந்த முஹம்மதியலாவிலிருந்து தெரிந்து கொள்ளலாம். வக்கீல்கள் தங்களுடைய முஹம்மதிய கக்ஷிக்காரர்களின் பாக விவ ரங்களை நன்றாய்த் தெரிந்துகொள்வதற்கு

73, தம்புசெட்டித் தெரு, சென்னை

இந்த முஹம்மதியலா அவர்களுக்கு மிக்க அனுகூலமா யிருக்குமென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. சொற்ப பிரதிகளே அச்சாயிருப்பதால் தேவையுள்ளவர்கள் முந்திக் கொள்வார்களாக. விலை அணா 14 தான்.

## நாயக வாக்கியம் 451

### (3-ம் பதிப்பு)

நபிகள் நாயகம் அருளிய வாக்கியங்களுள் (ஹதீதில்) 451 ஹதீதுகளைப் பொறுக்கி மேற்கண்ட பெயருடன் பாக்கெட் ஸைஸில் பிரசுரித்துள்ளோம். இதைப் படிப்பதால் நாயக வாக்கியங்களைத் தாய் பாஷையாகிய தமிழில் மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். அழகிய காலிகோ பைண்டு கட்டப்பட்டுள்ளது. விலை அணா 14 தான். மேற்கண்ட ஹதீது ஷரீபு தமிழறியாத முஸ்லிம் பெண்களுக்கென்று அரபுத் தமிழிலும் அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 1—4—0 தான்.

## தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை

### மறு கமலம்

இந்நூலில் உபயோகமான 12 வியாசங்கள் அடங்கியுள்ளன. இதைப் படிப்பதால் இஸ்லாத்துக்கும் இதர மதங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் நன்குபுலனாகும். இஸ்லாத்தின் பல தத்துவங்களும் விளக்கப்பட்டுள்ளன. விலை அணா 8 தான்.

### முஸ்லிம்களின் முன்னேற்றம்

ஆபிரிக்காவின் உட்பிரதேசத்தில் உலகத்துக்குத் தெரியாமல் ஸென்னூஸிகளென்னும் ஒருவகை இரகசியக் கூட்டத்தார் எவ்வாறு இஸ்லாத்திற்கு வேண்டிய காரியங்களை அந்தரங்கமாகச் செய்து வருகிறார்களென்னும் புண்ணிய விஷயமும் இதில் காணப்படும். விலை அணா 6 தான்.

### ஜுபைதா அல்லது பழிக்குப் பழி அணா 4.

2-138